Registered as a Newspaper

88 A/L
Paper Class
(Sat & Sun)
ஆரம்பமாகிவிட்டது
Physics - Mr Varnam
Chemistry - Mr. Thillainathan
Botany - Mr. Kugatharan
Zoology - Mr. Naganathan
New Master Institute
241, Navalar Rd, Jaffna.

# சஞ்சீவி

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

விலை ரூபா 2-50

88 A/L
Paper Class
(Sat & Sun)
9. 30 - Botany
10. 30 - Zoology
11. 30 - Chemistry
12. 30 - Physics
New Master Institute
241, Navalar, Rd. Jaffna.

மலை: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 6 உ. சனிக்கிழமை ஹிஜ்ரி 1408 றஜபு பிறை 29 (19—03 1988) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 03

## கருத்துக் கலசம்

மயூரா

### தவறும் தப்பும்

மனிதன் எவனும் பூரணத்துவமானவனாக இருப்பதில்லை. அப்படியாகிவிட்டால் அவன் தெய்வமாகிவிடுவான். மகாத்மாக்கள், ஞானிகள், ரிஷிகள் கூடத் தவறு இழைப்பது உண்டு. ஆகவே மனிதன் தவறு விடுவது என்பது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

ஆனால் —

தவறு இழைக்கிறோம் எனத் தெரிந்து கொண்டும் சிலர் தப்புச் செய்வார்கள். செய்வது தவறு என உணராது தப்புப் பண்ணுவோரும் இருப்பர். தவறு செய்ய வேண்டும் என நினைத்துச் செய்வோரும் உளர்.

எனவே தவறு செய்வதிலும் தப்புப் பண்ணுவதிலும் பல வகையினர், பல ரகத்தினர் உள்ளனர்.

அதே போலத் தான் தப்புகளும் தவறுகளும் பல விதம். சந்தர்ப்பசூழ்நிலைகளால் செய்யப்படும் தவறு ஒரு வகை. வேண்டுமென்றே செய்யப்படும் தப்பு இன்னொருவிதம்.

தப்பு எதவாக இருந்தாலும், தப்புச் செய்தவர் யாராக இருந்தாலும், எந்த நிலையில் தப்பு இழைக்கப்பட்டிருந்தாலும் அதனை திருத்திக் கொள்ள நினைப்பவன் நல்லவன். திருந்தி நடந்து கொள்பவன் சிறந்தவன். திருந்த விரும்பாதவன், திருந்தாமல் தொடர்ந்தும் தவறு செய்பவன் தீயவன்.

தனி மனித வாழ்வில் தவறு விடுபவன் திருந்திக் கொண்டால் சமூகப் பாதிப்புக் குறைவு. தனி மனிதர் ஒவ்வொருவரும் திருந்தி நடப்பதற்கு, விட்ட தவறை மீண்டும் செய்யாதிருக்க நினைக்காவிடில் சமூகம் கெட்டுவிடும்.

தனி மனிதனைத் தாண்டி சமூகத்தைத் தாண்டி—

நாட்டின் அரசியலில் தவறுகள் இழைக்கப்பட்டால் சரித்திரம் வேறுவிதமாக மாறி, ஆக்கங்கள், அநியாயங்கள் மலிந்து விடும்.

அரசியல் வாதிகள் தாம் விடும் தவறுகளைப் பிற்காலத்தில் உணர்ந்து சொன்னால் கவலைப்படுவது உண்டு. ஆனால் அதனால் பயனில்லை. தவறுகளைத் தொடர்ந்து இழைத்துக் கொண்டு கவலை தெரிவிப்பதில் ஏது பயன்?

தவறுகளைச் செய்துவிட்டு, அதனை உணர்ந்து கொண்டதாகக் காட்டுவதில் அல்லது சொல்வதில் பயனில்லை. அவர்கள் இனியாவது தவறு விடாமல், திருந்தி நடக்க மனம் கொள்ள வேண்டும்.

இது மக்களுக்கும் பொருந்தும்; மக்கள் தலைவர்களுக்கும் பொருந்தும்.

தடைப்பட்ட 1987 ஜீ. சி. ஈ. (சாதாரணம்)

# பதில் பரீட்சை இல்லையேல் சாத்வீகப் போராட்டம்!

## இந்தியக் குழுவுக்கு எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 19

1987 டிசம்பரில் தடைப்பட்ட ஜீ. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை விரைவில் நடத்தப்படவேண்டும்.

இல்லையேல் பெரியளவிலான சாத்வீகப் போராட்டங்களை நாமே முன்னின்று நடத்தவேண்டிய நிலை ஏற்படும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் சேதங்களை மதிப்பிட வந்த இந்திய அதிகாரிகள் குழுவிடம் யாழ். பிரசைகள் குழுக்களின் இணைப்புக் குழு உறுப்பினர்கள் இவ்வாறு இடித்துரைத்தனர்.

இந்தியக் குழுவும் இணைப்புக்குழுவும் சந்தித்த போது இந்த நிலைமை இந்திய அதிகாரிகளிடம் விளக்கப்பட்டது.

தடைப்பட்ட ஜீ சி ஈ. சாதாரணதரப் பரீட்சை உடன் நடத்தப்பட வேண்டும்.

இதனை கல்வியமைச்சுக்கோ, பரீட்சைத் திணைக்களத்துக்கோ எந்த வித பிரச்சினையும் ஏற்படப்போவது இல்லை.

பரீட்சை நடத்தப்படாவிட்டால் மாணவ சமுதாயத்தின் வாழ்க்கை ஒருபடி பின்தள்ளப்படும் என்று இணைப்புக் குழு தெரிவித்தது.

அதற்குப் பதிலளித்த இந்திய குழுவினர், திருடிக்ஸிற் இலங்கை திரும்பியதும் இதற்கு ஒரு சாதகமானபதில் கிடைக்கக்கூடும் என நம்பிக்கை தெரிவித்தனர். (ஒ-7)

## இரவு நேரத்தில் மீன் பிடிக்கத் தடை

யாழ்ப்பாணம் மார்ச் 19

இரவில் மீன் பிடிப்பதற்கு இந்திய அமைதிப் படையினரால் மீண்டும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இனிமேல் காலை ஆறு மணி முதல் மாலை ஆறு மணி வரை மீன் பிடிக்க அனுமதிக்கப்படும். இலங்கைக் கடற்கரையில் இருந்து ஐந்து மைல் தூரத்திற்குள் மட்டுமே மீன் பிடிக்கமுடியும்.

அதற்கும் இந்திய அமைதிப்படையினரிடம் அனுமதிச் சீட்டு (பாஸ்) பெறவேண்டும்.

அந்தந்த பகுதி மீனவர்கள் அருகில் உள்ள இந்திய அமைதிப்படைப் பொது நலத்துறைப் பிரி

(10ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மின் தடை

### காலை 8 முதல் பி.ப. 4 வரை

யாழ்ப்பாணம் மார்ச் 19

யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சகல மின் அத்தியட்சகர் பகுதிகளிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை மின் தடை ஏற்படும்.

சுன்னாகம் மின்சார நிலையத்திலுள்ள 132 கே. வி. கிறிட் உபநிலையத்தின் திருத்த வேலைகள் காரணமாகவே இந்த மின்தடை ஏற்படுகிறது.

சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை

(10-ஆம் பக்கம் பார்க்க)

ஈழத்தமிழர் ஒற்றுமைக்கான அணி

## ராஜீவுக்கு மகஜர்

புதுடில்லி, மார்ச் 19

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அவசரகாலச் சட்டம் இன்னமும் அமுலில் இருப்பது. சுமார் 1,600 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படாமல் இருப்பது ஆகியனதான் சமாதான ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தத் தடங்கலாக உள்ளன.

இப்படிச் சென்னையில் இருந்து இயங்கும் ஈழத்தமிழர் ஒற்றுமைக்கான அணி, பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பிய மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒப்பந்தத்தில் குறிப்பிட்ட பொது மன்னிப்புத் திட்டத்தின் கீழ் 1600 தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டிருக்கவேண்டும் ஆனால் அப்படி

(10ஆம் பக்கம் பார்க்க)

## அமைதிப் படையும் ஸ்ரீலங்கா இராணுவமும் கூட்டாக இயங்கா

### நட்வர்சிங் மறுப்பு

புதுடில்லி, மார்ச் 19

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் இந்திய அமைதிப் படையுடன் ஸ்ரீலங்கா இராணுவம் கூட்டு நடவடிக்கையில் ஈடுபடும் என்ற செய்தியை இந்திய வெளியுறவு இணை அமைச்சர் நட்வர்சிங் நேற்று மறுத்தார்.

இந்திய ராஜ்ய சபாவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் இணை அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய அமைதிப் படையுடன் ஸ்ரீலங்கா இராணுவம் கூடு நடவடிக்கையில் ஈடுபடும் என்று இந்தியப் பத்திரிகைகள் சில வெளியிட்ட செய்தி பற்றி எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பிரஸ்தாபித்து கண்டனமும் தெரிவித்தனர்.

அமைச்சர் பேசுகையில் பத்திரிகைச் செய்திகளை மறுத்தார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:

''இந்திய — இலங்கை ஒப்பந்தத்துக்கு முரணாக இந்தியா நடக்காது.

என்றும் தயார்

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுக்கள் நடத்த இந்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இன்று சாவகச்சேரியில் உண்ணாவிரதம்

சாவகச்சேரி, மார்ச் 19

தென்மராட்சி அன்னையர்கள் இன்று சனிக்கிழமை சாவகச்சேரி வாரிவனநாத சிவன் கோவிலில் உண்ணாவிரதம் மேற்கொள்கின்றனர்.

தடைப்பட்ட ஜீ சி ஈ பரீட்சையை நடத்த வேண்டும், இந்திய அரசு விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தையை மேற்கொண்டு சமாதானம் நிலவச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தும் முகமாகவே இந்த உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-31)

## அம்பாறை மாவட்டத்தில் 14 சிங்களவர்கள் கொலை

கொழும்பு, மார்ச் 19

அம்பாறை மாவட்டத்தில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றில் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாதவர்கள் புகுந்து 14 சிங்களவர்களைக் கொன்றனர்.

வாள், கத்தி போன்றவற்றால் வெட்டியும், தடியால் அடித்தும் இவர்கள் கொல்லப்பட்டதாகத் தெரியவருகிறது.

கொலையுண்டவர்களில் ஏழுபேர் பெண்கள்; ஐவர் குழந்தைகள்.

படுகாயமடைந்த எட்டுப்பேர் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மிக ஆபத்தான நிலையில் இருந்த மூன்று பேர் கண்டி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இப்படுகொலைக்குத் தாங்கள் பொறுப்பு அல்ல என்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்துள்ளதாக பி பி. சி நேற்று மாலை அறிவித்தது.

இச்செய்தியை பி பி சி. கொழும்புச் செய்தியாளர் ஜோன் ரெட்டி அனுப்பியிருந்தார்.

இக்கொலைகள் பற்றி எமது இயக்கம் மீது வீண் பழி சுமத்தப்படுகின்றது. இயக்கத்துக்குக் களங்கம் கற்பிக்கும் வேலையாகும் இது— இப்படி புலிகள் இயக்கம் மேலும் தெரிவித்ததாக பி பி சி செய்தியாளர் ஜோன் ரெட்டி தெரிவித்தார். (ஒ-எ)

## 492 அகதிகள் தலைமன்னார் புறப்பட்டனர்

சென்னை, மார்ச் 19

111 குடும்பங்களைச் சேர்ந்த 492 இலங்கைத் தமிழ் அகதிகள் நேற்று இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னார் போய்ச் சேர்ந்தனர்.

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் இவர்கள் தமிழ் நாட்டில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## யாழ் நகர் தொடர்ந்து நேற்றும் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

நேற்றும் யாழ்நகரில் கடைகள் மூடப்பட்டு வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. சனநடமாட்டமும் மந்தமாகவே காணப்பட்டது.

வாகன சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன.

வங்கிகள், பாடசாலைகள், ரியூட்டரிகள், மினி திரையரங்குகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன. (ஒ-7-9-10)

## ஆஸ்பத்திரியிலிருந்து வாபஸாகி விட்டனர்

யாழ்ப்பாணம் மார்ச் 19

யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த அக்டோபர் மாதம் முதல் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இந்திய அமைதிப்படையினர் தற்பொழுது வாபஸ் பெறப்பட்டுள்ளனர்.

யாழ் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் நோயாளர்கள் பார்வையாளர்கள் தற்பொழுது சோதனைக்கு உள்ளாக்கப்படுவதில்லை.

ஆஸ்பத்திரி 10ஆம் வார்ட்டில் இருந்த அமைதிப் படையினரும் அங்கிருந்து வாபஸ் பெற்றுவிட்டனர்.

கடந்த வருடம் அக்டோபர் மாதம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை சொல்கிறது இப்படி!

கொழும்பு, மார்ச் 19

கிழக்கு மாகாணத்தில் உள்ள சிங்கள, முஸ்லிம் பகுதிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் இந்திய அமைதிப் படையும், இலங்கை இராணுவமும் ஒத்துழைக்கும்.

இதற்கான ஏற்பாடுகளை இந்திய இலங்கை இராணுவ அதிகாரிகள் செய்கின்றனர் என்று இலங்கை வானொலி நேற்று இரவு அறிவித்தது. (அ-எ)

## அமைதிப் படையின் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 19

கடைகளைத் திறக்குமாறு இந்திய அமைதிப் படை சகல கடைச் சொந்தக்காரர்களுக்கும் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது சம்பந்தமாக அவர்கள் உத்தியோக பூர்வமாக வெளியிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:—

கடைகளை மூடுவதற்கும், தமக்கும், எவ்வித தொடர்புமில்லை என்று தமிழீழ விடுதலைப்புலிகள் இம்மாதம் 17ஆம் திகதிய 'உதயன்' மூலம் அறிவித்திருப்பதால் பொதுமக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தாமல் இருக்கும் பொருட்டு சகல கடைச் சொந்தக்காரர்களையும் தமது கடைகளைத் திறக்குமாறு இந்திய அமைதிப் படை வேண்டிக்கொள்கிறது. (அ)

## நாளை சந்நிதி ஆலய மகா கும்பாபிஷேகம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறும்.

ஸ்ரீலங்கா படையினரின் இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து கடந்த சில வருடங்களாக சந்நிதி ஆலயத்தில் பூசைகள் எதுவும் நடைபெறவில்லை.

இதன் காரணமாக ஞாயிறு நடைபெறும் கும்பாபிஷேகத்தில் பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் முருகனை வழிபட கூடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை ஸ்ரீலங்கா இராணுவத்தினால் சேதமாக்கப்பட்ட சந்நிதி முருகன் ஆலயத்தின் சகல திருத்த வேலைகளையும் இந்திய அமைதிப் படையினர் செய்து வருகின்றனர். (ஒ 160)

## சுபநேரம்

19 - 03 - 1988
பங்குனி 6
சனிக்கிழமை

சுபநேரம்:
3. 18 முதல் 4 . 48 வரை

ராகுகாலம்:
9 18 முதல் 10.48 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## பயிற்சிப் பரீட்சை

எமது நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு இருந்த பயிற்சிப்பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களினால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இம்மாதம் 19, 20, 26
ஆகிய திகதிகளில் நடைபெற இருந்த பாடங்கள் முறையே
ஏப்ரல் 1, 2, 3
ஆகிய திகதிகளில் நடைபெறும்.

Examination Unit
Universal
KANTHARMADAM, JAFFNA.
(2087)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## தேவை

வங்கியில் வேலைசெய்யும் இருவரைக்கொண்ட ஒரு குடும்பத்திற்கு யாழ் மாநகர எல்லைக்குள் ஒரு பகுதி வீடு அல்லது ஒரு முழுவீடு தேவை விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர் இல-95 உதயன், யாழ்ப்பாணம். (2074)

குலோபல் பேற் வேர்ஸ் 149 முஸ்லிம் கல்லூரி வீதி சோனகத்தெரு, யாழ்ப்பாணம் பேற், கிறில், வெல்டிங்வேலை செய்வதற்கு நல்ல அனுபவம் உள்ள வேலையாள் தேவை சம்பளம் நேரில் பேசிக் கொள்ளலாம். உடன் நேரில் வரவும். யழ்குடா நாட்டில் வசிப்பவர் விரும்பத்தக்கது (1985)

## விற்பனைக்கு

வெளி வந்து விட்டது! சமூகக் கல்வி ஆண்டு 11 (புதிய பாடத்திட்டம்) ஆசிரியர் ந. தர்மபாலன், சகலபுத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். (1938)

### ரேனிபோ

கிளின்- கட் உங்களை என்றும் வரவேற்கின்றது ரேனிபோ வேலைகளுக்கு என்றும் நீங்கள் நாடும் இடம்: கிளின் - கட் இல 239 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்.

### மணப்பந்தல்

32 வயதுடைய யாழ் உயர்வேளாளகுல சைவ ரோசன பட்டதாரி ஆசிரியைக்கு அரச உயர் தொழில் புரியும் 32-40 வயதுக்குட்பட்ட சைவ போசன மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றார்கள். தொடர்பு உதயன் விளம்பர இல. 92. (1965)

## சேவை

கலர் பிலிம் சுருள்களை கொம்பியூட்டர் மூலமாகக் கழுவிப் பிறிண்டிங் செய்வதற்கும், மீண்டும் 24 மணித்தியால சேவை செய்வதற்கும் தொடர்பு கொள்ளவும்; குயிக் ஸ்ராற் 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

யாழ். சைனீஸ் ரெஸ்ரோறன்ற் (முதலாம் குறுக்குத்தெரு) தினசரி காலை10மணிதொடக்கம் மாலை 6 - 30 மணி வரை திறந்திருக்கும் சைனீஸ் றோல்ஸ் புதன்கிழமைகளிலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் மட்டும் பெற்றுக் கொள்ளலாம். அல்லது முன்கூட்டி ஓடர் செய்தும் பெற்றுக் கொள்ளலாம். (1906)

### மணமகள் தேவை

நிரந்தர வதிவிட விசா பெற்று விரைவில் அவுஸ்திரேலியா செல்ல விரும்பும் யாழ் இந்து வேளாள குல தீய பழக்கங்களற்ற 32 வயதுப் பட்டதாரிக்கு அவுஸ்திரேலியாவிலிருக்கும் பெற்றோர் சகோதரர்கள் அதே குலத்தைச் சேர்ந்த தகுதியான மணமகளை எதிர்பார்க்கின்றனர். முழு விபரங்களுடன் விரைவில் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல 91, C/o உதயன். [1957]

### காணி விற்பனை

மூளாயில், மாவடி மூளாய் வீதியில் கூட்டுறவு ஆஸ்பத்திரி, அமெரிக்கன் மிசன் பாடசாலைக்கு அருகாமையில் ஆறுபரப்பு நிலம் விற்பனைக்குண்டு விபரங்களுக்குத் தொடர்பு: நா.சபாபதிநாதன், நில அளவையாளர், சித்தன்கேணி. (1953)

TYPEWRITER

அடடச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises. 39 / 17, Power House Road, 3rd Lane, Jaffna (1803)

### வகுப்புக்கள்

Radio, T V Air Conditioning Refrigeration, வயறிங், வெல்டிங், மோட்டார் மெக்கானிசம், வைண்டிங், Spoken English, Typing சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் ஆரம்பமாகின்றன. அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid Hall 328, நாவலர் வீதி, (ஆனைப்பந்திச் சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம் (1940)

### மணமக்கள் தேவையா?

எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள் மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம் (1981)

### பெண் ஆசிரியர் தேவை

ஐந்துவயது மாணவனுக்கு பயிற்சி கொடுப்பதற்கு சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் தெரிந்த 45 வயதுக்கு மேற்பட்ட தமிழ் அல்லது பறங்கிப்பெண் தேவை. சாப்பாடும், இருப்பிடமும் இலவசம். விரும்பும் ஊதியத்தை கடிதம்மூலம் தொடர்பு கொள்ளவும். திருமதி நாகரட்ணம், முஸ்லிம் பாடசாலைவீதி, முல்லைத்தீவு (1971)

### வாடகைக்கு

எம்மிடம் ரீயூப்லைட் செற் பூச்சரம், படங்கு. டெக்கரேஷன் சேவிஸ் வாடகைக்கு உண்டு. இல: 612/4 கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம் (2079)

# பிரயாண ஒழுங்குகள்

## சவூதி அரேபியா

### உடனடி வேலைவாய்ப்புகள்

1. பொறியியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | பாரமரிப்பு என்ஜினியர் (கப்பல் துறை) | 3000 SR - 4000 SR |
| 2. | மின்னியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 3 | இலத்திரனியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |
| 4. | குளிரூட்டியல் என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 5. | தொலைத்தொடர்பு என்ஜினியர் | 2000 SR - 2500 SR |
| 6. | இயந்திரவியல் என்ஜினியர் | 1800 SR - 2500 SR |

2. தொழில் நுட்பவியலாளர்கள்:

| | | |
|---|---|---|
| 1. | இலத்திரனியல் | 700 - 800 SR |
| 2 | தொலைத்தொடர்பு | 800 SR |
| 3 | கப்பல்துறை இயந்திர தொழிலாளர்கள் | 800 SR |
| 4 | கப்பல்துறை மின்னிணைப்பாளர்கள் | 800 SR |
| 5. | குளிரூட்டல் – தொழிலாளர்கள் | 800 SR |
| 6. | மின்பட வரைஞர் | 1000 - 1200 SR |
| 7. | கனரக வாகன திருத்தவியலாளர்கள் | 800 SR |

| | | |
|---|---|---|
| 3. | பாரந்தூக்கி இயக்குநர் | 700 - 800 SR |
| 4. | சுழியோடிகள் | 500 SR |
| 5. | மின்சுருள் சுற்றுபவர்கள் | 650 - 750 SR |
| 6. | குழாய் பொருத்துனர் | 500 - 650 SR |
| 7. | கூலியாட்கள் (வாகன சாரதி லைசென்ஸ் உடையவர்) | 350 + 100 SR |
| 8. | துப்பரவாக்கிகள் - கூலியாட்கள் | 300 + 100 SR |

எல்லா வகையினருக்கும் 3 வருட ஒப்பந்தம் + இலவச தங்குமிடம் + உணவு

சனி ஞாயிற்றுக் கிழமைகளில் நேர்முகப் பரீட்சை இருப்பதால் உடன் தொடர்பு கொள்க.

**K. லிங்கம்**
காளுவன் சந்தி,
சுழிபுரம்

**அ. தவச்செல்வம்**
காளுவன் சந்தி,
சுழிபுரம்.

# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா

| | (வயது) |
|---|---|
| ★ எயாப்போட் கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் | 21-40 |
| ★ ஹொட்டல் வெயிற்றர்ஸ் | 21-40 |
| ★ லேபரேர்ஸ் | 25-40 |

## ★ குவைத்

பெண்கள்--- 40 பெண்கள் உடனடியாகத் தேவை தையல் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

★ காமன்ஸ் (Garments)

இருபாலாரும் 18-35 வரை (தமிழ் முஸ்லிம் 20 - 3 - 1988க்குள் 5 படம் பாஸ்போட்டுடன் இங்கு தொடர்பு கொள்ளவும்.

## ★ குவைத்

ஆண்கள்: ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ் வயது 17இலிருந்து 45வரை

சலரி K.T. 30 டினார்.

2 மணித்தியாலம் மேலதிக வேலை

3 வருட ஒப்பந்தம்

சாப்பாடு தங்குமிடம், வைத்திய வசதி எல்லாம் இலவசம்.

மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் முகவரியிலுள்ள எமது காரியாலயத்துடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**யுனைற்றட் இன்ரநஷனல் ஏஜன்சி**
666, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமை)

# முக்கிய அறிவித்தல்

## இலங்கை மின்சார சபை

## மின் தடை

சுன்னாகம் மின்சார நிலையத்திலுள்ள (132 கே. வீ. கிறிட்) உபநிலையத்தின் திருத்த வேலைகள் காரணமாக 1988- 03- 20 ஞாயிற்றுக்கிழமை காலை 8 00 மணி தொடக்கம் மாலை 4 00 மணி வரை சுன்னாகம், காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, வேலணை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சகல மின் அத்தியட்சகர் பகுதிகளுக்கும் மின் விநியோகம் தடைசெய்யப்படும் என்பதை இத்தால் சகல மின் பாவனையாளர்களுக்கும் அறியத் தருகின்றேன்.

இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்காக இலங்கை மின்சார சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றது

மின் பொறியியலாளர்
யாழ்ப்பாணப் பிரதேசம்
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.
1988- 03- 16

# 24ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்:
21 - 02 - 1914
(கொல்லங்கலட்டி)



மறைவு:
25 - 02 - 1988
(கோப்பாய்)

## திருமதி சாரதாம்பாள் ஆறுமுகம்

எங்கள் வீட்டின் தலைவியாய் இத்தனை காலமும் வழிநடத்திய உங்களைக் காலன் எம்மிடமிருந்து பிரித்துவிட்டாலும், உங்கள் நினைவு எங்கள் மனங்களில் என்றுந் தங்கி நிற்கும், உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

பழைய ஆஸ்பத்திரி வளவு. கோப்பாய் தெற்கு, கோப்பாய் (1984)

கணவன், சகோதரன், மக்கள் மருமக்கள், போப்பிள்ளைகள் பீட்டன்.

*** வியாபாரம் பெருக விளம்பரம் செய்க ***

## தொலைக்கல்வி பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

தொலைக் கல்வியில் 1987 ஆம் ஆண்டு பயிற்சி பெற்ற அனைவருக்குமான பயிற்சி நெறி இன்று சனிக்கிழமை காலை 8. 30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இப் பயிற்சி நெறியில் முக்கிய விஷயங்கள் கலந்துரையாட இருப்பதால் அனைவரையும் தவறாது சமுகமளிக்கும்படி யாழ் கல்வித் திணைக்கள இணைப்பதிகாரி திரு. சி. புலேந்திரன் கேட்டுள்ளார். [இ-எ]

# ஆறும் திங்கள் நினைவஞ்சலி

தோற்றம்:
24-05-1939



மறைவு:
24-10-1987

## அமரர் அ. சி. சதாசிவம்

எங்கள் நிழலாக இனிதிருந்த எம்தலைவா!
உங்கள் உறுதுணையில் உயர்ந்த நினைவொளி!
மங்காதெம் வாழ்வினையே மலரவைக்கும்
-வேதியன்தாழ்
உங்கள் திரு ஆன்மா உய்வடைய
வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, மக்கள்
3, விக்ரோறியா வீதி,
யாழ்ப்பாணம். (2081)

# அறிவித்தல்

## சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம், காரைநகர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர், மீன்பிடி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற எமது வள்ளச்சாலை மீண்டும் படகு கட்டும் வேலைகளை ஆரம்பித்துள்ளது.

மானிய அடிப்படையில் 17½', 8' (3½ தொன்) மற்றும் இதர வள்ளங்களை மீனவருக்கு உற்பத்தி செய்து வழங்குவதற்கு எமது நிறுவனம் மட்டுமே இன்று வட பகுதியில் இயங்கி வருகின்றது

இப்படகுகளின் தொழில் நுட்பமும், தரமும் மீன்பிடி அமைச்சின் சிபார்சுக்கு அமைவாக உள்ளது. அனுபவம் வாய்ந்த தொழிலாளர்களைக் கொண்டு வாடிக்கையாளரின் தேவைக்கமைய வள்ளங்கள் விரைவில் அமைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

ஐம்பது (50%) வீத முற்பணம் செலுத்தி படகு உற்பத்திக்கான ஓடர் கொடுப்பவர்களுக்கு இரண்டு வாரத்துக்குள் வள்ளம் உற்பத்தி செய்து வழங்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

1. **பிரதிப் பொது முகாமையாளர்,**
   சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
   குருநகர்.
2. **உற்பத்தி முகாமையாளர்,**
   சீ-நோர் அபிவிருத்தி நிறுவனம்,
   காரைநகர்.

நன்றி
--- பிரதிப்பொது முகாமையாளர்

(1947)

# பிரயாண ஒழுங்குகள்

## ★ சவூதி அரேபியா ★ குவைத் ★ பஹாரின் ★ அபுதாபி ★ சிங்கப்பூர்

**குவைத்:**

| | | |
|---|---|---|
| 1. | பெ வீஸ் நிலைய கிளீனேர்ஸ் | சம்பளம் — 35 டினார் |
| 2. | ஆஸ்பத்திரி கிளீனர்ஸ் | சம்பளம் — 35 டினார் |

**சவூதி அரேபியா**

| | | |
|---|---|---|
| 1. | ஆஸ்பத்தரி கிளீனேர்ஸ் | சம்பளம் — 450 றியால் |
| 2. | எயர் போட் ரோலர் | சம்பளம் — 450 றியால் |
| 3. | L. V. சாரதி | சம்பளம் — 650 றியால் |
| 4 | H. V. சாரதி | சம்பளம் — 750 றியால் |
| 5. | சமையல்காரர் | சம்பளம் — 650 றியால் |

முக்கிய குறிப்பு :- முற்பணம் அறவிடப்படமாட்டாது. செவ்வாய் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை மணி 8-30 முதல் மாலை 4-30 வரை நிலையம் திறந்திருக்கும்.
ஏமாற்றத்தைத் தவிர்த்து நம்பிக்கையுடன் பிரயாணம் செய்ய இன்றே தொடர்பு கொள்ளவும்.
சுன்னாகம் கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்.

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு பணிப் பெண்களும் அனுப்பிவைக்கப்படுவர்.

தொடர்பு:-

**கோல்டன் ரவல்ஸ் & ரூர்ஸ்**

புகையிரத நிலைய வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செத்துப் போனவள்

### சஞ்சீவி சிறுகதை

- அகிலன் -

நான் அவளிடம் காதல் வெறிகொண்டிருந்தேன். எதற்காக நாங்கள் காதலிக்கவேண்டும்? எத்தனை பெரிய உலகத்தில் ஒரே ஒரு ஜீவனை மட்டும் பார்த்துக்கொண்டு, ஒரே ஓர் ஆசையை மட்டும் நெஞ்சில் வளர்த்துக்கொண்டு, ஒரேஒரு பெயரை மட்டும் மந்திரச்சொல் மாதிரி வாயில் உச்சரித்துக்கொண்டிருப்பது புதுமையிலும் புதுமை அல்லவா? அந்த ஒரு பெயருக்குத்தான் எத்தனை வலிமை! மலை உச்சியின் இருதயத்திலிருந்து குபுகுபுவெனப் பாயும் அருவியின் தொடக்கத்தைப் போல; ஆத்மாவின் அடித்தளத்திலிருந்தல்லவோ அந்த ஜீவமந்திரத்தின் இன்ப ஒலி துடிதுடிக்கிறது.

நான் எங்கள் கதையைச் சொல்லப்போவதில்லை. காதலுக்கு எப்போதும் ஒரே மாதிரிக் கதைதான். வேறு கதை கிடையாது. நான் அவளைச் சந்தித்தேன்; காதலித்தேன். அவ்வளவுதான். ஓராண்டு முழுவதும் அவளுடைய அன்பில், அணைப்பில், பார்வையில், பேச்சில், உடையில், உபசரிப்பில் கட்டுண்டு கிடந்தேன். முழுவதும் அவள் என்னை ஈர்த்துவிட்டாள். பகலா, இரவா, பூலோகமா, சொர்க்கலோகமா, நான் செத்துப்போனேனா, உயிரோடிருந்தேனா என்ற விவரங்கள் ஏதுமே எனக்குத் தெரியாது.

அவள் திடீரென்று இறந்துவிட்டாள். எப்படி? எனக்குத் தெரியாது; எனக்கு இப்போது ஒன்றுமே தெரியாது.

மழைபெய்த ஒருநாள் மாலை அவள் எங்கோ வெளியில் சென்றுவிட்டு, சொட்டச்சொட்ட நனைந்துகொண்டே வந்தாள். அடுத்தநாள் இருமினாள்; அப்புறமும் ஒரு வாரம்இருமிக்கொண்டே படுக்கையில் கிடந்தாள். என்ன நடந்தது? எனக்கு இப்போது தெரியாது.

வைத்தியர்கள் வந்தார்கள்; மருந்து கொடுத்தார்கள்; போனார்கள். அவளுடைய கரங்கள் நெருப்பாய்ச் சுட்டன. நெற்றிப்பொட்டுக்கள் பற்றிக்கொண்டு எரிந்தன. கண்களில் சோகமும் புத்தொளியும் ஒன்றாய்ப் பிரகாசித்தன. நான் அவளிடம் பேசினேன். அவள் பதிலளித்தாள். நாங்கள் என்ன பேசிக்கொண்டோம். எனக்கு இப்போது தெரியவில்லை. நான் மறந்துவிட்டேன். எல்லாவற்றையும். ஆம் எல்லாவற்றையுமே மறந்துவிட்டேன். அவள் இறந்தாள். அவளுடைய கடைசிப் பெருமூச்சை, பலவீனமான மெல்லிழை போன்ற அந்த கடைசிச் சலனத்தை, நான் கவனித்தேன். ஆ! அவள் போய்விட்டாள். எனக்குப் புரிந்து விட்டது; புரிந்துவிட்டது.

அப்புறம் ஒன்றும் எனக்குப் புரியவில்லை. சவத்தை அடக்கம் செய்வதற்காகச் சாமியார் வந்தார். ஏதேதோ கேட்டார். என்ன கேட்டார், என்ன சொன்னேன், ஒன்றும் தெரியவில்லை ஆனால் எனக்கு அவளுடைய சவப்பெட்டி நன்றாய் நினைவில் இருக்கிறது. அதற்குள்ளே அவளை வைத்து ஆணி அறைந்த அந்தச் சம்மட்டி அடியை என்னால் மறக்க முடியவில்லை. கடவுளே! எப்படி மறப்பேன்?

புதைக்கப்பட்டாள்; அவள் புதைக்கப்பட்டாள். என்னுடைய அந்த அவள்! பாழும்படு குழியில் அவள்! நண்பர்கள் வந்தார்கள்;போனார்கள் நான் வெளியில் புறப்பட்டேன் கால் போனபோக்கில் தெருவில் ஓடி அலைந்தேன். பிறகு களைத்து வீடுதிரும்பினேன். மறுநாளே வெளியூருக்குப் பயணமானேன்.

நேற்றுத்தான் திரும்பவும் பாரிஸ் நகரத்திலிருந்த என் வீட்டிற்கு வந்துசேர்ந்தேன்.

ஐயோ! திரும்பவும் எங்கள் படுக்கை அறைக்கா?— எங்கள் கட்டில், எங்கள் மெத்தை, எங்கள் பஞ்சணை, எங்கு பார்த்தாலும் செத்துப்போன அவளுடையஉயிர்த்துடிப்பை நினைவூட்டும் அழகுச்சின்னங்கள்! என்னால் தாங்க முடியவில்லை; தாங்கவே முடியவில்லை. அந்தமாடி அறையின் சன்னலைத் திறந்துகொண்டு தெருவில் விழுந்து சாகலாமா என்றுகூட நினைத்தேன். திரும்பிய பக்கமெல்லாம் அவள் இருந்தாள். அவளுக்குப் புகலிடமளித்த அந்த நாலுபுறச் சுவர்களுக்கு மத்தியில், அந்தச் சுவர்களின் பிளவுபட்ட வெடிப்புக்களின் இடைவெளியில், அவள் கண்ணால் காணமுடியாத உயிரணுக்களாக, சதையணுக்களாக, ரத்தத் துடிப்புக்களாகக் காட்சி கொடுத்தாள். நான் அந்த அறையைவிட்டு வெளியே ஓடிவந்தேன். வெளிக்கதவில் மோதிக்கொள்ள இருந்த சமயத்தில் அந்த நிலைக்கண்ணாடி என் கண்ணில் பட்டது.

அந்தக் கண்ணாடியை அவள் வெளிக் கதவோரத்தில் வைத்திருந்தாள். உறுதியான உயரமான கண்ணாடி. ஒவ்வொரு நாளும் வெளியே புறப்படும்போது ஒருகணம் அங்கே நின்று தன்னைச் சரிசெய்துகொள்ளாமல் போகமாட்டாள். உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரையில் தன்னைப் பார்த்துக்கொள்வாள்: அலங்காரம் சரிதானா? அழகாக இருக்கிறதா? மனதிற்குப் பிடித்திருக்கிறதா?

நான் அந்தக் கண்ணாடியின்முன் பிரேதமாய் நின்றேன். எத்தனைமுறை அவள்அழகை அது பிரதிபலித்திருக்கிறது? எத்தனை எத்தனை முறை? அப்படியே அந்தக் கண்ணாடி அவளைப் பிடித்துத் தனக்குள்ளே சிறை செய்துதான் வைத்திருக்கும்.

நான் அங்கேயே நின்றேன். கண்கள் நிலைகுத்திப்போய்க் கண்ணாடியில் பதிந்தன. தேகம் நடுங்கியது; வழவழப்பான அதன் மேற்பரப்பும், அதனூடே தெரிந்த அந்த ஆழமான வெளியும் இப்போது அவள் அங்கில்லாமல் சூனியமாய் இருந்தன. நான் அவளுடைய முழு உருவத்தையும் பற்றியிருந்ததுபோல், என் உள்ளம் அவளை அப்படியே ஏற்றுக் கொண்டதுபோல், என்கண்கள் ஆசையால் அவளை அணு அணுவாய் விழுங்கியதுபோல் அந்தக் கண்ணாடியும் செய்திருக்கிறது.

அந்தக் கண்ணாடியைத் தொட்டேன்; அது சில்லிட்டிருந்தது. ஐயோ நினைவே. பாழும் நினைவே! உயிர் கலந்த எங்கள் வாழ்வை இன்று பயங்கரமாய் எடுத்துக் காட்டும் இரக்கமற்ற நிலைக்கண்ணாடியே! உன்னைப்போல மனிதனுக்கு மனமிருந்தால் அவன் எத்தனை ஆனந்தமாக வாழ்வான்: உன் முன்னால் நின்று உற்றுப் பார்த்த காதற் பார்வைகளை, உணர்ச்சி நிறைந்த ஏக்கப் பெருமூச்சுக்களை, உன்பிடியில் அகப்பட்டு இன்பங்கண்ட அன்புருவங்களை நீ எவ்வளவு சுலபமாக மறந்துவிடுகிறாய்! கணநேரப்பொழுதில வழுக்கி மறையும்படி நீ விட்டுவிடுகிறாயே; மறந்தும் விடுகிறாயே! என் துக்கத்தை நான் எங்கு சொல்வேன்?

நான் வெளியில் போனேன்: ஒரு நோக்கமில்லாமல், விருப்பமில்லாமல், எங்கு போகிறேனென்று தெரியாமல் போனேன். கால்கள் என்னைச் சவக்குழிகள் நிறைந்த ஊரின் ஒதுக்குப்புறத்திற்குக் கொண்டுவந்து விட்டன. அவளுடைய சவக்குழியின் மேல் பளிங்குச் சிலுவை மின்னியது. சிலுவையில் செதுக்கப்பெற்ற அந்தவார்த்தைகள்!

''அவள் காதலித்தாள்; காதலிக்கப்பட்டாள் இறந்தாள்'' அவள் அங்கே, கீழே, அழுகிப்போன குவியலாய். புழுவரித்த கூடாய்க் கிடக்கிறாளே! என்ன கொடுமை! நான் கல்லறைமீது விழுந்து, அதில் முகம் பதியத் தேம்பித் தேம்பி அழுதேன். நேரம்போனது தெரியவில்லை. நன்றாய் இருட்டிக்கொண்டுவந்தது.

எனக்குத் திடீரென்று ஒரு விசித்திரமான ஆசை தோன்றியது; காதல் வெறி கொண்டவனை ஆட்டுவிக்கும் விபரீத ஆசை; நான் அந்த இரவை அவளருகில் கழிக்கவேண்டும். அதை எங்கள் கடைசி இரவாக்கிக் கல்லறையைக் கண்ணீரால் கழுவவேண்டும்; ஆனால் என்னைக் காவலாளி யாரும் பார்த்துவிட்டால் என்ன செய்வது? நன்றாக இருட்டுகிறவரையில் ஒரு பக்கம் மறைந்திருந்து. பின்பு என்காதலியிடம் வந்தால் என்னை யாரும் கவனிக்கமுடியாது.

நான் மறைந்துகொள்வதற்காக ஓரமாக நடந்தேன். இந்தச்சிறிய நகரம், செத்துப்போனவர்களின் நகரம், உயிரோடிருப்பவர்களின் நகரத்தைவிட எத்தனை சிறியது! ஆனால் உயிரோடிருப்பவர்களைவிட செத்துப்போனவர்களே பன்மடங்கு அதிகம். நாம் வாழ்வதற்கு நாலடுக்கு மாடிவேண்டும்; விசாலமான தெருக்கள் வேண்டும்; தீஞ்சுவைத் திராக்ஷை ரசமும், பல்வகை உணவுகளும் வேண்டும். இன்னும் காலைக் கதிரொளி, நீரோடையின் தெளிந்த தண்ணீர், மென்காற்று என்று எத்தனை எத்தனையோ தேவைகள் நமக்கு.

ஆனால் இறந்துபோன பரம்பரைக்கு, நாம் உலகம் தோன்றிய நாள் முதல் இதுவரை ஒதுக்கி வைத்திருப்பது, ஊரின் தேடுவாரற்ற ஒரு மூலை. மண் அவர்களை ஏற்றுக்கொள்கிறது; சூன்யம் அவர்களை உருக்குலைக்கிறது. அப்புறம் ஒன்றுமே இல்லை ஒன்றுமே இல்லை!



கடைசிக் கல்லறையின் பக்கத்தில் வந்தேன். நீண்ட நாளைக்கு முன்பு வந்தவரின் இருப்பிடம் போலும் பாழடைந்து இடிந்துபோய், நொறுங்கிக்கிடந்தது, விரைவில் நாளை மறுநாள் வருபவர்களுக்கு இடம் கொடுத்து அதுவும் புதுமை பெறக்கூடும். சுற்றிலும் காட்டு ரோஜாச் செடிகளும், தேவதாரு மரங்களும் கொழுத்து வளர்ந்திருந்தன. மனிதச்சதையை உண்டு வளர்ந்தபெருமை அவற்றின் மினுமினுப்பில் தெரிந்தது.

நான் தனியாக ஒரு பசுமரத்தின் பின்னால் மறைந்துகொண்டு நின்றேன். பின்பு, மரத்தில் ஏறிக் கிளையைப்பற்றிக்கொண்டு சற்று நேரம் இலை மறைவில் தொங்கினேன்; நன்றாக இருட்டிப்போனபிறகு மெதுவாய் இறங்கித் திருடன் போல் அடிமேல் அடி வைத்துநடந்தேன்.

மடிந்துபோனவர்களுக்கு மத்தியில் நீண்ட நேரம் அலைந்தேன். அவளைக் காணோம். எங்கே அவள்? அகல விரித்த கரங்களுடன், நன்றாய்த் திறந்த கண்களுடன் நான் அலைந்தேன். எதிர்ப்பட்ட கல்லறைகளில் நான் தட்டுத்தடுமாறி முட்டிக்கொண்டதுதான் மிச்சம்; முழங்காலில், முகத்தில், நெஞ்சில், கணுக்காலில் எங்கும் ஒரேவலி வழிதடுமாறிய குருடனாக நான் ஒவ்வொன்றையும் தொட்டுத் தொட்டுப் பார்த்தேன். கற்கள், சிலுவைகள், இரும்புக்கம்பிகள் வாடி உதிர்ந்த பூமாலைகள் அவள் பெயரைக் கண்டுபிடிப்பதற்காகக் கல்லறைகளின்மேல் விரல்களினால் தடவிப் பார்த்தேன். என்ன ஏமாற்றம்! என்ன இருட்டு! அவளைக் காணவில்லையே!

நிலவற்ற இருள் என் நெஞ்சைப்பற்றி உலுக்கியது. இருபுறமும் வரிசை வரிசையாகப் புதைகுழிகள். எங்கு பார்த்தாலும், வலதுபுறம், இடதுபுறம், முன்னால், பின்னால், சுற்றிலும், நெடுகிலும் நீக்கமற நிறைந்த புதைகுழிகள்! என்னுடைய முழங்கால் எலும்புகள் ஆட்டங்கண்டன; சோர்ந்து போய் ஒரு கல்லறையின் மேல் உட்கார்ந்தேன். பயங்கரமான இருளின் அமைதி. என்னுடைய நெஞ்சுத்துடிப்பே பெரிதாய் ஒலித்தது. அத்துடன் இன்னும ஏதோ ஒருசத்தம் என்ன அது? புரியாத குழப்பம் நிறைந்த சத்தம்? எங்கிருந்து வருகிறது இந்தச்சத்தம்? பயம்நிறைந்த என் மனத்திலிருந்த... உலகத்தையே விழுங்கிய இந்த இருளிலிருந்தா, மண்ணிலிருந்தா, விண்ணிலிருந்தா, அல்லது பிணங்களால் விதைக்கப்பெற்ற இந்த மண்ணின் அடித்தளத்திலிருந்தா? நான் சுற்றிலும் திரும்பிப் பார்த்தேன்.

ஆ! என்ன இது? பயத்தினால் அலறிச் செத்துப் போக இருந்தேன்.

திடீரென்று நான் உட்கார்ந்திருந்த கல்லறையின் மேற்பரப்பு நழுவுவதுபோல் தோன்றியது. உண்மையில் நழுவத்தான் செய்தது. உள்ளிருந்து யாரோ ஒருபுறமாய்ப் பிடித்து அதைத் தள்ளினார்கள். ஒரே தாவாய் நான் எதிர்த்தரையில் தாவி விழுந்தேன் சற்றுமுன் நான் உட்கார்ந்திருந்த கற்பலகை நேரே நட்டமாய் எழும்பி நின்றது அதற்குள்ளிலிருந்து எலும்புக்கூடு தன்னுடைய வளைந்த முதுகால் அந்த மூடியைத் தள்ளுவதைக் கண்டேன். இப்போது எனக்குக் கண் நன்றாகத் தெரிந்தது.

அந்தக் கல்லறையின் மேல் பொறிக்கப்பட்டிருந்த எழுத்துக்களைக் கவனித்தேன்:

''இங்கேதான் ஜாக் ஆலிவர் உறங்குகிறார். நல்ல மனிதர், யோக்கியர், மனைவி மக்களை உயிராக நேசித்தவர், ஐம்பத்தோராவது வயதில் அமைதியாகக் கர்த்தரின் திருவடி நிழலை அடைந்தார்.''

இப்போது அந்த எலும்பு மனிதன் அதை ஒருமுறை வாசித்தான். பின்பு அருகில் கிடந்த ஒரு கூர்மையான கருங்கல்லை எடுத்து அதை ஒன்றுவிடாமல் அழித்தான். பிறகு தன்னுடைய ஆள்காட்டி விரல் எலும்பால் அதே இடத்தில் வேறெதையோ எழுதினான். கரிய நிறச் சுவரில் நெருப்பால் எழுதிய எழுத்துக்கள் போல் அவை பளிச்சிட்டன:

'இங்கேதான் ஜாக் ஆலிவர் உறங்குகிறார். கெட்டமனிதர், அயோக்கியர், மனைவியைக் கொடுமைப்படுத்தி, மக்களைத் துன்புறுத்தி, அக்கம்பக்கத்தாரை ஏமாற்றியவர். இவருடைய சாவு துன்பம் நிறைந்தது.''

எலும்பு மனிதன்தான் எழுதுவதை நிறுத்தி, அசையாமல் நின்று அதைப் பற்றியோசித்தான். நான் சுற்றிலும் திரும்பிப்பார்த்தேன். என்ன விசித்திரம்! எல்லாக் கல்லறைகளும் திறந்திருந்தன. எல்லா எலும்புக்கூடுகளும் தங்கள் சொந்தக்காரர்கள் எழுதிவைத்த அழகான பெயர்களை அழித்துவிட்டுத் தங்கள் வாழ்வின் பயங்கரமான உண்மைகளை எழுதிக்கொண்டிருந்தன.

இருட்டில் ஒளியாகத் தெரிந்த உண்மைகளை கண்டேன் எல்லோருமே அயோக்கியர்கள்,ஏமாற்றுக்காரர்கள், திருடர்கள், பொய்யர்கள்,வஞ்சகர்கள், பொறாமைப் பேய் பிடித்தவர்கள் இவர்கள் அருமைத் தந்தைகளாம் உண்மைக் கணவர்களாம் ,உத்தம புத்திரர்களாம், கற்புக்கரசிகளாம். நாணயம் மிக்க நல்ல மனிதர்களாம்!

> தமிழ் நாட்டின் சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவரான அகிலன் சில மாதங்களுக்கு முன் காலமானார். அன்னாருக்கு அஞ்சலி செய்யுமுகமாக அவரது மொழி பெயர்த்த மாப்பசான் கதைகளில் ஒன்றை இவ்வாரச் சிறுகதையாகத் தருகிறோம்.

ஆத்மாவின் சூழ்நிலை பெற்ற அந்தச்செத்த மனிதர்கள் ஒரே நோக்கத்தோடு வாழ்வின் பயங்கரமான, கொடுமையான, தூய்மை நிறைந்த உண்மைகளை எழுதினார்கள். உயிர் வாழும் உலகர் உண்மைகளை ஒதுக்குவதுபோலும் மறைப்பதுபோலும், தெரிந்து கொள்ளாத மாதிரி நடிப்பதுபோலும் அவர்கள் செய்யவில்லை.

அவள்கூட உண்மையை எழுதுவாள் அல்லவா?

பயம் பறந்தது கல்லறைகளுக்கு மத்தியில், 'பிணங்களுக்கு மத்தியில், எலும்புக் கூடுகளுக்கு மத்தியில் நான் வெறிபிடித்து அவளைத் தேடி ஓடினேன் ஒளிப் பெருக்கில் அவளை விரைவில் கண்டுபிடித்துவிடலாம்.

தூரத்திலிருந்தே அவளைக் கண்டுபிடித்துவிட்டேன் புதுத்துணியால் மறைந்திருந்த அவள் முகந்தான் எனக்குத் தெரியவில்லை.

சற்றுமுன்பு, ''காதலித்தாள்; காதலிக்கப்பட்டாள்; இறந்தாள்'' என்று எழுதப்பட்டிருந்த அவளுடைய பளிங்குச் சிலுவையில் இப்போது வேறு எழுத்துக்கள் தெரிந்தன.

''தன் காதலனை ஏமாற்றி ஒருநாள் மழையில் வேறொருவனைத் தேடி வெளியேபோனாள். மழையினால் காய்ச்சல் வந்து இறந்தாள்''

அப்புறம் என்ன நடந்ததோ தெரியாது. என்னை அந்தப் புதைகுழி அருகிலிருந்து மறுநாள் காலை சுயநினைவு இல்லாத நிலையில் தூக்கி வந்தார்களாம்.

## கண்கள் அழகில் நனைகிறது

ஞாயிறு காலை உதிக்கிறது
ஞாலம் விழிப்புக் கொள்கிறது
கோயில் மணிகள் ஒலிக்கிறது
கோதை கமலம் சிரிக்கிறது

வான மங்கை ஜொலிக்கிறது
நாணம் கொண்டு சிவக்கிறது
தேனீ மலரைக் கூடுறது
தென்றல் சுகத்தை அளிக்கிறது

ஆவினம் கன்றை நாடிறது
அள்ளிப் பாலைச் சொரிகிறது
கூவிக் குயில்கள் இசைக்கிறது
குலவிப் புள்ளினம் களிக்கிறது

ஏரைக் காளை சுமக்கிறது
எங்கும் பனித்துளி சிலிர்க்கிறது
காலைக் கதிரின் உதயத்தில்
கண்கள் அழகில் குளிக்கிறது

- நெடுந்தீவு லக்ஸ்மன்

---

ரயில் பெட்டியினுள் அமர்ந்து இருந்த இரண்டு பெண்கள் யன்னலைத் திறப்பதைப் பற்றி ஆளை ஆள் திட்டிக் கொண்டிருந்தார்கள்.

நிலைமையைச் சமாளிக்க ரயில் கார்ட் வந்து சேர்ந்தார். விசாரிக்கத் தொடங்கினர்.

முதலாவது பெண்: பெட்டியின் யன்னலைத் திறந்தால் எனக்கு தடிமன், காய்ச்சல் வந்து இறந்து விடுவேன் யன்னலைப் பூட்டவேண்டும்.

இரண்டாவது பெண்: யன்னலை மூடிவிட்டால் எனக்கு மூக்குத் திணறி இறந்து விடுவேன்.

ரயில் கார்டுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

அருகில் இருந்த மனிதன் ஆலோசனை கூறினன்.

முதலில் யன்னலைப் பூட்டுங்கள். ஒரு பெண் இறந்து விடுவாள்.

பின்னர் யன்னலைத் திறந்துவிடுங்கள். ரண்டாமவள் இறந்து விடுவாள்.

பின்னர் நாம் நிம்மதியாகப் பயணம் செய்யலாம். — விஜே

# கம்பன் நடத்திய கயிறிழுப்புப் போட்டி

- டாக்டர்: சுந்தரசண்முகனார் -

கயிறு இழுப்புப் போட்டிகளைப் பலரும் பார்த்திருக்கலாம். எடுத்துக் காட்டாக, இருவர் பெயர்களை எடுத்துக் கொள்ளலாம். கண்ணன் ஒருவன்; கடம்பன் மற்றொருவன். கண்ணனுக்கும் கடம்பனுக்கும் கயிறு இழுப்புப் போட்டி நடப்பதாக வைத்துக் கொள்வோம்.

குறிப்பிட்ட ஒரு திடலின் தெற்குப் பக்கம் கண்ணன் நிற்கிறான்; அவன் எதிரே—வடக்குப் பக்கம் கடம்பன் நிற்கிறான். இருவரும் வன்மையான ஒரு கயிற்றின் முனைகளைப் பிடித்துக் கொண்டு இழுக்கிறார்கள். அதாவது கயிற்றின் ஒரு நுனி கண்ணன் கையிலும் மற்றொரு நுனி கடம்பன் கையிலும் உள்ளன. இருவரும் வலிமை கொண்ட மட்டும் எதிர் எதிர்ப் பக்கலை நோக்கி இழுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இருவரும் ஒத்த வலிமை உடையவராயின் கயிறு அறுபடும்; அல்லது, கயிறு அறுபடாமல் இருவரும் இருந்த இடத்திலேயே நின்று கொண்டிருப்பார்கள்.

கண்ணன் கடம்பனைக் காட்டிலும் மிக்க வலிமை உடையவனாயிருப்பின், கடம்பனை இழுத்துத் தன் பக்கம் போட்டுக் கொள்வான். கடம்பன் கண்ணனைக் காட்டிலும் மிக்க வலிமை உடையவனாயிருப்பின், கண்ணனை இழுத்துத் தன் பக்கம் போட்டுக் கொள்வான். இவற்றுள் ஏதாவது ஒன்றுதான் நடைமுறையில் நிகழக்கூடும்.

இவ்வாறின்றி, இருவரும் வன்மையுடன் கயிற்றை எதிர்—எதிர்ப் பக்கலில் இழுக்கும் போது, கண்ணன் கடம்பன் இருக்கும் இடத்திலும் கடம்பன் கண்ணன் இருக்கும் இடத்திலும் மாறிவந்து நிற்பார்கள் என்றால், அது மிகவும் வியப்பிற்கு உரியதல்லவா? இத்தகைய வியப்பைத்தான் கம்பர் காட்டும் கயிறு இழுப்புப் போட்டியில் காண முடிகிறது. இதன் விளக்கம் வருமாறு:-

இங்கே கயிறு இழுப் [illegible] பவர்கள் இராமனும் [illegible] மித்திரருடன் இராமன் மிதிலைத்தெரு ஒன்றில் நடந்து சென்றுகொண்டிருக்கிறான். அந்தத் தெருவில் உள்ள ஒரு மாளிகையில் மாடியில் சீதை நின்று கொண்டிருக்கிறாள். ஒருவரையொருவர் உற்று நோக்குகின்றனர். இருவரின் கண்களும் ஒன்றையொன்று கவ்வி உண்ணுகின்றன; உணர்வு ஒன்றிய நிலையில் அண்ணலும் அவளை நோக்கிக் கொண்டிருக்கிறான். அவளும் அவனை நோக்கிக் கொண்டிருக்கிறாள்.

கூரிய நுனி உடைய வேல் போன்ற அவளுடைய கண் பார்வை அவனுடைய தோள்களில் ஆழ்ந்து பதிந்துவிட்டன. அவனுடைய பார்வை அவளுடைய மார்பகத்தில் தைத்துக் கொண்டன. இவற்றை அறிவிக்கும் கம்பராமாயணப் பாடல்களாவன:

'எண்ணரு நலத்தினாள்
இணையள் நின்றுழி.
கண்ணொடு [illegible]
[illegible] ஒன்றை ஒன்று
[illegible]
உணர்வும் ஒன்றிட
அண்ணலும்நோக்கினன்
அவளும் நோக்கினள்'

'நோக்கிய நோக்கெனும்
நுதி கொள்வேல் இணை
ஆகிய மதுகையின்
தோளில் ஆழ்ந்தன;
வீக்கிய கனைகழல்
வீரன் செங்கணும்
தாக்கணங்கு அனையவள்
தனத்தில் தைத்தவே'

இவை பால காண்டம் -மிதிலைக் காட்சிப் படலத்தில் உள்ள பாடல்கள். இனிமேல்தான் கயிறு இழுப்புப்போட்டி அறிவிக்கப்படுகிறது:-

இருவரும் பற்றி இழுக்கும் கயிறு என்பது; இருவரின் நோக்குதான் — பார்வைதான். இழுக்கும் கைகள் இருவரின் உள்ளங்களே. இராமன் தன் உள்ளமாகிய கைகளால் தன் நோக்காகிய கயிற்றைக் கொண்டு சீதையைத் தன் பக்கம் இழுக்கிறான்; சீதையும் தன் உள்ளமாகிய கைகளால் தன் நோக்காகிய கயிற்றைக் கொண்டு இராமனைத் தன்பக்கம் இழுக்கிறாள். இருவரும் சமமான காதல் வலிமை உடையவர்கள்.

உலகத்தில் நடைபெறாத இந்த வியத்தகு கயிறு இழுப்புப் போட்டியில், இராமன் சீதையின் இதயத்திலும், சீதை இராமனது இதயத்திலுமாக இடம் மாறிப் புகுந்து அடைகின்றனர். இதை அறிவிக்கும் பாடலாவது:-

'பருகிய நோக்கெனும்
பாசத்தால் பிணித்து
ஒருவரை ஒருவர் தம்
உள்ளம் ஈர்த்தலால்,
வரிசிலை அண்ணலும்
வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு
இதயம் எய்தினர்'

மேற்கூறிய பாடல்களின் அடுத்த பாடல் இது. இப்பாடலில், பாசம் என்பது கயிறு ஆகும். ஈர்த்தல் என்பது இழுத்தல் ஆகும் நோக்கம் கயிறாகும்; உள்ளம் கைகளாகும்.

ஆங்கிலத்தில் 'Tug of war' என்று கூறப்படும் கயிறு இழுப்புப் போட்டி, இவ்வாறு எங்கேயாவது இடம் மாறி அடையும்படி நடந்திருக்கிறதா?

இந்த இடமாற்றம், கம்பன் காட்டும் கயிறு இழுப்புப் போட்டியில் நடைபெற்றிருப்பது வியப்பிற்கு உரியதன்றோ! ★

## பொன்மொழி

திறந்த மனதுடன் செயல்படுபவர்கள் அவர்களை அறியாமலேயே நூறு தரங்களுக்கு மேல் முட்டாள்களாக்கப்படுவர்,

நல்ல நேர்மையானவராகச் செயல்படின் நிறைய எதிரிகளைச் சம்பாதிப்பீர். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# திருடர்கள் ஏமாந்தனர்

தெனுலிராமனின் வீட்டைச் சுற்றி பெரிய நிலம் இருந்தது.

அந்த நிலத்தைக் கொத்திப் பண்படுத்தி பலவிதமான காய்கறிகளைப் பயிர் செய்திருந்தான்.

கோடைக்காலம் வந்துவிட்டது. எங்கும் வரட்சி நிலவியது. கடும் தண்ணீர் பஞ்ச ஏற்பட்டது.

தெனுலிராமன் வீட்டில் பெரிய கிணறு ஒன்று இருந்தது. ஆனுல் அப்பொழுது நீர் குறைந்து, கிணற்றின் ஆழத்தில் தண்ணீர் இருந்தது.

காய்கறித் தோட்டத்திற்கு நீர் இறைப்பது மிகவும் சிரமமாக இருந்தது. நீர் இல்லாமல் காய்கறிச் செடிகள் அழிந்து விடும் போல் இருந்தது.

ஒரு தடவை தாராளமாக நீர் இறைத்துவிட்டால் அப்புறம், பத்துப் பதினைந்து நாட்களுக்குக் கூட நீர் இறைக்கத் தேவையில்லை.

ஆட்களைவிட்டுக் கிணற்றில் நீர் இறைக்கலாம் என்ருல் அதிகமான கூலி கேட்டார்கள்.

என்ன செய்யலாம் என தெனுலிராமன் யோசித்துக்கொண்டிருந்தான்.

ஒருநாள் இரவு தெனுலிராமன் ஒருவேலையாக வெளியூர் சென்று விட்டுக்குத் திரும்பி வந்தான்.

விட்டுக்குள் தெனுலிராமன் நுழையும்போது விட்டை ஒட்டியிருந்த பெரிய பூஞ்செடிப் புதருக்குப் பின்னுல் இரண்டு மனிதர்கள் ஒளிந்து கொண்டிருப்பதைக் கண்டு விட்டான்.

இரவு தான் உறங்கிய பிறகு விட்டுக்குள் புகுந்து எதையாவது திருடிச் செல்லலாம் என அவர்கள் திட்டமிட்டிருக்கிருர்கள் என்பதை தெனுலிராமன் யூகித்துக் கொண்டான்.

விட்டுக்குள் சென்று உணவருந்தும்போது திருடர்கள் வந்திருக்கும் செய்தியை மிகவும் மெல்லிய குரலில் மனைவிக்குச் சொன்னுன்.

திருடர்களைச் சமாளிக்க தான் போட்டிருக்கும் ஒரு திட்டத்தையும் விளக்கினுன்.

சாப்பிட்டு முடிந்த பிறகு தெனுலிராமன் உரத்த குரலில் மனைவியை அழைத்து 'அடியே' ஊரில் திருடர் பயம் அதிகரித்து வருகிறது, நான் அரசாங்கத்தில் பணிபுரிபவனுக இருப்பதால் என்னிடம் நிறைய விலை மதிப்புள்ள பொருட்கள் இருக்கின்றன என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கின்றது அதனுல் எந்த நேரத்திலும் திருடர்கள் நமது வீட்டுக்கு வரக்கூடும். திருடர்களிடமிருந்து நமது விலை உயர்ந்த பொருட்களை காப்பாற்ற ஒரு தந்திரம் செய்யத் தீர்மானித்திருக்கிறேன். நம்மிடமிருக்கும் விலை உயர்ந்த பொருட்களை ஒரு மூட்டையாகக்கட்டி நமது வீட்டுக் கிணற்றுக்குள் போட்டுவிடுவோம். திருடர் பயம் குறைந்த பிறகு கிணற்று நீரை இறைத்து மூட்டையை எடுத்துக் கொள்வோம்'' என்று கூறினுன்.

பிறகு ஒரு பெரிய கோணிப் பைக்குள் கற்களையும் மண்ணையும் போட்டு நிரப்பினுன்.

பிறகு மிகவும் சிரமப்பட்டு அந்த மூட்டையைத் தூக்கிச் சென்று கிணற்றுக்குள் போட்டான்.

பெரிய இரைச்சலுடன் கோணிப்பை கிணற்றுக்குள் விழுந்தது.

பிறகு தெனுலிராமன் வீட்டுக்குள் சென்று கதவை தாளிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டான்.

திருடுவதற்காக வந்து காத்துக் கொண்டிருந்த மனிதர்கள் தங்களுக்குப் பெரிய வேட்டை கிடைத்தது என்று மகிழ்ந்து போனுர்கள்.

கொஞ்சம் சிரமப்பட்டு கிணற்று நீரை இறைத்து விட்டால் விலை உயர்ந்த பொருட்கள் அடங்கிய மூட்டையை சுலபமாக எடுத்துக் கொண்டு ஓடி விடலாம் என்று நினைத்தார்கள்.

கிணற்றில் ஏற்றம் அமைக்கப்பட்டிருந்தது

இரண்டு திருடர்களும் அந்த ஏற்றத்தின் உதவியுடன் கிணற்று நீரை இறைக்கத் தொடங்கினுர்கள்.

தெனுலிராமன் ஒரு மண்வெட்டியை எடுத்துக் கொண்டு சொல்லைபுறக் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குச் சென்ருன்.

திருடர்கள் இறைக்கும் நீரை நன்ருக மடை வெட்டி செடிகளுக்கெல்லாம் பாய்ச்சினுன். ★

## விரைந்தோடி வா!

வெள்ளைப் பசுவே வெள்ளைப்பசுவே
விரைந்தோடி வா
பிள்ளைக்குப் பால் கொடுத்திடவேண்டும்
பாய்ந்தோடி வா

பச்சைக்கிளியே பச்சைக்கிளியே
பறந்தோடி வா
இச்சை உன் மீது எமக்கெல்லாம்
எழுந்தோடி வா

பாடும் குயிலே பாடும் குயிலே
பரிந்தோடி வா
ஆடும் மயிலின் அழகைக்காண
அசைந்தாடி வா

செல்வி வ. கௌசி

## கண்டங்களின் பரப்பளவுகள்

| கண்டம் | பரப்பளவு |
|---|---|
| ஆசியா | - 48, 581, 000 சதுர கிலோ மீற்றர் |
| ஆபிரிக்கா | - 30, 417, 000 " " " |
| வட அமெரிக்கா | - 24, 531, 000 " " " |
| தென் அமெரிக்கா | -17, 836, 000 " " " |
| அன்டார்டிகா | - 13, 780, 000 " " " |
| ஐரோப்பா | - 9, 805, 000 " " " |
| அவுஸ்திரேலியா | - 7, 725, 000 " " " |

தொகுப்பு: செல்வி நா. ரேணுகா
ஆண்டு 10
யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி

# தாவரங்களின் வாழ்க்கை வரம்பு;

## தோற்ற அமைப்பு (3)

### (பாடம் பயில்வோம்)

1.3 தண்டு

(A) தண்டின் தொழில்கள்

(i) ஆதாரம்-கிளைகளையும், இலைகளையும் தாங்குதல். பூ, கனி போன்றவற்றையும் தாங்குதல்.

(ii) கடத்தல் - உணவுப் பொருட்களை இரு திசைகளிலும், நீரையும் கனியுப்புக்களையும் வேர்த்தொகுதியிலிருந்து மேல் நோக்கியும் கடத்த உதவுதல்.

(iii) சேமிப்பு - உணவுப் பொருட்களையும், நீரையும் சேமித்து வைத்திருப்பதற்கு உதவுதல்.

(iv) இலைகள், பூக்கள் முதலியவற்றைத் தோற்றுவித்தல்.

இவை தண்டின் சாதாரண தொழில்களாகும்.

இவை தவிரப் பின் வரும் தொழில்களையும் தண்டு நிகழ்த்தலாம்:-

(v) உணவுத்தொகுப்பு- தண்டின் பச்சை நிறமான பகுதிகள் உணவுத்தொகுப்பில் ஈடுபடும். மேலும், தண்டு பச்சை நிறமாக மாறி இலைத்தொழிற் தண்டாக அமைந்து ஒளித்தொகுப்பை ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கொள்ளலாம்.

(vi) ஏறுதல் - தண்டு திரிபடைந்து ஆதாரங்களில் ஏறுவதற்கு உதவலாம்,

(vii) பாதுகாப்பு - தண்டின் புறவளர்ச்சிகள் பாதுகாப்புக் கொடுக்க உதவலாம். தண்டு திரிபடைந்து பாதுகாப்புக் கொடுக்கலாம். தண்டிலுள்ள சளியம், மரப்பால், பிசின், சுங்கிலியம், சிறப்பரும்பர்கள் போன்ற பொருட்கள் பாதுகாப்புக் கொடுக்க உதவலாம்.

(viii) பதிய முறையினப்பெருக்கம் - தண்டு பல வழிகளில் பதிய முறையினப்பெருக்கத்திற்கு உதவலாம்.

(B) தண்டின் வடிவங்கள்

தண்டு பின்வரும் வடிவங்கள் அல்லது அமைப்புக்களைக் கொண்டதாக அமையும்.

(i) உருளை உருவானது - தண்டு உருளை போன்றதாயிருக்கும். குறுக்கு வெட்டமைப்பில் வட்டமாகவிருக்கும். உ+ம்: பூவரசு, செவ்வரத்தை, சூரிய காந்தி, மூக்குத்திப்பூண்டு போன்றவை.

(ii) முக்கோணத்திற்குரியது - தண்டு முக்கோணவடிவமுள்ளதாயிருக்கும். உ+ம்: கோரையினப் புற்கள் (செட்ஜெஸ் - (Sedges)

(iii) நாற்கோணத்திற்குரியது - தண்டு நாலு பக்கங்களை (கோணங்களை) உடையதாயிருக்கும். உ+ம்: துளசி, முடிதும்பை, பிரண்டை முதலியன.


(iv) மூட்டுள்ளது - தண்டு துலக்கமான மூட்டுக்களை உடையதாகவிருக்கும் உ+ம்: புற்கள் (Grasses).

(v) புரையுள்ளது - மையவிழையம் சிதைந்திருப்பதனுல் தண்டு குழாயுள்ளதாயிருக்கும். உ+ம்: மூங்கில், பூசினி, பப்பாசி, நெல் முதலியன.

(vi) புருவமுள்ளது - தண்டு பல புருவங்களை உடையதாகவிருத்தல். உ+ம்: பூசினி, பாகல், போன்ற தாவரங்கள்.

மேலும் ''பாம்ஸ்'' (Palms) இன் தண்டுகள் வாற்றண்டு (Cavdex) எனவும், புற்களின் தண்டுகள் புற்றண்டு (Culm) எனவும், தரையிலிருந்து தோன்றும் பூக்காம்பு (தண்டு) தரைப்பூக்காம்பு (Scape) எனவும் அழைக்கப்படும். (வளரும்)

- கே. எஸ். குகதாசன் -
(அதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி)




# துடி துடிப்புள்ள வீரர்களுடன் அனுபவமிக்க வழிகாட்டலில் ..

## விளையாட்டுத் துறை

வடபகுதி ரசிகர்களின் ரசனைக்கு விருந்தாக இங்கு உள்ள கல்லூரி கிரிக்கெட் அணிகளை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி வருகிறோம்.

இந்த வரிசையில் முதலாவதாக சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை அறிமுகப் படுத்தியிருந்தோம்.

இன்று இரண்டாவதாக யாழ்ப்பாணம் சென். பாறிக்ஸ் கல்லூரி அணியை உங்களுக்கு அறிமுகம் செய்கிறோம்

மிகவும் துடிதுடிப்பு மிக்க, ஆற்றல் மிக்க பழைய- புதிய கிரிக்கெட் வீரர்களைக் கொண்ட சென். பற்றிக்ஸ் அணி சிறந்த கட்டுக்கோப்புடன் இயங்குகிறது.

ஏ. எம். நிமல்ராஜ்;- அணியின் தலைவர் நிதானமாகச் சிந்தித்து ஆடும் சிறந்த வலதுகை துடுப்பாட்டவீரர். லாவகமாக பந்துகளைத் தடுப்பவர் என்று பெயர் பெற்ற பந்துத் தடுப்பாளர். இவர் 4 ஆவது வருடமாக அணியில் விளையாடுகிருர்.

ஓ வி. கே. எம். செந்தூர்வாசன்:- அணியின் உபதலைவர். இடதுகை ஆரம்ப வேகப்பந்து வீச்சாளர் மிகச்சிறந்த பந்து தடுப்பாளர் வலதுகைத் துடுப்பாட்ட வீரர் இவர் இரண்டாவது வருடமாக அணியில் விளையாடுகிருர்.

ஜி. எஸ். சவரிமுத்து:- சென். பற்றிக்ஸ் அணியின் கடந்த வருட அணித்தலைவர் இடதுகை ஆரம்ப துடுப்படி வீரர். சுழல் பந்து வீச்சாளர். கடந்த ஆண்டில் பல சாதனைகளை தனதாக்கிய வர். இவர் நான்காவது வருடமாக அணியில் ஆடி வருகிருர்.

வி. ஆர். திலக்ராஜ்;- வலதுகை வேகப்பந்து வீச்சாளர் நிதானமாகத் தடுத்தாடும் வலதுகை ஆரம்ப துடுப்பாட்ட வீரர். இவர் இரண்டாவது வருடமாக அணியில் ஆடி வருபவர்.

எம். பி. பனிஸ்ரர்:- அணியின் விக்கெட்காப்பாளர் பந்துகளை எட்டுத்திக்கிலும் விளாசியடிக்கும் வலதுகை துடுப்பாட்ட வீரர். இவர் இரண்டாவது வருடமாக அணியில் ஆடி வருகிருர்.

எஸ். செல்வராஜா:- வலதுகை ஆரம்பப் பந்து வீச்சாளர், வலதுகைத் துடுப்பாட்ட வீரர், இவர் அணிக்கு புது முகம்.

எஸ். ரஜீந்திரன்:- சிறந்த வலதுகை துடுப்பாட்ட வீரர், பந்துத் தடுப்பதில் வல்லவர். இவர் அணிக்குப் புது



நிமல்ராஜ்

முகம்.

எம். எஸ். செப்பேர்ட்: துடுப்பாட்ட வீரருக்கு அண்மையில் நின்றுபந்து தடுக்கும் திறமையுள்ளவர், அணியின் முக்கிய ஆட்டக்காரர்களில் ஒருவர். இவர் அணியின் புதுமுக ஆட்டக்காரர்.

எம். எஸ். டொனுல்ட்: தடுத்தாடும் ஆரம்பத் துடுப்பாட்டவீரர் லாவசமாக பந்துகளைத் தடுக்கும் ''கலர்'' திசை பந்துதடுப்பாளர். இவர் அணியின் புது முக ஆட்டக்காரர்.

ஏ. ஐ. லொயலா:- சிறந்த வலதுகைத் துடுப்பாட்ட வீரர். துடுப்பாட்டத்தில் தனது நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டால் ஆட்டம் இழக்கச் செய்வது சடினம் என்று ஏனைய வீரர்களால் விமர்சிக்கப் படுபவர் சிறந்த மாற்றுப் பந்து வீச்சாளர்களில் ஒருவர், இவர் இரண்டாவது வருடமாக அணியில் ஆடிவருகிருர்.

எஸ். யோகேஸ்வரன்; வலதுகை நடுத்தர வேகப் பந்து வீச்சாளர், சிறந்த பந்து தடுப்பாளர். இவர் அணிக்குப் புதுமுகம்

ஜே. ரெறன்ஸ்;- சிறந்த வலதுகைத்துடுப் பாட்ட வீரன். இவர் அணிக்குப் புது முகம்.

இவர்களுடன் எஸ். லெனின், பி. ரி. ஆர். நிருபநாத், ஆர். சி. மனேச்குமார், எ.ஸ் மினேசன் எஸ் ஒரேஸ் எம். என் ஜி. அன்ரனிப் பிள்ளை - ஆகியோரும் இந்த அணிக்காக ஆடும் வீரர்கள். இவர்கள் அணியின் புதுமுக ஆட்டக்காரர்கள்.

திரு. பி. நந்தகுமார் அணிக்கான பயிற்சிகளை அளிக்க, அணியின் பொறுப்பாசிரியர் திரு. ஏ செல்வராஜாவின் சிறப்பான அனுபவமிக்க வழிகாட்டலில —

விளையாட்டுப் பொறுப்பாசிரியர் திரு. எஸ். எவ். சேவியர் அணியை சிறப்பாக இயக்கி வருகிருர்.

- சண் ஜோண்சன் -

## சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி

## பாலில் வெண்ணெய் எடுக்கும் வழி

நாம் வழக்கமாகப் பாலுக்கு உறை ஊற்றி புளிக்கவைத்து அதைக் கடைந்தே வெண்ணெய் எடுக்கிறோம். ஆனுல் இதை விட பாலை நன்ருகக் காய்ச்சியபின் சிறிது நேரம் ஆறவிட பாலின் மேல் ஆடை விழும் அல்லவா.....! அந்த ஆடையை ஒரு போத்தலில் சேகரித்து உறையூற்றிப் புளிக்க வைத்து, புளித்த ஆடையில் அதே அளவு தண்ணீரை விட்டு நன்ருகக் கடைந்தால் வெண்ணை நன்ருகத்திரண்டு பெரிய உருண்டையாக வரும்.

இப்போது வெய்யில் காலம் ஆதலால் வெண்ணெய் எடுத்தபின் வரும் மோர் விரைவில் புளித்துக் கெட்டுவிடாதபடி அதற்குள் வாழை இலையின் தண்டுகளைப் போட்டு வைத்தால் எவ்வளவு நேரம் சென்ருலும், மோர் புளித்துக் கெடாமல் பாதுகாக்கலாம்.

## தக்காளி ரவை

இப்போது தக்காளிப் பழம் கிலோ இரண்டு ரூபாய் இதைப் பயன்படுத்தி தக்காளிஜாம், தக்காளி ஜூஸ் போன்ற பல வகையான பதார்த்தங்களை நாம் செய்து கொள்ளுகின்ருேம். ஆனுல் தக்காளிரவை எப்போதாவது செய்து பார்த்திருக்கிறீர்களா? இல்லையென்ருல் தக்காளி மலிவாகக் கிடைக்கும் இவ்வேளையைப் பயன்படுத்தி ஒருமுறை செய்து பாருங்கள்.

| | |
|---|---|
| ரவை | - 1 சுண்டு |
| தக்காளி | - 3 பழம் |
| பச்சை மிளகாய் | - 5 |
| செத்தல்மிளகாய் | - 2 |
| இஞ்சி | - 1 சிறியதுண்டு |
| உள்ளி | - 1 பல்லு |

அளவான வெங்காயம், கடுகு, கருவேப்பிலை- கொஞ்சம்.

### செய்முறை

ரவையை சிறிது வறுத்து எடுக்கவும். வெங்காயம், மிளகாய், இஞ்சி, உள்ளி எல்லாவற்றையும் சிறு சிறு துண்டுகளாக வெட்டவும் பின் அவற்றை நல்லெண்ணை அல்லது பட்டரில் தாளிக்கவும் நன்ருகத் தாளித்தபின் கடுகைப் போட்டுக் கிளறி பின் வெட்டி வைத்த தக்காளித் துண்டுகளையும் போட்டு நன்ருகத் தாளித்த பின் இரண்டு கப் தண்ணீர் விட்டுக் கொதிக்க ... கொதித்து வரும் ...

# பீதியைஉண்டுபண்ணும் வாந்திபேதி

வாந்திபேதியும் அளவுக்கு வேகமாகப் பரவி வருகிறது. இந்த அபாய அறிவிப்பில் இருந்து நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வது நாட்டைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சமமாகும்.

இப் பாதுகாப்பு முயற்சியில் சுகாதாரத் திணைக்களமும், தொண்டர் ஸ்தாபனங்களும் எவ்வளவுதான் அக்கறை எடுத்துக் கொண்டாலும், முக்கியபங்கு, ஒவ்வொரு குடும்பத்தலைவியரின் கையிலேயே தங்கி இருக்கிறது.

இந்நோயினுல் ஏற்படக்கூடிய விளைவுகள் உயிராபத்தில் முடியக் கூடியது. ஆகவே குடும்பத்தலைவியர் தம் குடும்ப அங்கத்தினரதும் குறிப்பாக குழந்தைகளினதும் தாய்மையிலும் சுகாதார முறைப்படியான பழக்க வழக்கங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

முக்கியமாகப் பருகும் நீர் நன்ருகக் கொதித்து ஆறியதாகவும், பழங்கள் கழுவச் சுத்தப் படுத்தியதாகவும் இருக்க வேண்டும்.

சமைத்த உணவு மூடி வைக்கப்படவும் வேண்டும்.

மேலும், மலசலகூடங்கள் சுகாதாரமுறைப்படி பராமரிக்கப்படாமையும் இந்நோய் பரவுவதற்கு ஒரு முக்கிய காரணமாகும். எனவே மலசலகூடங்களுக்கு மருந்துத் தண்ணீர் தெளிப்பதன் மூலமும் மலம் கழித்தபின் கைகளுக்குச் சவர்க்காரம் இட்டுக் கழுவுவதன் மூலமும் இந்நோய் பரவாமல் தடுக்கலாம். ★

சாந்தினி
செல்வரத்தினம்.

## சவ்வரிசி உப்புமா

தேவையான பொருள்கள்:-

| | |
|---|---|
| சவ்வரிசி | - 1 கப் |
| நிலக்கடலை | - ½ கப் |
| சீரகம் | - 1 கரண்டி |
| பச்சைமிளகாய் | - 3 |
| சீனி | - 2 கரண்டி |
| பொடி உப்பு | - சிறிது |
| நெய் | - 1 கரண்டி |

செய்முறை:-

சவ்வரிசியை நன்ருகக் களைந்து தண்ணீரை வடிகட்டி வைக்கவும். குறைந்தது அரைமணி நேரமாவது வடிகட்டியபின் இருக்க வேண்டும்.

இதற்குள் நிலக்கடலையை நன்ருக வறுத்து, தோல்நீக்கி இடித்துப் பொடி செய்து கொள்ளவும்.

பிறகு சவ்வரிசியைஒருபெரியதட்டில்கொட்டி உதிர்த்துக் கொள்ளவும். அத்துடன் பொடி செய்து வைத்துள்ள கடலை, உப்பு, சீனி எல்லாவற்றையும் போட்டு நன்ருகக் கலக்கி வைத்துக் கொள்ளவும்.

தாய்ச்சிச் சட்டியில் நெய்யை விட்டுக் கொதித்தவுடன் பச்சை மிளகாய் இவற்றைப் போட்டு வெடித்தவுடன் அடுப்பின் சூட்டைத் தணித்து கலந்து வைத்துள்ள சவ்வரிசியைக் கொட்டி நன்ருகக் கிளறவும். பிறகு மூடி வைத்து அடுப்பை மிகவும் சிறியதாக எரிய விடவும். இரண்டு நிமிடம் கழித்து மறுபடியும் திறந்து கிளறிவிட்டு அடுப்பை அணைத்து விடவும்.

இது ஒரு இந்தியச் சாப்பாடு. நாமும் சமைத்துப் பார்ப்போமே.




## உங்கள் கவனத்திற்கு..

எந்தவித ஊறுகாயாக இருந்தாலும் கண்ணுடிப் போத்தலில் இட்டு, சுத்தமான வெள்ளைத் துணியை நல்லெண்ணெயில் தோய்த்து ஊறுகாயின் மேலாக வைத்து பிறகு மூடியால் மூடி, மேலே ஒரு அளவான பாத்திரத்தால் மூடி வைத்து விடுங்கள்.

பூஞ்சான் அணுகாது. பூச்சியும் வராது. வருடக் கணக்கில் ஊறுகாய் கெடாது.

★

வெண்டைக்காய் கறி, கொள கொள என்றில்லாமல் மொற மொறப்பாக இருக்க வேண்டும் என்ருல், அதை வதக்க ஆரம்பிக்கும் பொழுது ஒரு தேக்கரண்டி புளித்த மோரையோ, தயிரையோ விடவும்.

★

நன்றி: சுமங்கலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவித்துளி

### விலைமகன்

கணவனே
நீ
என்
தலைவன் தான்
ஆனாலும்
கலியாணச்
சந்தையில் நான்
உன்னை
விலைக்கு
வாங்கியவன்
மறந்துவிடாதே.

- புஷ்பஜனனி -

### மலர் வளையங்கள்!

மனித வளையங்களின்
முடிவுச் சுற்றுகளில்
மரியாதை
செலுத்தும்
அஃறிணை
ஜீவன்கள் !
உதிர்ந்த
மனங்களின்
மறுபிறவிக்
கோட்பாடுகளைப்
பரிசிலிக்கும்
அழகிய - இயற்கை

புது பணங்களின்
கூட்டுத் தயாரிப்பு !
ஆசை எண்ணங்களை
அகல விரித்து
ஆர்ப்பரிக்கும்
அன்பர்கள்
அசைவற்றுக் கிடக்கும்
இறுதி வேளைகளில்
ஆசி கூறும்,
மரியாதை தரும்
மலர் வளையங்கள் !
புழுக்களின் நெளியும்
சமுதாயச்
சகதியில்
நிர்வாண நிஜங்களை
இயற்கையின்பால்
நினைவில் வைக்க
மனிதப் புழுக்கள்
பாடும்
இறுதிப்பாக்கள் !
ஆயிரம் ஜீவன்கள்
இறுதிவரை
சென்றாலும்
சடல சந்ததியுடன்
குழிவரை செல்லும்
இதய நண்பர்கள்.
சரித்திர ஏடுகளில்
தெரியாதிருப்பினும்
மாத வருட
நினைவுகளில்
நினைவுகளைத் தழுவும்
நன்றி ஜீவன்கள்
மலர் வளையங்கள்.

க. நேத்தாஜி
பிரேம்சங்கர்.

### மேன்மைக் கல்வி

மலரே!
வெண்கமலமே!
சேற்றுள்
மலர்ந்தாலும்-நீ
சேமத்துள் சிரிக்கிறாய்!

உன் சமுதாயத்தில்
தான்
எத்தனை வர்ணங்கள்...!
இயல்புகள்...!...
உங்களுக்குள்
பேதமையில்லை.

நாங்களோ...
நீர்க்குமிழிகளில்
பூகோளம் சமைக்கப்
பாடுபடுகிறோம்...!

அதனை
உடையின்றி
உருவாக்குவதற்கு
எமக்குள் உறவுகள்
இல்லை...!

ஏனெனில்
நாங்கள் மனிதர்கள்!

உங்களிடம்
'மானுடம்' படிப்பதற்கு
இவர்களுக்கு
தன்மானமாம்!
சிந்தித்துத்
திருத்தவும் மனமில்லை.

நீங்கள்தான்
இவர்களுக்கு
மானசீகமாக
மானுடத்தை
சட்டாயக் கல்வியாகக்
கற்பிக்க வேண்டும்...!

மாவை-வரோதயன்

சிந்தனையைத் தூண்டும் சிறந்த 'கவித்துளி'கள் வரவேற்கப்படுகின்றன.

---

பத்தினி வேஷம் போடும் பகட்டுக்காரி

# ஜெயலலிதா கிளி அல்ல, கழுகு!

# மரக்கிளை அல்ல - மலைப்பாம்பு!!

**சென்னையிலிருந்து எமது அலுவலகச் சிறப்புப் பிரதிநிதி: ந.வித்தியாதரன்**

ஜெயலலிதா கிளி அல்ல, கழுகு. மரக்கிளை அல்ல. மலைபாம்பு. பத்தினி வேஷம் போடும் பகட்டுக்காரி என்று காளிமுத்து கடுமையாகத் தாக்கிப் பேசினார்.

சென்னை சைதாப்பேட்டை தேரடி வீதியில் அ. தி. மு. க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் காளிமுத்து கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசும் போது கூறியதாவது:-

எம். ஜி. ஆரின் கட்சியைக் காப்பதற்காக அர்ப்பணிக்கின்றேன் என்றுகூறி ஜானகி ஆட்சிப்பொறுப்பு ஏற்க முன் வந்தார்.

இந்தச் சூழ்நிலையில் கலந்து ஆலோசனை நடத்துவதற்காக நெடுஞ்செழியனை ராமாவரம் தோட்டத்துக்கு அழைத்தார். ஆனால் அந்த நெடுஞ்செழியனோ நான்தான் முதல்அமைச்சராக இருப்பேன். அதை ஏற்றுக் கொண்டால் பேச வருகிறேன் என்று தனது உதவியாளர் மூலம் டெலிபோனில் தகவல் சொன்னார்.

அவர் படித்தவர். இலக்கிய அறிவு மிக்கவர் ஆனால் பதவி ஆசை அதிகம். பொதுவாக பெரும்பான்மையான சட்ட மன்ற உறுப்பினர்கள் யாரை ஆதரிக்கிறார்களோ அவர்கள் தான் முதல் அமைச்சராக வர முடியும். அதை விடுத்து உயரமாக இருந்தால் மட்டும் முதல் அமைச்சர் பதவியைத் தூக்கிக் கொடுத்து விட முடியாது? இது கூட நாவலருக்குத் தெரியவில்லை பதவி வெறி அவர் கண்ணை மறைத்தது.

**வலை**

இந்தச் சூழ்நிலையில் தான் நாங்கள் முதல்-அமைச்சர் ஆக்குகிறோம் என்று சொல்லி நெடுஞ்செழியனை ஜெயலலிதா கோஷ்டியினர் வலை வீசிப் பிடித்து விட்டார்கள்.

கருவாட்டைக் காட்டியவுடன் பெருச்சாளி பொறியில் மாட்டிக் கொண்டது போல் அவரும் மாட்டிக் கொண்டார். பெரிய உருவம் எப்படித்தான் மாட்டியதோ புரியவில்லை.

நெடுஞ்செழியன் நிதி அமைச்சராக இருந்தவர். அவருக்கு எல்லாக் கணக்குகளும் தெரியும். ஆனால் அரசியல் விளையாட்டில் அவருக்கு 97 பெரிதா 33 பெரிதா என்று கூடத்தெரியாமல் போய்விட்டது.

திராவிட பாரம்பரியத்தில் வந்ததாகக்கூறும் அவர் 33 உடன் சேர்ந்து தன்னைக் கெடுத்துக் கொண்டார். போயஸ் கார்டனின் ஏவலாளராக மாறி விட்டார். அவரை நான் எப்படி மதிக்கமுடியும்?

**சிவாஜி**

திரை உலகிலும் அரசியல் உலகிலும் எம். ஜி. ஆருக்குப் போட்டியாக இயங்கியவர் சிவாஜி கணேசன், அவருக்கே எம். ஜி ஆரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைப் பொறுக்க முடியவில்லை.

அந்த 20-ம நூற்றாண்டு வீரபாண்டிய கட்டப் பொம்மன் தொகுதிகள் தோறும் இ. காங்கிரஸ் நாசமாய்ப் போக என்று சாபம் கொடுத்து வருகிறார்.

ஆனால் எம். ஜி ஆரின் கட்சியில் வாழ்ந்து அவர் சோற்றைச் சாப்பிட்டவர்கள் எம். ஜி. ஆரின் ஆட்சியை கவிழ்ப்பதற்கே துணை போய் விட்டார்கள் என்னும் போது நெஞ்சம் பொறுக்க முடியவில்லை.

**கனவு**

காங்கிரஸ்காரர்கள் ஜெயலலிதாவைப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்து விடலாம் என்று

## காளிமுத்து கடும் தாக்கு

கனவு காண்கிறார்கள். அந்தக் கனவு ஒருக்காலும் பலிக்காது.

கறந்த பால் மடி புகாது. கருவாடு மீனாகாது. மாற்றி மாற்றி மகுடி வைத்து ஊதினாலும், செத்தபாம்பு படமெடுத்து ஆடாது. அதுபோல தமிழ் நாட்டில் இ. காங்கிரஸ் ஆட்சியை பிடிக்க முடியாது. இதை நான் சொல்லவில்லை, பெரியாரே சொல்லி வைத்திருக்கிறார். அதை மாற்றமுடியாது.

**சிம்மாசனம்**

காங்கிரஸ் என்னதான் செய்தாலும் சரி, இனி தமிழகத்தில் என்றும் திராவிட பாரம்பரிய மிக்க ஆட்சியே நடக்கும். அந்த வரலாறு மாறாது.

**வாய்ப்பூட்டு**

காங்கிரஸ்காரர்களைத் திட்டக்கூடாது என்று இது நாள் வரை வாய்ப் பூட்டு போட்டிருந்தேன். அந்தப் பூட்டு திறந்து கொண்டுவிட்டது. அதை இனி அடைக்கமுடியாது. புரட்சித் தலைவர் ஆணையிட்டிருந்ததால் அன்று அடங்கி இருந்தேன் ஆனால் இன்று கதர்சட்டைக்காரர்கள் வசமாக மாட்டிக் கொண்டார்கள். வா மாப்பிள்ளை வா! உன்னை நான் இனி விடமாட்டேன்.

**வாழ்த்துச் செய்தி**

ராஜீவ்காந்தி ஒரு நாட்டின் பொறுப்பு மிக்க பிரதமர். ஆனால் பொறுப்பற்ற முறையில் நடந்துகொள்கிறார். ஜெயலலிதா நீண்டகாலம் வாழ வாழ்த்துச் செய்தி அனுப்புகிறார்.

மாநில முதல்வர்கள் எல்லாம் பிரதமரைச் சந்திக்க டெல்லியில் பல வாரம் காத்திருக்கிறார்கள். ஆனால் ஜெயலலிதா சென்றால் உடனே ராஜீவைப் பார்த்து விடுகிறார். ஒரு மணி நேரம் பேசுகிறார்கள். இது என்ன மைய அரசா? அல்லது மையல் அரசா? மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

**கவர்ச்சி**

ஜூலியஸ் சீசரை அன்று அழகி கிளியோபாட்ரா கொன்றாள். அந்தோனியை அவள் மயக்கி ஆடும் பொம்மையாக்கினாள் ரோம் நகரம் எதிரிகளிடம் பிடிபடும் போது அந்தோனி பொருட்படுத்தவில்லை.

அதுபோல மத்திய அரசிடம் நாடு பிடிபோகிறதே என்று கவலை இல்லாமல் சிலர் கிளியோபாட்ராவின் அழகில் மயங்கிக் கிடக்கிறார்கள் அவர்கள் திருந்த வேண்டும்.

அந்தக் கிளியோபாட்ராவை கிளி என்று நம்பி விடாதீர்கள். அது கிளி உருவில இருக்கும் கழுகு. அது மரக்கிளை என்று நினைத்து தொங்கி விடாதீர்கள். அது மலைப் பாம்பு. எப்போதும் உங்களைப் [illegible]ங்கிவிடும்.

**புகார்**

அவர் (ஜெயலலிதா) மத்திய அரசின் ஆணையை பூர்த்தி செய்பவர் எம். ஜி. ஆர். இருக்கும் போதே தன்னை முதல் அமைச்சர் பதவி கேட்டுத் துன்புறுத்தியவர்.

அதுமட்டுமல்ல எம். ஜி ஆர். இருக்கும் போதே மத்திய அரசுக்கு எம் ஜி ஆர் மீது குற்றச்சாட்டுகள் அனுப்பியவர்.

என்னைப்பற்றிக் கூட அவர் மத்திய அரசுக்கு குற்றச்சாட்டுகள் அனுப்பி இருந்தார்.

அந்தக் குற்றச்சாட்டு சம்பந்தப்பட்ட பைல்கள் மத்திய அரசிடமிருந்து நகர்ந்து இப்போது சென்னை கோட்டைக்கு வந்துவிட்டன. இனி நான் இன்னும் ஒரு வாரத்திலோ அல்லது ஒரு மாதத்திலோ கைது செய்யப்படலாம்.

(கூட்டத்தினர் 'கைது செய்ய விடமாட்டோம்' என்று கூறினார்கள்.)

இந்தக் காளிமுத்தால் மட்டும் கட்சி நடக்கவில்லை கோடானுகோடி தொண்டர்களும் காளிமுத்துவாக மாறுவார்கள்.

**ஜானகி**

மத்திய அரசின் மிரட்டலுக்கு நான் ஒரு போதும் அஞ்சமாட்டேன் ஆயிரம் வழக்கு தொடுத்தாலும் சரி என்றும் நான் ஜானகி அம்மாள் பக்கமே நிற்பேன்

சூழ்ச்சிக்காரர்களின் அரசியல் தமிழ்நாட்டிலே இல்லாது ஒழிய புரட்சித் தலைவர் ஆட்சி அமைய நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து ஜானகி அம்மையாரை ஆதரிப்போம்,

இவ்வாறு காளிமுத்து பேசினார்.

---

## தமிழகத்திலிருந்து

# ஜெயலலிதாவின் முந்தானையைப் பிடிக்கும்

## நெடுஞ்செழியனுக்கு வெட்கம் மானம் எங்கே?

### நாஞ்சில் கேள்வி

ஜெயலலிதா முந்தானையைப் பிடித்துக் கொண்டு பின்னால்செல்லும் நெடுஞ்செழியனுக்கு வெட்கம், மானம் எங்கேபோனது என்று கும்பகோணத்தில் நடந்த தி.மு.க பொதுக் கூட்டத்தில் நாஞ்சில் மனோகரன் காட்டமாகக் கேட்டார்.

அவர் பேசியதாவது:-

**'செல்வி' கூத்து**

தமிழ் நாட்டில் 'செல்வி'யின் அரசியல் கேலிக்கூத்தும் நெடுஞ்செழியன் பேச்சும் அன்றாடம் காணத்தவறாத காட்சிகளாக இருக்கின்றன. மத்திய அரசும் பூட்டாசிங்கும் காவிரியில் தண்ணீர் விடக் கோரியதால் கர்நாடக முதன்மந்திரி ஹெக்டே கொஞ்சம் தண்ணீர் விடச் சம்மதித்தார்.

உடனே செல்வி ஓடோடிச்சென்று ஹெக்டேக்கு நன்றி தெரிவிக்கிறார் இவர் கேட்டுத் தான் தண்ணீர் வந்தது என்று மக்கள் நம்ப வேண்டுமா? இவர் முதலமைச்சராக வரவேண்டும் அல்லவா? அதற்காக இப்படி மக்களை ஏமாற்றப்பார்க்கின்றார்

வருங்கால முதலமைச்சரே வருக என்று ஒரு பக்கம் மூப்பனார், இன்னொருபக்கம் 'செல்வி' மற்றொருபக்கம் சிவாஜி. இப்படி எத்தனை முதலமைச்சர்கள் வரப்போகிறார்கள்?

**மக்களை ஏமாற்ற**

எம்,ஜி ஆரே கர்நாடகம் சென்று காவிரி தண்ணீரைக் கொண்டுவரவில்லை சரோஜாதேவி கண்ணீரைத்தான் கொண்டுவந்தார் ஆனால் செல்வி நன்றிகூறுகிறார் மக்களை ஏமாற்ற.

**வெட்கம் - மானம் வேண்டாமா?**

நாவலரை பக்கத்தில் வைத்துக் கொண்டே 'செல்வி' தான் முதலமைச்சர் என்று பண்ருட்டி ராமச்சந்திரன் சொல்கிறாரே? வெட்கம் மானம் வேண்டாமா? எந்தத் தியாகத்தின் அடிப்படையில் செல்வியின் பின்னால் போகிறீர்கள்?

பகுத்தறிவு பாசறையில் வளர்ந்தவர்களா நீங்கள் நெடுஞ்செழியன், எஸ் டி. சோமசுந்தரம், பண்ருட்டி ராமச்சந்திரன் செல்வியின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு - பின்செல்லும் அரசியல் வாதிகளாகி விட்டார்களே. வெட்கம், மானம் எங்கே போனது?

**நடைப்பிணம்**

நெடுஞ்செழியன் மானம், வெட்கம் என்று ஒன்றும் பாக்கி இல்லாமல் இழந்து விட்டு நடைப்பிணமாகத் திரிவது ஏன்?

67 வயதில் பழுத்த அரசியல் வாதியான நீர், 44 வயது செல்வியிடம் கைகட்டி நிற்கலாமா? அப்படி பதவி பெறுவது ஒரு கேடா?

**குற்றவாளிகள்**

அ. தி. மு. க. சட்ட மன்ற உறுப்பினர்கள் [illegible] குற்றவாளிகள் மக்கள் பணத்தை திட்டத்திற்குச் செலவிடலாம், அவர்களுக்குச் சொந்தமாக்கிகொண்டவர்கள்

சபாநாயகர் தி மு க உறுப்பினர்களை விலக்கிய நேரத்தில் கை கொட்டி வரவேற்றவர்கள். அதே சபாநாயகரால் பதவிபறிக்கப்பட்டார்கள்.

எந்த நெடுஞ்செழியன் தி மு.க. உறுப்பினர்களை நீக்க தீர்மானம்கொண்டு வந்து படித்தாரோ, அதே நெடுஞ்செழியன் பதவிஇழந்து சட்டமன்றத்தைவிட்டு வெளியேற்றப்பட்ட பரிதாபக் காட்சியைக் கண்டோம்.

முற்பகல் செய்தார்கள், பிற்பகல் அவர்களுக்கே விளைந்தது.

**விமோசனம் இல்லை**

தமிழ்நாட்டைச் சுடுகாடாக்கிய அ.தி.மு.க கட்சிகளை மக்கள் நாட்டைவிட்டு துரத்த தயங்கினால், இனி தமிழ் நாட்டுக்கு விமோசனமே இல்லை.

தமிழன் - தமிழனாக வாழ, தமிழகம் தலைநிமிர்ந்து நிற்க கலைஞரிடம் ஆட்சிப்பொறுப்பை தமிழக மக்கள் ஒப்படைக்கவேண்டும்.

**பால்கனிப் பதுமை**

பால்கனிப் பதுமை என்னை வம்புக்கு இழுக்கிறது. நான் அதைப் பொருட்டாக நினைக்கவில்லை.

இவ்வாறு அவர் பேசினார். (எ-உ)

---

# கவர்ச்சி அரசியலை நம்பி மீண்டும் ஏமாறாதீர்கள்!

## கலைஞரின் மகன் மு. க. ஸ்டாலின் பேச்சு!!

கவர்ச்சி அரசியலை நம்பி மீண்டும் ஏமாறாதீர்கள் என்று மு. க. ஸ்டாலின் பேசினார்.

கள்ளக்குறிச்சி நகர தி மு. க. புதிய நிர்வாகிகளுக்குப் பாராட்டு விழா நடந்தது.

கூட்டத்தில் தி. மு. க. இளைஞர் அணி செயலாளர் மு. க. ஸ்டாலின் பேசினார். அவர் கூறியதாவது:-

**கவர்ச்சி அரசியல்**

இன்றைக்கு இங்கே திரண்டிருக்கிற கூட்டம் கவர்ச்சிக்காகக் கூடிய கூட்டமல்ல. கவர்ச்சி அரசியலை நம்பி நாம் ஏமாந்தது போதும். இங்கே திரண்டிருக்கிற கூட்டம் அண்ணாவின் கொள்கை, இலட்சியத்திற்காகக் கூடியிருக்கின்ற கூட்டமாகும்.

கவர்ச்சி அரசியல் என்றவுடன் நான் நடிக்கவில்லையா என நீங்கள் கேட்கலாம். நான் நடிக்கவில்லை, தோன்றி இருக்கிறேன். அவ்வளவு தான்.

**ஏமாற வேண்டாம்**

நடிப்பைக் கண்டு ஏமாந்தது போதும், இனியும் அந்த நிலை வேண்டாம்.

சினிமாவில் நல்லவராக நடிக்கின்றவர்கள் எல்லாம் நல்லவர்களும் அல்ல, சினிமாவில் வில்லனாகவும், முரடனாகவும் நடிப்பவர்கள் எல்லாம் நிஜவாழ்க்கையில் கெட்டவர்களும் அல்ல. சினிமா வேறு-வாழ்க்கை வேறு. இதை நம்பி ஏமாந்தது மக்கள்தான்.

விவசாயியாக நடித்ததால் மக்கள் வாக்களித்து வெற்றி பெறச் செய்து விவசாயிகளுக்கு நன்மை செய்வார் என ஏமாந்தார்கள்.

தொழிலாளியாக சிறப்பாக நடித்ததால் தொழிலாளர்களுக்கு நன்மை கிடைக்கும் என மக்கள் நம்பி வாக்களித்து ஏமாந்தார்கள்.

**உண்மையான துயரம்**

எம். ஜி. ஆர். மறைவினால் வருத்தப்பட்டது தி. மு. கழகம் தான், ஆனால் அவர்கள் எம். ஜி. ஆர். இறந்த அன்றே கவலைப்படவில்லை. தி. மு. கழகத் தலைவர்தான் எம். ஜி. ஆர். மறைவிற்கு முதன் முதலாக மரியாதை செலுத்தினார் என்று அனைத்து பத்திரிகைகளும் எழுதின.

எம். ஜி. ஆரைப் பயன்படுத்தியவர்கள் எல்லாம் அவரைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவர் கல்லறைகூடக் காயவில்லை. மின்விளக்குக்கூடப் பொருத்தவில்லை. அதற்குள் பூசல்.

**குட்டிக்கதை**

கிராமத்தில் ஒரு கதை உண்டு; இறந்த கணவனைக் கல்லறை முன் விசிறியால் விசிறிக் கொண்டிருந்தாளாம் ஒரு மனைவி அந்த வழியாகச் சென்ற மக்கள் இந்த மனைவி தன் கணவன்மீது எவ்வளவு பாசமும், அன்பும் வைத்திருக்கிறாள் என்றார்களாம்.

அவளிடம் அனுதாபம் தெரிவித்தார்கள். அவள் அவர்களிடம் எனது கணவன் தனது கல்லறை காய்ந்த பிறகுதான் மறுமணம் செய்து கொள்ளும்படி கூறினார். ஆனால் கல்லறையைக் காய வைக்கத்தான் விசிறியால் விசிறுகிறேன் என்று தெரிவித்தாளாம், அந்தப் பெண்மணி இறந்த கணவனிடம் கொடுத்த சத்தியத்தை யாவது நிறைவேற்றினாள்.

ஆனால் இன்றைய கோஷ்டி பூசல் சிகரமாக அடைந்துள்ளது.

இவ்வாறு மு. க. ஸ்டாலின் பேசினார். (எ-உ)

---

யாழ். நகர வாசிகளே!

காலையில் எழுந்ததும் உதயன் வாங்குவதற்காக கடைக்குச் செல்கிறீர்களா?

உங்களுக்கு ஏன் அந்தச் சிரமம்?

உடனடியாக உதயசேவையில் சேர்ந்து விடுங்கள்!

விடியும் வேளை உதயன் உங்கள் வீடு தேடி வருவான் !!



உதயசேவை

யாழ். மாநகர பிரதேசத்திற்குள் வதியும் வாசகர்களுக்கு விநியோகக் கட்டணம் எதுவுமில்லை.

இலவசம்! இலவசம் !!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## லீப் ஆண்டு ஆரூடம்

'லீப் ஆண்டில் உலகம் அழியும் ஆரூடம் கட்டுரை படித்தேன்.

உலக அழிவப்பிரளய காலம் வருவதற்கு இன்னும் 186186911 வருடங்கள் இருக்கின்றன (18 கோடியே 61 லட்சத்து 86ஆயிரத்து 911வருடங்கள்)

சிலகாலங்களில் கிரக நிலைகளைப் பொறுத்தும், சில ஆண்டுகளில் எண்சணிக முறைப்படி வருட எண்களின் கூட்டு எண்ணிக்கையைப் பொறுத்தும் உலகில் சிற்சில பகுதிகளில் யுத்த அபாயங்கள், உயிர்ச்சேதங்கள், விபத்துக்கள், இயற்கை அழிவுகள் ஏற்படவே செய்யும் அப்படியான விடயங்களை ஆரூடம் மூலம் முன்கூட்டியே சொல்லமுடியும்.

லீப் ஆண்டின் எண்ணிக்கை எண் நான்கின் வர்க்கமாகும். ஆதலால் மற்றைய மூன்று ஆண்டுகளிலும்பார்க்க லீப் ஆண்டுகள் பொதுவாக உலக மக்களுக்குக் கெடுதிகள், விபத்துக்கள், யுத்த அழிவுகள், அரசியல் தலைவர்களின் மறைவுகளைக் கூடுதலாகக் காட்டும். ஆனால் இயற்கை அழிவுகளால் அவ்வளவாகப் பாதிப்புகள் ஏற்படமாட்டாது.

அனேகமாக லீப் ஆண்டின் எந்த மாதத்தில் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வருகின்றதோ, அந்த மாதத்தில் கெடுதிகளும், அழிவுகளும் கூடுதலாக இருக்கும். அதிலும் எத்தனையாம் மாதம் என்ற எண்ணைக்கொண்டும் அழிவுகளின் தன்மையையும், கால எல்லையையும் கூறலாம்.

1988 ஆம் ஆண்டு மே மாதம் ஞாயிற்றுக்கிழமையில் பிறக்கின்றது. இந்த மாதம் ஐந்து என்ற எண்ணைக்கொண்டது. ஆண்டின் கூட்டெண் எட்டு. ஆகையால் வருகிற மேமாதம் பொதுவாக உலக அரங்கில் விமானவிபத்துக்கள்; யுத்த அபாயங்கள்; பயங்கரவாதச் செயல்கள்; அரசியற் தலைவர்களின் மறைவுகள்; அகாலமரணங்கள்; ஆபத்துக்கள்; விபத்து உயிர்ச்சேதங்கள் ஆகியன கூடுதலாக இருக்கும். மேமாதம் எண் ஐந்தாக இருப்பதால் இந்தமாதத்துக்குமுன் நான்கு, பின் நான்கு மாதங்களிலும் இதன்தாக்கங்கள் காட்டப்படவே செய்யும். அதையும் இருந்து பார்ப்போமே.

சி. இ. செல்வத்துரை,
''வரசி'' ஆனைக்கோட்டை.

## ஐஸ்கிரீம் வந்தது எப்படி?

ஐஸ்கிரீமுக்கும் அமெரிக்க ஜனாதிபதிக்கும் தொடர்பு உண்டா?

ஜேம்ஸ் மெடிஸன் 1809-1817 காலத்தில் ஜனாதிபதியாக இருந்தார்.

ஒருநாள் வெள்ளைமாளிகையில் விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்தார்.

விருந்துக்கான ஏற்பாடுகளை ஜனாதிபதியின் பத்தினியான டாலிமெடிஸன் மேற்பார்வை செய்தார்.

வெள்ளைமாளிகையின் சமையல் பொறுப்பாளராக நீக்ரோ பெண் அப்போது பணியாற்றினார். அவளின் பெயர் ஸெட்டி ஜான்ஸன். அன்றைய விருந்து எதிர்பாராத விதமாகத் தடைப்பட்டுவிட்டது.

தயாரித்த உணவை என்ன செய்வது என்று திகைத்தாள் ஸெட்டி. ஒருவகை ஐஸ்பெட்டி ஒன்றில் உணவுவகைகளை அவள் வைத்தாள்.

அவ்விஷயத்தை அவள் எவருக்கும் சொல்லவில்லை. அவளே மறந்துவிட்டாள்.

சிலதினங்கள் கழித்து இன்னொரு விருந்துக்கு ஜனாதிபதி மெடிஸன் ஏற்பாடு செய்தார்.

அப்போதுதான் ஐஸ்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த உணவுவகைகள்பற்றி சமையல்காரிக்கு நினைவுக்கு வந்தது. அவற்றை எடுத்துப் பரிமாறினாள் ஐஸில் இருந்தபடியால் பண்டங்கள் இறுகி இருந்தன.

கெட்டியாக இருந்த பண்டங்களை விருந்தாளிகள் உண்ணத் தயங்கினர்.

ஒருவர்மட்டும் சாப்பிட்டார். அவரின் பற்களை அது கூசவைத்தது. ஐயோ விஷம் என்று அவர் அலறவே, விருந்து குழம்பியது.

சமையல்காரியைக் கைதுசெய்து சிறையில் இட்டார்கள்.

விருந்தாளிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள். ஜனாதிபதியின் மனைவி திருமதி மெடிஸனை கவலைப்பட்டார். எப்படி விஷம் வந்திருக்கும்? என்று திருமதி மெடிஸன் ஆராய்ந்தாள். பின்னர் அப்பண்டத்தில் ஒரு துண்டை வாயில் போட்டாள். அவ்வளவுதான். இனிப்பு அவளை மயங்க வைத்தது.

இவ்வளவு இனிப்பான பண்டத்தை வாழ்நாளில் ருசித்ததே கிடையாது என்று அவள் புளகாங்கிதமடைந்தாள்.

முதல் வேலையாக சிறையில் இருந்த சமையல்காரியை விடுவித்தாள் திருமதி மெடிஸன்.

சமையல்காரி திகைத்தாள். பின்னர்தான் விஷயத்தை அறிந்துகொண்டாள்.

ஐஸ்கிரீம் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. ஓர் ஆண்டினுள் அமெரிக்காவில் ஐஸ்கிரீம் பிரபலமாகிவிட்டது.

—புத்தொளி

# இறைவழிகாட்டிய இயேசுவுக்கு பிலாத்துவின் தீர்ப்பு

மரணத் தீர்ப்பு உலகில் வேறு எங்குமே ஏற்பட்டிருக்காத தீர்ப்பு. எட்டுத் திக்கிலும் பதினாறு கோணத்திலும், நடைபெற்றிராத அனியாயத் தீர்ப்பு, அநாகரிகத் தீர்ப்பு, குற்றம் சுமத்தப்பட்ட எதிரியின் நலன்களைப் பேணிப் பாதுகாப்பதற்காக எந்த வக்கீலோ, சட்டத்தரணியோ முன் வரவும் இல்லை. முன் வரவும் முடியாது. அரசும் ஏற்படுத்தவுமில்லை.

யூதநாட்டில் அன்றைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இயேசுஎதிரிமீதுவழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் அரசின் சார்பிலோ வாதாடுவதற்கு சட்ட மேதைகளும், வேதநூல் அறிஞர்களும் போட்டி போட்டுக்கொண்டு முன் வந்தார்கள். எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டன.

### இயேசு மீது குற்றச்சாட்டு

குற்றப்பத்திரத்தில் சில முக்கியமான குற்றச்சாட்டுக்கள்: இயேசு எங்கள் வேதத்தை இகழ்ந்து பேசி, தான் போதிக்கும் வேதமே உண்மையான வேதம் என்றும், எங்கள் அரசனைக் கடிந்து யூதர்களுக்குத் தான் அரசன் என்றும் நாட்டின் பல பாகங்களிலும் கூறித் திரிந்தான். இவனது பேச்சைக் கேட்டுப் பல



லாயிரக்கணக்கான மக்கள் இவர் சொல்வதை நம்பிவிட்டார்கள்.

இப்பேற்பட்ட வேத அரச விரோதியை நாங்கள் சும்மா விடமுடியாது இவரைக்கொல்ல வேண்டும், அதுவும் கொடூர சித்திரவதை செய்து, அவமானப்படுத்திக் கொல்ல வேண்டும், சிலுவையில் அறைந்து கொல்லவேண்டும் என்று சட்டமேதைகளும் வேதநூல் அறிஞர்களும் நீதிமன்றத்தில் நீதிபதி பிலாத்துவின் முன் வாதிட்டனர்.

### இயேசுவின் கைகளைக் கற்றூணில் கட்டப்படல்

குற்றம் சுமத்தப்பட்ட இயேசு பெருமானே கற்றூணுடன் கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் நிற்கிறார். 'உம் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் இப்போது உமக்கு முன்பாக வாசிக்

சமயம்

கப்பட்டன. இவைகள் அனைத்தும் உண்மைதானா?'— என்று கேட்கிறார் நீதிபதி பிலாத்து.

இயேசு பெருமானே மௌனமாக நிற்கிறார். இயேசுபெருமான் மௌனமாய் நிற்பதைத் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்திக்கொண்டு, கண்களில் இருந்து கோபக் கனல் பறக்க வாதாடுகிறார்கள் சட்டவல்லுநர்கள்.

'மௌனம் சம்மதத்தின் அறிகுறி' இவர் தன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொள்ளுகிறார் என்று ஒரு பக்க சார்பாக வாதிட்டார்கள் சட்ட மேதைகள்.

மீண்டும் நீதிபதி பிலாத்து இயேசுவைப் பார்த்துக் கேட்கிறார்.

'நீர் யூதனுக்கு அரசனா? நீர் போதிக்கும் வேதம் உண்மையான வேதமா?'—

கைகள் இரண்டும் தூணில் கட்டப்பட்ட நிலையில் கவிழ்ந்த தலையை நிமிர்த்தி நீதிபதி பிலாத்துவைப் பார்த்து இயேசு பெருமான் கூறுகிறார்; 'நீர் தானே கூறுகிறீர்' அப்பொழுது நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் ஆயிரக்கணக்கில் கூடி நின்ற யூதர்கள் இவன் இப்போதும் தன்னைத்தான் யூதர்களின் அரசன் என்றும், தான் போதிக்கும் வேதத்தையே உண்மையான வேதம் என்றும் கூறுகிறார். இவரைக் கொல்லுங்கள் சிலுவையில் அறைந்து கொல்லுங்கள் என்று மேலும் உரசத சத்தத்தில் கோஷமிட்டனர்.

இவற்றையெல்லாம் மிக நுணுக்கமாக அவதானித்த நீதிபதி பிலாத்து, 'இந்த மனிதன் மீது நான் ஒரு குற்றத்தையும் காணவில்லை நான் இவனுக்கு மரண தண்டனை விதிக்க முடியாமல் இருக்கிறது.

'தன் நெஞ்சறிய பொய்யற்க பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும்' என்ற வள்ளுவர் வாக்குக்கு ஒப்ப பிலாத்து இப்படிக் கூறினார்.

நீதிபதி பிலாத்துவின் வார்த்தையைக் கேட்ட சட்டமேதைகளும் வேதநூல் அறிஞர்களும், இவர் கொல்லப்பட வேண்டும் என்று மீண்டும், மீண்டும் உரக்கக் கூறினார்கள்.

### நீதிபதி தீர்ப்பு

நீதிபதி பிலாத்து எழுதுகோலை எடுத்து இவர்மீது நான் ஒருகுற்றத்தையும் காணவில்லை உங்கள் வேண்டுகோளுக்காக இவருக்கு மரணத் தீர்ப்பு எழுதுகிறேன் இவரின் இரத்தப்பழி' என்மீதும் என் சந்ததி மீதும் வரக்கூடாது என்று தான் எழுதிய எழுதுகோலை இரண்டாக முறித்து தன் கைகளையும் தண்ணீரால் கழுவினார். அன்றே எழுதுகோல் முறிக்கும் மரபு ஆரம்பிக்கப்பட்டது.

அப்போது யூதமக்கள் ஒன்றித்துக் கூறினார்கள். இவனின் இரத்தப்பழி எங்கள் மீதும் எங்கள் சந்ததி மீதும் எங்கள் எதிர்வழி மீதும் இருக்கட்டும் என்றார்கள். ★

- ஆ. வென்சஸ்சிலாஸ் -

### ராஜோபசாரம்

இருவர் பேசிக் கொண்டிருந்தனர். அதில் ஒருவர் பிரிட்டிஷ் காரர். அவர் சொன்னார் 'எமது நாட்டு நாடாளுமன்றத்துக்கு முன்னால் போய் நின்று பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வீழ்க. பிரிட்டிஷ் பிரதமர் வீழ்க என்று கத்தினால் போதும் உடனே பிடித்துச் சிறையிலே போட்டுத் தூக்குத் தண்டனை விதித்து விடுவார்கள்''

ஆனால் அதற்கு மற்றவர் ''எமது நாட்டு ஜனாதிபதி மாளிகையின் முன் போய் நின்று துணிவுடன் அமெரிக்க ஜனாதிபதி ஒழிக. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒழிக என்று கத்தினால் போதும், உடனே ஒருவர் ஓடிவந்து மாலை போட்டு தகுந்த மரியாதைகளுடன் ஜனாதிபதியிடம் அழைத்துச் செல்வார். அங்கு ராஜ மரியாதையே காத்திருக்கும் என்றார்.

ஏனென்றால் அந்த இரண்டாமவர் ஒரு லிபியர் லிபிய ஜனாதிபதி மாளிகையின் முன் நின்று அமெரிக்க எதிர்ப்பு கோஷம் போட்டால் ராஜோபசாரம் நடக்கத் தானே செய்யும். ★

- குமார்

# ஆயிரம் பிறைகண்ட அநுபூதிச் செல்வர்

மறுவன் புலோலியிலே சமாதி நிலையமொன்றில் அன்று குரு பூர்ணிமா தினம். பல சாதுக்கள், அடியார்கள். ஞானிகள் வருகை தந்திருந்தனர். வாயிலின் வலது பாரிசத்திலோர் கலைஞானி காவியுடன் காட்சியளிக்கிறார். அவர்தான் சபாரத்தினம் சுவாமிகள்.

அவரைக்கண்டதும் ஒருவர் வீழ்ந்து வணங்குகிறார் எழுந்து ''வேப்பெண்ணைப் போத்தலில் தேன் என்று (லேபல்) எழுதினால் இனிக்குமோ!'' என்று கூறிக்கொண்டே தொடர்ந்து ''அவனன்றியோரணுவுமசையாதெனும் பெரியவர்'' என்று பக்கலில் அமர்ந்தார். பின்போய்விட்டார்.

அப்புனித ஆத்மா யாரென்று விசாரித்தேன். அவர்தான் இணுவை வைரவி (யார் சுவாமி) என்றாரா, அவர் சொன்னதன் பொருளென்னவென விசாரித்தேன். வெளிவேஷம் போடுகிறவர்களுக்கு ஒரு போடு போட்டிருக்கிறார். காவியுடுத்தும், தாழ்சடை வைத்தும் என்னபயன்? உலகம் பழித்ததை ஒழிக்காமல், வெளியிலே சஷாயம் கட்டினால் போதுமா. உள்ளம் ஒளிர வேண்டும்; நெஞ்சிலே கபடம் - வெளியிலே அழகான போர்வை அகமும் - புறமும் ஒன்றாயமைய வேண்டும். உட்சுவர் இருக்கப்புறச் சுவர் நீற்றி என்னபயன்? என வைரவியாரின் கூர்ந்த மெய்ஞ்ஞானத்தை வியந்தார்.

அவ்வாறாயின் ''அவனன்றி...'' எனக் கேட்டேன். இந்த உண்மையை உணர்த்தியவனும் - உணர்ந்தவனும் - உணரப்படும்இறைவனும் பெரியவர்கள்தானே.

ஏகநாதனைப் பெரியவர் என்று விளித்த வைரவியாரின் முகத்திலேகளை, ஒளி, சிரிப்பிலே பூரணம் அகத்திலே ஆனந்தம். அவர்தான் புகையிலைக் குடிலோடு எரியும்போது சுந்தரநுபூதியைக் கை கொட்டிப் பாடியாடிய மஹாநுபாவர்.

இப்படிப் பண்போடு விளக்கம் தந்த சுவாமிகள் ''ஏசாநிற்பர் என்னையுனக் கடியானென்று பிறரெல்லாம், பேசாநிற்பர் யான்தானும் பேணா நிற்பேன்'' என்ற வாசகத்தினுட் பொருளைத் தன்னுடன் பொருத்திப் பொருள் சொன்னார்கள். நானும் இப்படித்தான் பெரிய சாமியென்று திரிகிறேன்; எனது நிலையை வெளிவேஷத்துக்கமைய உயர்த்த முடியவில்லையே என்ற ஏக்கத்தை நைச்சியபாவமாகப் பேசினார்கள். இவ்வாறு அகநோக்குடைய சுவாமிகளுக்கு 1940 இல் திருவாசகத்தை உணர்த்திய இடமும் இச்சமாதி நிலையமே;

பின்னர் திருவாசகத்திலே கரைந்து உருகிப்போன அனுபூதிச் செல்வரான சுவாமிகள 25. 1. 88 இல் கூத்தப்பிரானுடன் கலந்துவிட்டார்கள். இலக்கணச் சுவாமிகள், செப்பறைச் சுவாமிகள் தென்னாட்டிலே தொண்டாற்றினர். பரத நாட்டில் சோதி சுவாமிகளுடனும் அதற்கு முன்னரும் யாத்திரை செய்த சபாரத்தினம், திருக்கேதீஸ்வரத்தில் 45 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து, திருவாசக மடத்தைய மைத்து தொண்டர்பணி செய்தார்கள். திருவாசக [illegible] தையுடைய வழிகாட்டி.

மூச்சும் பேச்சும் பேச்சும் சொல்லும், நினைவும் நிலைப்பும் திருவாசகந்தான். அதனால் ஆத்மீக, சமய நெறியிலேற்படக் கூடிய - சந்தேகங்கள்; பிரச்சினைகள்- யாவற்றுக்கும் அறிவு ஒளி ஏற்றும்வேதம் திருவாசக மொன்றே தான் என்ற உயரிய இலக்கோடு வாழ்நாள் பூராவும் வாழ்ந்த எங்கள் வணக்கத்துக்குரிய அடிகளாரை - இலக்கியங்களும் திருவாசக சுவாமியெனப் போற்றிப் புகழ்ந்தன.

இறைவனை அடைதலையே தன் இலட்சியமாகக் கொண்ட மஹான் பல உத்தமர்களையும், ஞானிகளையும் - சாதுக்களையும் - சித்தர்களையும் சந்தித்தார். அவர்களிடம் பெற்ற அநுபூதிகளை மற்றவர்களுடன் பகிர்ந்து அனுபவித்தார். தன்பாதம் நோவ - தள்ளாத வயதிலும் நடந்து சென்று - பழவடியார் இல்லந்தோறும் திருவாசகத்தையே உணர்த்தினார்கள். அவர்களின் தொடர்பினாலேற்பட்ட தெய்வீக நாட்டத்தையும் சுகானுபவங்களையும் திருவாசக மூலம் பரப்பி எல்லாருடைய வாழ்வும் செழிக்க-உழைப்பதேநம் கடமையாகும். காந்தியடிகள் My Life Is My Message என்று சொன்னாரே அதேபோல திருவாசகச் சுவாமிகளின் செய்திகளை நினைந்து [illegible] அவர்வழி வாழ்வோமாக.

ஓம் சாந்தி சாந்தி ★

- முருக. வே. பரமநாதன் -

## தெரிந்த நாடு தெரியாதவிவரம்

## எத்தியோப்பியா

உலகின் 'வயது முதிர்ந்த' நாடு என்ற பெருமையைப் பெற்றது எத்தியோப்பியா.

சரித்திரப் பெருமை வாய்ந்த இந்த நாடு, உலகிலேயே மிகவும் வறுமையானது என்ற சிறுமையையும் பெறுகின்றது.

ஆபிரிக்கக் கண்டத்தின் கொம்பாக இந்த நாடு அமையப்பெற்றுள்ளது. செங்கடலுடன் நாட்டின் கரைபபகுதி தொடர்பு கொண்டுள்ளது.

முதலில் அபிசீனியா என்று இந்த நாடு அழைக்கப்பட்டது.

மத்தியில் பீடபூமியைக் கொண்ட இந்த நாட்டில் பல ஆறுகள் பாய்கின்றன.

4,300 மீட்டர் உயரமான மலைத் தொடர்களும் உண்டு பாலைவனங்களும் உண்டு.

மன்னன் சொலமன். மகாராணி ஷீபா ஆகியோர் முதன்முதலாகச் சந்தித்துக் கொண்டனர் என்று கூறப்படுகின்றது.

எத்தியோப்பியப் பேரரசு கிறிஸ்துவுக்கு முன்னரே புகழ்பெற்று விளங்கியது.

நான்காவது நூற்றாண்டில் ஆபிரிக்காவின் முதலாவது கிறிஸ்தவ நாடு என்ற பெயரைப் பெற்றது. இஸ்லாத்தின் வளர்ச்சி பின்னர் எத்தியோப்பியாவில் உள்நாட்டுப் பிரிவினையைத் தோற்றுவித்தது.

19 ஆம் நூற்றாண்டில் பேரரசர் ருவாடேரூஸ், நாட்டை ஒன்றாக்கினார். நாட்டைப் பிடிக்க இத்தாலி எடுத்து வந்த முயற்சி 1896 இல் தோற்கடிக்கப்பட்டது.

ஆனால் 1936 இல் இத்தாலியின் சர்வாதிகாரி முஸோலினி எத்தியோப்பியாவை தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வந்தார்.

1941 இல் முஸோலினியின் நேசநாடுகள் ஹெய்லி செலாஸியை மீண்டும் எத்தியோப்பியாவின் மன்னராக்கியது.

மன்னர் செலாஸி 1974 இல் பதவி கவிழ்க்கப்பட்டார். மார்க்ஸிஸக் கொள்கைகொண்ட இராணுவ அதிகாரிகள் எத்தியோப்பியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

எத்தியோப்பியாவின் ஒரு பகுதியான எரித்திரியா மக்கள் பிரிவினைக்கிளர்ச்சியை நடத்தி வந்தனர். சோமலி மொழி பேசும் ஓகடன் பிராந்திய மக்க




ளும கிளர்ச்சி நடத்தி வந்தனர்.

1975 ஆம் ஆண்டில் நாட்டின் காணிகள் அனைத்தும் தேசிய மயமாக்கப்பட்டன. இப்போது கூட்டுறவுப் பண்ணை முறை அங்கு அமுல் செய்யப்படுகின்றது.

அடுத்தடுத்து ஏற்பட்ட வரட்சியினால் பஞ்சம், பட்டினி ஏற்பட்டுள்ளது.

பழமையும் வறுமையும் நிறைந்த ஒரு நாடாக எத்தியோப்பியா இன்று உலக அரங்கில் கணிக்கப்படுகின்றது.

அணிசேரா இயக்கம், ஐக்கிய நாடுகள் சபை, ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபனம் ஆகிய அமைப்புக்களில் எத்தியோப்பியா அங்கம் வகிக்கின்றது.

ஏனைய விவரங்கள் வருமாறு;

சனத்தொகை:- 4கோடி 25 லட்சம்.

சனத்தொகை வளர்ச்சி:- 2. 8 சதவீதம் 2000 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் சனத்தொகை:- ஆறு கோடி ஐம்பது லட்சம்.

விஸ்தீரணம்: 10 லட்சம் சதுர கிலோ மீட்டர்.

தலைநகரம்;- அடிஸ் அபாபா (சனத்தொகை 12 லட்சம்)

மொழிகள்:- அம்ஹாரிக் (உத்தியோகமொழி) ஆங்கிலம் மற்றும் 100 உள்ளூர் மொழிகள்.

மதம்: எத்தியோப்பியாவின் பழமையான கொப்ரிக். இஸ்லாம்.

தொலைபேசி:- 480 பேருக்கு ஒரு தொலைபேசி.

சினிமாத் தியேட்டர்கள்: 31.

செய்திப் பத்திரிகைகள்;- ஐந்து தினசரிகள் (அம்ஹாரி, ஆங்கிலம், பிரெஞ்சு, இரண்டு இத்தாலி மொழியில்).

டாக்டர்கள்: 88,120 பேருக்கு ஒரு டாக்டர்.

தாதிகள் :- 5,000 பேருக்கு ஒரு தாதி.

ஆஸ்பத்திரிப்படுக்கை:- 3, 016 பேருக்கு ஒன்று.

கல்வி: - 46 சதவீத மாணவர்களே ஆரம்பக் கல்வி பெறுகின்றனர். 13 சதவீதம் செகண்டரி கல்வி பெறுகின்றனர். ஒரு சதவீதமே உயர் கல்வி பெறுகின்றனர்.

பொருளாதாரம்; விவசாயம், தங்கம், பிளாட்டினம், உப்பு, நிலவாயு.

கார்கள்:- 668 பேருக்கு ஒன்று.

ஆயுதபடை:- மக்கள் படை - ஒன்றரை லட்சம், இராணுவம் - ஒரு லட்சம், கடற்படை - 1, 500, விமானப்படை- 3, 500, பராதுருப்பு- 20, 000.

ஆயுள்:- சராசரி 44 வயது.

குழந்தை இறப்பு:- 1000 க்கு 172 குழந்தைகள் இறக்கின்றனர்.

படிப்பு வாசனை:- 15 சதவீதமே எழுத்தறிவுள்ளவர்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவே அழிகின்றது; பின்னர் சினிமாக்காரர்கள் எப்படித் தான் ஆட்சிக்கு வரமுடியும்?

## இப்படிக் கேட்கிறார் டைரக்டர் பாலச்சந்தர்

ஜெயலலிதாவுக்கு ஓட்டு போடமாட்டார்கள். அ. தி. மு. க மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாது என்று பிரபல சினிமா டைரக்டர் கே. பாலச்சந்தர் கூறினார்.

அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அவர்கள் அளித்த பதில்களும் வருமாறு:-

**வீடியோ**

கேள்வி:- தமிழ் நாட்டில் பெருகி வரும் வீடியோவினால் சினிமா தொழில் பாதிக்கப்படுமா?

பதில்:- திருட்டு வீடியோவினால் லட்சக்கணக்கான சினிமா தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதுடன் அரசுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. வீட்டிலேயே அனைவரும் வீடியோ சினிமா பார்ப்பதனால் அடுத்த 10 ஆண்டுகளுக்குள் சினிமா தொழில் நசிந்து விடும்.

**கடினம்**

100 படங்கள் வெளி வந்தால் அவற்றில் 4, 5 படங்கள் தான் வெற்றி பெறுகின்றன. அதனால் படம் நன்றாக இல்லை, என்று சொல்வதாக அர்த்தமல்ல.

பொன் விழா காண வேண்டிய படம் வெள்ளிவிழாதான் காணுகிறது. வெள்ளிவிழா காண வேண்டிய படங்கள் 2 வாரம் 3 வாரம்தான் ஓடுகின்றன. இது சினிமாத்துறைக்கு ஏற்பட்ட பெரும் பாதிப்பு.

**அரசியலில்**

கேள்வி:- நீங்கள் அரசியலில் குதிப்பீர்களா?

பதில்:- நான் அரசியலில் குதிக்கமாட்டேன் ஒரு நடு நிலையாளராகத் தான் இருப்பேன். நான் எடுக்கிற சில படங்களை வைத்து சிலர் தவறாகப் புரிந்து கொள்வது உண்டு. 'அச்சமில்லை அச்சமில்லை', 'தண்ணீர், தண்ணீர்' ஆகிய படங்கள் வந்த போது கூட, அது அ. தி. மு. க. அரசைத் தாக்குவதாகக் கருதினார்கள்.

சமுதாயத்துக்குத் தேவையான நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லும்போது சில குறைபாடுகளைச்சொல்ல வேண்டியது வரும். அது ஒரு கட்சியைத் தாக்குவதாக அர்த்தம் அல்ல.

**ஜெயலலிதா**

கேள்வி:- தமிழ்நாட்டில் ஜெயலலிதாவிற்கு கூட்டம் வருவதாகக் கூறிச்சிலர் அவர் ஆட்சியைப் பிடித்து விடுவதாகக் கூறுகிறார்கள். இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்:- கூட்டம் எல்லோருக்கும் வரும். இது ஓட்டுப் போடுகிற கூட்டம் அல்ல. சினிமாவே அழிந்து கொண்டு வருகிற நேரத்தில் சினிமாக்காரர்கள் எப்படி மீண்டும் ஆட்சிக்கு வர முடியும். அப்படி வந்தாலும் அது நிலைக்காது.

**அ. தி. மு. க. ஆட்சி வராது**

எம். ஜி. ஆர். இருந்த போது, அவரது கட்சிக்குள் பல பூசல்கள் இருந்தன. அதை வெளியில் காட்டாமல் தனது கவர்ச்சியின் மூலம் கட்சியை நடத்தி வந்தார்.

அவர் மறைவுக்குப் பிறகு அந்தக் கட்சி உடைந்து சிதறி விட்டது. மீண்டும் அந்தக் கட்சி ஆட்சிக்கு வரமுடியாது.

கேள்வி:- தமிழ் நாட்டில் எப்படிப்பட்ட ஆட்சி வரவேண்டும் என்று விரும்புகிறீர்கள்?

பதில்:- நேர்மையானவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும் இவ்வாறு அவர் கூறினார். ★

"ஒரே ஒரு கிராமத்திலே"

# தமிழ் சினிமாவுக்குத் தடை இல்லை

## தீர்ப்பை எதிர்த்து நீதிபதிக்கு எதிராகக் கோஷம்

'ஒரே ஒரு கிராமத்திலே' என்ற தமிழ்ப் படத்துக்கு தடை விதிக்கக் கோரும் வழக்கு சென்னை மேல்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது.

**வழக்கு**

'ஒரே ஒரு கிராமத்திலே' என்ற தமிழ்ப் படம் மீது சென்னை மேல் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடரப்பட்டு இருந்தது. ஜெகஜீவன்ராம் தமிழ் மறையான், டாக்டர் தெய்வசகாயம் ஆகியோர் இந்த வழக்கைத் தொடர்ந்து இருந்தனர்.

வழக்கில் 'இந்தப் படத்தில் அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள இடஒதுக்கீட்டை குறை கூறுவதாகவும், பல்வேறு சமூக மக்களிடையே வேறுபாட்டை உருவாக்கி இழிவு படுத்துவதாகவும், இதன் மூலம் நாட்டின் ஒற்றுமையைக் குலைப்பதாகவும் கருத்துக்கள் சொல்லப்பட்டுள்ளது. ஆகவே இந்தப் படத்தை எந்த ஊரிலும் திரையிட விடாமல் தடைசெய்ய வேண்டும்' என்று கூறப்பட்டு இருந்தது.

**தள்ளுபடி**

வழக்கை நீதிபதி மோகன் விசாரித்துத் தள்ளுபடி செய்து தீர்ப்புக் கூறினார்:-

நாட்டில் சாதி பாகுபாட்டை ஒழிக்கப் பலர் பல்வேறு வழி முறைகளை கையாளுகின்றனர். அதற்கான சுதந்திரம் அவர்களுக்கு உண்டு. ஒரு திரைப்படம் சாதிப் பாகுபாட்டை உண்டு பண்ணி அதன் மூலம் வன்முறையைத் தூண்டினால் மட்டுமே அந்தத் திரைப்படத்தைத் திரையிடக்கூடாது என்று சொல்ல முடியும்.

ஆனால் இந்தக் குறிப்பிட்ட படத்தில் கூறப்பட்டுள்ள விவரங்களைப் பார்த்தால் பொது அமைதியைக் கெடுக்கக் கூடும் என்று நான் கருதவில்லை.

**இட ஒதுக்கீடு**

இந்தப் படத்தில் 'இட ஒதுக்கீட்டுக்குப் பொருளாதார நலிவையே அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்து சொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இட ஒதுக்கீடு விஷயத்தில் நியாயமான உணர்வுள்ளவர்கள், ஒரு சிறந்த தீர்வுகாண பல காலம் முயன்று வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது இந்தப் படத்தில் ஒரு குறிப்பிட்ட சமூகத்தையோ, தனிமனிதரையோ இழிவுபடுத்துவதாக நான் கருதவில்லை. எனவே இந்த வழக்கைத் தள்ளுபடி செய்கிறேன். இவ்வாறு தீர்ப்பில் கூறி இருந்தார்.

**எதிர்ப்புக் கோஷம்**

இந்தத் தீர்ப்பைக் கேட்டதும் கோர்ட்டில் கூடி இருந்தவர்கள் நீதிபதி மோகனுக்கு எதிராக கோர்ட்டு மண்டபத்திலேயே கோஷங்களை எழுப்பினார்கள். பின்னர் கோஷம் போட்டுக் கொண்டே கோர்ட்டை விட்டு வெளியேறினார்கள்.

மேல்நீதிமன்ற வரலாற்றிலேயே கோர்ட்டு மண்டபத்துக்குள் இது போல நீதிபதிக்கு எதிராகக் கோஷம் எழுப்பப் பட்டதில்லை

**படத்தின்கதைஎன்ன?**

பிரச்சினைக்குள்ளான இந்த 'ஒரே ஒரு கிராமத்திலே' படத்தில் நிழல்கள் ரவி, நடிகை லட்சுமி ஆகியோர் நடித்து உள்ளனர்.

இந்தப் படத்தின் கதாநாயகி உயர்ந்த சாதியைச் சேர்ந்தவள். தன்னுடைய தந்தைக்கு தெரிந்த தாசில்தார் மூலம் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவள் என்று பொய்யான சான்றிதழை வாங்கி விடுகிறாள்.

**பெயர்மாற்றம்**

காயத்ரி என்ற தன்னுடைய பெயரை கருப்பாயி என்றும் மாற்றி விடுகிறாள். பின்னர் ஐ. ஏ எஸ். படித்துப் பெரிய அதிகாரி ஆகி விடுகிறாள். காயத்ரியின் சாதி மோசடி விஷயம் அரசுக்குத் தெரிய வர அவள்மீது வழக்குத் தொடரப்படுகிறது.

ஆனால் காயத்ரி ஒரு நேர்மையான அதிகாரி என்பதால் பொதுமக்கள் அவருக்கு ஆதரவாகப் போராட்டத்தை தொடங்குகிறார்கள். இறுதியில் அரசு வழக்கை வாபஸ் வாங்குகிறது. இதுதான் கதை ★

# வயிற்றோட்டமா? வாந்திபேதியா?

## கண்டு பிடிப்பது எப்படி?

**வயிற்றோட்டத்திற்கான காரணிகள் எவை?**

(1) வயிற்றோட்டத்தை இருவகையாக்கலாம்.

1. சடுதியாக ஏற்படுவது (Acut)

2. நீண்ட காலமாக ஏற்படுவது. (Ch onic)

சடுதியாக ஏற்படுவதற்கு:-

1. வைரஸ்கள் பற்றீரியாக்கள், பங்கசுக்கள், அமீபாக்கள் என்பன உடலில் பெருகுவதால் ஏற்படலாம்

2 உணவு போதிய அளவு ஜீரணமாகாவிட்டால் அல்லது அதில் எரிவை உண்டாக்கக் கூடிய பொருள் அல்லது ஒத்துவராத உணவுப் பகுதி இருந்தால் ஏற்படலாம்.

3. உணவு பழுதடைந்து நச்சுத் தன்மை அடைந்திருந்தால் அல்லது நச்சுப்பொருட்கள் கலந்திருந்தால்.

4. சில மருந்துகள் கொடுப்பதால் ஏற்படும்,

நீண்டகாலமாக வயிற்றோட்டம் இருப்பதற்கு குடல் அழற்சிகள், உணவுப் பொருட்கள் உறிஞ்சப்படுதல், குறைதல் வயிற்றுளைவு. புற்றுநோய், தைரொட்சின் அதிகமாகச் சுரத்தல், அமைதியற்றமனநிலைகள், சமிபாட்டுத் தொகுதி/நரம்புத்தொகுதியில் சத்திர சிகிச்சைகள் செய்யப்பட்டால் ஏற்படலாம்.

**(2) இவைகள் எப்படி வயிற்றோட்டத்தை ஏற்படுத்துகின்றன?**

உடம்பில் கிருமிகள் தொற்றிக்கொள்வதை எடுத்துக் கொண்டால் சில கிருமிகள் குடலில் பெருகியதும் அவற்றிலிருந்து வெளிப்படும். நஞ்சுப் பொருட்கள் குடலின் மேற்பரப்புக் கலன்களில் ஒட்டிக்கொள்கின்றன. இதனால் மேற்பரப்புக் கலன்கள் பாதிக்கப்பட்டு குடலின் குழாய்ப்பகுதியிலிருந்து நீர் உள்உறிஞ்சப்படுவதற்குப் பதிலாக குடலில் இருக்கும் நீர் குழாயினுள்பாய்கிறது. குழாய் நீரினால் நிரம்பியதும் வயிற்றோட்டமாக பெருமளவு நீரும் உடலுக்குத்தேவையான உப்புக்களும் வெளியேறுகின்றன.

சிலவகைக் கிருமிகள் குடற்சுவர்களைத்துளைத்து அங்கு பெருகுவதால் குடற்சுவர்கள் புண்ணாகி அதிலிருந்து இரத்தம் வெளியேறுகிறது. நீர் உறிஞ்சலும் தடைப்படுவதால் இரத்தமும் நீரும் கலந்த வயிற்றோட்டமாக வெளியேறுகிறது.

அமீபாக்கள் பெருங்குடலின் சுவர்களைத் துளைத்து குடுவைவடிவமான புண்களை உண்டாக்கி அதன் வாசலை சளியால் நிரப்புகிறது. இவற்றால் ஏற்படும் வயிற்றோட்டம் இரத்தமும் சளியும் கலந்ததாக இருக்கும்.

இவைதவிர குடலின் சுவர்கள் தூண்டப்படும் போது அல்லது நரம்பு மண்டலத்தில் மாற்றம் ஏற்படும்போது. குடலின் அசைவுகள் அதிகரிக்கப்பட்டு மலம் மிக வேகமாக வெளியேற்றப்படுகிறது.

சில மருந்துகள்; உதாரணமாக அம்பிசிலின், இரும்புச்சத்துக் குளிசைகள் கொடுக்கப்படும் போது சிலருக்கு வயிற்றோட்டம் ஏற்படலாம். இதைவிட சில நுண்ணுயிர்கொல்லிகளை தொடர்ந்து பாவித்தாலும் வயிற்றோட்டம் ஏற்படும்.

இதற்குக் காரணம்: சாதாரணமாக மனிதனின் குடலில் நன்மை பயக்கும் பற்றீரியாக்கள் வளர்ந்து; பற்ற கெடுதியான கிருமிகள் வளராமல் ஒரு பாதுகாப்பு கவசம் போல் தொழில்படுகிறது. நுண்ணுயிர் கொல்லிகள் நன்மை பயக்கும் பற்றீரியாக்களை அழித்து விடுவதால் கெடுதியான பற்றீரியங்கள் வளர வாய்ப்பு ஏற்படுகிறது. இத்துடன் சில மருந்துகள் குடலில் அழற்சிகளை ஏற்படுத்துவதால் வயிற்றோட்டம் ஏற்படலாம்.

**ஒருகுடும்பப் பெண் இந்த நோய்க்கு எதிராக எவ்வாறு செயற்படலாம்?**

இரண்டு வழிகள் உண்டு

1. நோய் பரவாமல் தடுத்தல்.

2. நோய் வந்தபின் நோயாளியைப் பராமரித்தல்.

வராமல் தடுப்பதற்கு; நோயைப் பரப்பும் காரணிகளைக் கட்டுப்படுத்த வேண்டும்.

இதற்கு,

1 நீரைக் கொதிக்க வைத்துக் கொடுக்க வேண்டும்.

2. இலையான் மொய்க்காமல் உணவை மூடி விடவேண்டும்.

3. வீட்டில் நோயாளி இருந்தால் அவர் மலகூடத்தில் மலம் கழிக்க வேண்டும். அது இல்லாதவிடத்துக் கிடங்கு வெட்டி மலம் கழித்தபின் உடன் மூடி விடுதல் வேண்டும். மலம் கழித்தபின் கைகளைச் சவர்க்காரம் போட்டுக் கழுவுதல் வேண்டும்.

நோய் வந்தபின் காப்பதற்கு;

வயிற்றோட்டத்தின் ஆபத்தான பகுதி உடலிலிருந்து இழக்கப்படும் நீரும் உப்புக்களுமே ஒருவரது உடலில் 5 லீற்றர் இரத்தம் ஓடுகிறது இதில் ஏறக்குறைய 3 லீட்டர் நீர் ஆகும். வயிற்றோட்டத்தின் போது அதிகமான நீர் இழக்கப்பட்டால் இரத்தத்திலிருந்து நீர் எடுக்கப்படுகிறது. இரத்தத்திலிருந்து நீர் எடுக்கப்பட்டால் இரத்தோட்டம் குறைவாகி இறக்க நேரிடுகிறது. எனவே நீரை உட்செலுத்துவது அத்தியாவசியமானதொன்றாகும். அத்துடன் வயிற்றோட்டத்துக்கு முக்கிய காரணி வைரசுக்களே. அதற்கு மருந்து தேவையில்லை நீரிழப்பை ஈடுசெய்தலே முக்கியம். சிலர் தண்ணீர் குடித்தால் வயிற்றோட்டம் அதிகமாகும் என்று நீரைக் குடிப்பதில்லை.

**ஒருவர் அதிகம் நீரை இழந்துவிட்டார் என எப்படிக் கணிப்பது?**

நீர் இழப்பு அதிகரிக்க அதிகரிக்க,

1. நாக்கு வரண்டு வெண்மையாக இருக்கும்.

2 தோல் சுருங்கி சோர்ந்து காணப்படும்

3 சிறுநீர் போவது குறைந்திருக்கும்

4. நாடித்துடிப்பு அதிகரித்து பலவீனமாக இருக்கும்.

வயிற்றோட்டத்தின் அறிகுறிகள் தென்பட்டதும் வைத்தியரை நாட வேண்டும். அது உடனடியாகக் கிடைக்காதவிடத்து முதலுதவிப் பொருளாக ஒரு ஜீவனிப்பக்கட்டை வீட்டில் வாங்கி வைத்திருத்தல் வேண்டும். 1 பைக்கற் 2½ சோடாப் போத்தல் நீரில் கரைப்பதற்குப் போதுமானது. எனவே உள்ளிருக்கும் தூளைக் குறிப்பிட்டளவு எடுத்து அதனை அதற்கு அளவான நீரைச் சேர்த்து உடனுக்குடன் கொடுக்க வேண்டும.

1 இதைவிட கொதித்தாறிய நீர், சூப், இளநீர், கஞ்சி, சாயம் குறைந்த தேனீர், பழச்சாறு என்பன கொடுக்கலாம்

2 சிறுகுழந்தையானால் தாய்ப்பால் கொடுக்கலாம். தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு பாலில் சம அளவு நீர் கலந்து கொடுக்கலாம்.

3 இலகுவாக சமிபாடு அடையக் கூடிய உணவு வகைகளைக் கொடுக்கலாம்.

4. நார்ப்பொருள் எண்ணெய், கொழுப்புப் பதார்த்தங்களைத்தவிர்த்தல் வேண்டும்

**சாதாரண வயிற்றோட்டத்திலிருந்து வாந்திபேதியை எப்படிப் பிரித்தறியலாம்?**

வாந்திபேதி திடீரெனத் தொடங்கி சிறிதளவு நேரத்திலேயே கஞ்சி போன்ற திரவம் மலவாயிலிருந்து கட்டுப்பாடற்று வெளியேறிக் கொண்டே இருக்கும். சில மணித்தியாலங்களுக்குள்ளேயே பெருமளவு நீரை இழந்து மயக்க நிலையை அடையலாம். எனவே உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

**- டாக்டர் க. சிவனடியான் -**

## வைத்திய சஞ்சீவி

# ராமானுஜனின் கனவில் தோன்றி புதிய வாய்ப்பாடுகளை உணர்த்திய நாமகிரி அம்மன்

தமது 13ஆவது வயதில்இராமானுஜன் தமது அயலவரான பி.ஏ.வகுப்பு மாணவனொருவரிடமிருந்து லோனி என்பவர் எழுதிய திரிகோணகணிதம் என்ற நூலின் இரண்டாம் பகுதியை இரவலாக வாங்கினான். இந்த நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு நமதுநாட்டில் இப்போதும் உயர்தர வகுப்புகளில் பயன்படுத்தப் பட்டுவருகிறது. அந்த நூலிலுள்ள எல்லாக் கணக்குகளையும் இராமானுஜன் எவருடைய உதவியுமின்றித் தாமாகவே செய்துமுடித்தார். அந்த நூலை இரவல் கொடுத்த பி. ஏ வகுப்பு மாணவன் இதனை அறிந்தபோது மிகுந்த வியப்படைந்தார். அதன் பின்னர் பாடசாலை மாணவராகிய இராமானுஜத்திடமே தமக்குத் தெரியாத கணக்குகளை அந்த பி ஏ. படிக்கும் மாணவர் கேட்டுத் தெரிந்துகொண்டார்.

1903ஆம் ஆண்டில் இராமானுஜனின் நண்பரொருவர் அரசினர் கல்லூரி நூலகத்திலிருந்து ஜி. எஸ். கார் என்பவர் எழுதிய கணித நூலை (A Synopsis of Elementary Results in Pure and Applied Mathematics By G.S. Carr) எடுத்து வந்து கொடுத்தார் கார் என்பவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆசிரியர். அவர் தம்முடைய மாணவர்களுக்குக்கற்பித்த கணித முடிவுகளின் சுருக்கமான பட்டியலைக் கொண்டதே அந்த நூலாகும். கிட்டத்தட்ட 6000 கணித தேற்றங்களை முழுமையான நிறுவல்கள் எதுவுமின்றி அந்நூலில் அதன் ஆசிரியர் குறித்திருந்தார். அந்தத் [illegible] நிறுவல்கள் விளக்கங்கள் போன்ற மேலதிக விவரங்களைத் தரும் நூல்களின் பட்டியலை அந்த நூலினிறுதியில் நூலாசிரியர் குறிப்பிட்டிருந்தார். ஆனால் இராமானுஜனைப் பொறுத்த வரையில் அவை உபயோகமற்றவையே. ஏனெனில் அதில் குறிப்பிட்டுள்ள நூல்கள் எதனையும் பெறக்கூடிய நூலக வசதிகள் கும்பகோணத்தில் இல்லை.

15 வயதே நிரம்பிய ஒரு பாடசாலை மாணவனுக்கு அந்த நூல் மிகுந்த பயத்தையே அளித்திருக்கும். ஆனால் இளம் மேலதயான இராமானுஜனுக்கு அது மிக்க மகிழ்ச்சியையே அளித்தது. பேராசிரியர் ஜி. எச். ஹார்டி அவர்களின் கருத்துப்படி "எவ்வகையிலும் அந்த நூல் சிறந்த ஒன்றல்ல. ஆனால் இராமானுஜனுக்கு உதவியமையால் அந்நூல் புகழ்பெற்ற ஒன்றாகி விட்டது. சந்தேகமில்லாமல் இராமானுஜனிடத்தில் அது ஆழமான தாக்கத்தை உண்டு பண்ணியுள்ளது. அந்நூலுடன் அவருக்கு ஏற்பட்ட தொடர்பு அவருடைய வாழ்க்கை நெறியின் ஆரம்பத்தைக் குறிக்கிறதெனலாம். முழு அளவில் பார்க்கும் போது இயல்புக்கு மீறிய ஆற்றல் படைத்த ஒரு மாணவனுக்கு உள்ளார்ந்த உந்து சக்தியாக உதவுவதற்கு காரின் (Carr's) நூல் அவ்வளவு தகுதியற்றதல்ல. எனவே இராமானுஜன் சிறந்த முறையில் அதனால் பயனடைந்தார்" என்று குறித்தள்ளார்.



இராமானுஜம்

அந்த நூல் அவருக்கு ஒரு புதிய உலகத்தையே திறந்துவிட்டது. அதனூடாக அவர் மகிழ்ச்சியுடன் விரைந்து சென்றார். அவரிடமுள்ள மேதைத் தன்மையை எழுச்சியுறச் செய்தது அந்த நூலே எனலாம். அந்த நூலிலுள்ள தேற்றங்களையும் சூத்திரங்களையும் அவர் நிறுவ முயன்றார். அதற்கு உதவுவதற்கு அவருக்கு வேறெந்த நூலும் கிடைக்காமையால் ஒவ்வொரு ருக்குமான தீர்வைக் [illegible] ரைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஆராய்ச்சிக் கண்டு பிடிப்பேயெனலாம். முதலில் அவர் மந்திரச்சதுரங்களை (Magic Squarer) உருவாக்குவதற்கான சிலமுறைகளைக் கண்டு பிடித்தார். பின்பு சேத்திரகணித விடயங்கள் அட்சரகணிதவிடயங்கள் எனத்தொடர்ந்து சென்றார். பலபுதிய தொடர்களையும் கண்டுபிடித்தார். அக்காலத்தில் நாமகிரி அம்மன் தமது கனவில் தோன்றி பல

**கணித மேதை இராமானுஜம் நூற்றாண்டு**

புதிய வாய்பாடுகள், தேற்றங்கள் ஆகியவற்றை உணர்த்தியதாக இராமானுஜன் கூறியதுண்டு. படுக்கையில் இருந்து எழுந்ததும் அவர் மிகவிரைவாக பல தீர்வுகளையும் தேற்றங்களையும் தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைப்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். ஆனால் அவற்றிற்கு அவரால் செம்மையான நிறுவல்களைத் தரமுடியாமல் இருப்பதுமுண்டு இக்காலம் அவர் மிகுந்த வேகத்துடன் செயற்பட்டகாலம். இக்காலத்திலிருந்தே அவர் தமது புகழ்பெற்ற குறிப்புப் புத்தகங்களை (Note Books) வைத்திருந்தும் [illegible] கொண்டார் இக் குறிப்புப் புத்தகங்களையே அவர் பிற்காலத்தில் தம் ஆராய்ச்சியில் ஆர்வம் கொண்டவர்களுக்குக் காட்டியதுண்டு. இந்தக் குறிப்புப்புத்தகங்களையே இன்றும் பல கணிதர்கள் ஆராய்ந்துவருகின்றனர்.

தமக்குக் கிடைத்த ஒருநூலை மிகுந்த ஆர்வத்துடன் கற்று தாமாகவே தமது கணித ஆற்றலை விருத்தி செய்துகொண்ட இராமானுஜனின் இந்த உதாரணம் கவனிக்கத்தக்கது. அவர் தம்மைத் தாமேவளர்த்துக்கொண்டார். உண்மையான கல்வியின் முக்கிய அம்சம் இந்த சொந்த முயற்சியே. மாணவர்கள் இயன்றவரையில் தாமாகவே தேடிக்கற்கும் ஆர்வம் கொண்டவராக விளங்கவேண்டும். அந்த ஆர்வத்தை மாணவர்களிடையே ஏற்படுத்துவதே பாடசாலைக்கல்வியின் முக்கிய கடமையாகும். இசுதகைய ஆர்வம் உள்ளவரே பிற்காலத்தில் ஆராய்ச்சி மனப்பான்மையுடன் செயற்பட்டு அறிவின் எல்லைகளை விரிப்பர். துரதிர்ஷ்டவசமாக நம் நாட்டில் தற்போது இந்த அம்சம் புறக்கணிக்கப்பட்டு பரீட்சையில் வெற்றிபெறுவதற்கே அளவுக்குமிஞ்சிய முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது இந்த நிலைமாறி தேடிக்கற்கும் ஆர்வம்மிகுந்த ஆராய்ச்சி மனப்பான்மைவளர வேண்டும். இராமானுஜன் போன்ற மேதைகள்போல் முழுதான சுயகல்வியில் ஈடுபடமுடியாவிடினும் ஓரளவாவது [illegible] புதியனபடைக்[illegible] பெற வேண்டும். ★

(தொடரும்)

**- சு. மகாலிங்கம் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில் 'மிதக்கும் தீவுகள்!'

## 21ஆம் நூற்றுண்டு காணப்போகும் விந்தை

இருபத்தோராம் நூற்றுண்டில் மிதக்கும் தீவுகள்!

இது ஹாலிவூட்டில் தயாரிக்கப்படும் படம் ஒன்றின் பெயரல்ல.

வீட்டுத் தட்டுப்பாட்டை நீக்க, சோவியத் நிபுணர்கள் தயாரித்துள்ள திட்டம் ஒன்றே இது.

மேலைநாடுகள் பலவற்றில் வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நிலத்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பிரான்ஸ், பிரிட்டன், சோவியத்யூனியன், அமெரிக்கா, மேற்கு ஜேர்மன், மொனக்கோ ஆகிய நாடுகளில் இந்த நெருக்கடி நிலவுகின்றது.

கடலில் மிதக்கும் தீவுகளை அமைத்து குடியிருப்பு வசதிகளைச்செய்து கொடுக்கும் திட்டம் பற்றி இந்த நாடுகள் தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகின்றது.


இவற்றில் சோவியத் யூனியனும் ஒன்று. சோவியத் மாநிலங்களில் ஒன்றான ஜோர்ஜியா இது விஷயத்தில் கூடிய அக்கறை காட்டிவருகின்றது.

கடலில் மிதக்கும் தீவுகள் என்பது இதுவரையில் கற்பனையில் இருந்து வந்தது இப்போது அது நிஜமாகி வருகின்றது.

ஏற்கனவே இரண்டு மிதக்கும் தீவுகளை நிர்மாணிப்பதற்கான திட்டம் ஒன்றை சோவியத் விஞ்ஞானிகள் தயாரித்துள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் இரண்டு மிதக்கும் பட்டினங்கள் அமைக்கப்படும்.

திட்டம் ஒன்று; இதன் படி ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதான 5



மாடிக் கட்டடங்கள் நிர்மாணிக்கப்படும்.

15 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரம் மக்கள் வாழக்கூடியதாக இம் மிதக்கும் பட்டினம் அமையும்.

திட்டம் இரண்டு; இந்த மிதக்கும் பட்டினம் பிரமிட் மாதிரி அமையும். அரைலட்சம் மக்கள் அதில்வாழலாம்.

கருங்கடலின் கிழக்குப் பகுதியில் இவற்றை அமைக்க ஜோர்ஜியா மாநில ஆராய்ச்சியாளர்கள் திட்டமிட்டிருக்கின்றனர்.

மிதக்கும் பட்டினங்களில் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

சினிமாத் தியேட்டர்கள், ஹோட்டல்கள், மற்றும் மனிதவாழ்வுக்குத் தேவையான சகல வசதிகளும் இதில் இருக்கும்.

ஹெலிகொப்டர்கள் இறங்கும் தளமும் இப்பட்டினத்தில் அமையும். செயற்கைக் கடற்கரைகளும் இருக்கும்.

மிதக்கும் பட்டினங்களுக்கும் பூமிக்கும் இடையே ஹெலிக்கொப்டர்கள், மின்சாரத்தில் இயங்கும் படகுகள், நீர் பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படும்.

குடிநீர், கடல்நீரை சுத்திகரித்து வழங்கப்படும். மின்சாரமும் கடல் நீரில் இருந்து உற்பத்தி செய்யப்படும்.

சூறாவளி, கடல் அலைகளில் இருந்து தப்பக் கூடியதாக மிதக்கும்பட்டினங்களை அமைப்பது சம்பந்தமான பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பத்து மீற்றர் விட்டம், முப்பது மீற்றர் உயரம், 45 மீற்றர் பருமன் கொண்ட 96 போயாக்கள் மிதக்கும் பட்டினத்தை கடலினுள் தாழவிடாமல் மிதக்க வைக்கும்.

பகுதி, பகுதியாகக் கழற்றக்கூடியதாக இந்தப் பட்டினம் அமைக்கப்படும்.

பழுதான பகுதிகள் அகற்றப்பட்டு புதியவற்றைப் பொருத்தவும் முடியும். திருத்த முடியாதளவு நிலைமையேற்படின், அப்படியே பட்டினம் கடலில் மூழ்கடிக்கப்படும்.

250 ஆயிரம் தொன் நிறையுள்ளதாக இருக்கப்போகும் ஒரு பட்டினத்தை, மிதக்க வைக்கும் போயாக்களில் 290 ஆயிரம் கன மீற்றர் காற்று இருக்கும்.

21 ஆம் நூற்றுண்டில் மிதக்கும் பட்டினங்களை கடலில் காணமுடியும். இதில் சந்தேகமே இல்லை என்று ஜோர்ஜியா நிபுணர்கள் கூறுகின்றனர்.

கடல் வாழ் மனிதர்களைக்காண இருபத்தோராம் நூற்றுண்டு தயாராகின்றது என்று கூறமுடியும்.

ஆதாரம்: ஸ்புட்னிக்

## விண்வெளியில் "ஷவர் - பாத்"

விண்வெளிக் கலங்களில் பயணம் செய்வோர் 'ஷவர் பாத்' செய்ய முடியுமா? 'முடியும்' என்கின்றனர் அமெரிக்க வல்லுநர்கள். அதற்கான 'ஷவர் பாத்' ஒன்றையும் அவர்கள் தயாரித்துள்ளனர்.

விண்வெளியில் புவி ஈர்ப்புச் சக்தி இல்லை. எனவே ஷவரிலிருந்து கொட்டும் தண்ணீர் கீழே விழாமல் நாலாபுறமும் பறக்கும். இதைத் தவிர்ப்பதற்காக, அழுத்தவிசை கட்டுப்படுத்தப்பட்ட ஒரு கண்ணாடிக் கூண்டுக்குள் இந்த ஷவர் அமைக்கப்பட்டுள்ளது. 'ப்ளெக்சிகிளாஸ்' என்னும் கண்ணாடியினுல் இந்தக் கூண்டு செய்யப்பட்டுள்ளது. இதில் உள்ள குழாயிலிருக்கும் பொத்தானை அழுத்தினுல் தண்ணீர் பீய்ச்சி அடிக்கும். மற்றொரு பொத்தானை அழுத்தினுல் தேவையற்ற தண்ணீர் இன்னொரு குழாய் மூலம் வெளியேறிவிடும்.

விண்வெளி வீரர் ஒருவர் இந்த 'ஷவர் பாத்' தில் ஒருமுறை குளிப்பதற்கு ஒரு கலன் (3.7 லிட்டர்) அளவுக்கும் குறைவான தண்ணீரே போதும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. வழக்கமான சோப்புக்கள், ஷாம்பூ, ஆகியவற்றுக்குப் பதிலாக, விண்வெளிப் பயணத்திற்கென்றே தயாரிக்கப்பட்ட விசேஷ சோப்பு, ஷாம்பூ பயன்படுத்தப்படும். இவ்வாறு உபயோகிக்கப்பட்ட சோப்புக் கழிவைச் சுத்தம் செய்து, மறுமுறை அதனையே பயன்படுத்தவும் வசதி உண்டு.

அமெரிக்காவில் டெக்சாஸ் மாநிலம், ஹூஸ்டன் நகரிலுள்ள விண்வெளி மையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இந்த விண்வெளி ஷவர் பாத்தைத் தயாரித்துள்ளனர். ★

## மருந்து குடிக்காமலே நோய்க்குச் சிகிச்சை

மருந்து கசக்கின்றது. குடிக்கக் குழந்தைகள் மறுக்கின்றது.

பெரியவர்களே சில சமயம் மருந்துக்குளிகைகளை உட்கொள்ள மறுக்கின்றனர்.

இவர்களுக்கு உதவ வைத்திய நிபுணர்கள் புதிய முறை ஒன்றைக் கண்டு பிடித்துள்ளனர்.

மருந்தைத் தோலில் தேய்த்து விட்டால் அது உடலினுள் சென்று நோய்க்கான சிகிச்சையைத் தொடங்கி விடும்.

இம்மருந்துகள் பிளாஸ்டர் அமைப்பில் தயாரிக்கப்படுகின்றன.

## நாம் நித்திரையாகிறோம்- நீங்கள் பேசுங்கள்!

விருந்துபசாரத்தின் இறுதியில் தலைமை வகிப்பவர் எழுந்தார்.

"நண்பர்களே! பிரதம விருந்தினரைப் பேசும்படி அழைக்கின்றேன்" - இப்படித் தலைவர் கூறினார்.

பிரதம விருந்தினர் எழுந்ததும் கரகோஷம் எழுந்தது. பேச்சைத் தொடங்கினர். பத்து நிமிடங்கள் சென்றன. பேச்சுத் தொடர்ந்தது. அரை மணித்தியாலம் சென்றது. பேச்சு இன்னும் நீடித்தது. கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் 'குசு குசு' சத்தம் எழுந்தது.

பிரதம விருந்தினரும் பேச்சை முடிக்க நினைத்து,

"பேசுவது எனக்குப் பெரிய விஷயமல்ல. சிறுபையனுக இருந்த சமயம் நித்திரையில் கூட நான் பேசினேன்"— என்று சொன்னர்.

"இப்போது நாம் நித்திரையாகின்ருேம். நீங்கள் பேசுங்கள்" — இப்படி ஒரு குரல் கேட்டுக் கொண்டிருந்தவர்கள் மத்தியில் இருந்து எழுந்தது.

## பதவி இழந்த ஜனதிபதி பத்தி எழுத்தாளராகின்ருர்!

நிக்ஸன், லண்டன் சண்டே டைம்ஸ் பத்திரிகையில் தொடர்ந்து எழுதப் போகின்ருர்.

யார் இந்த நிக்ஸன் அவர்தான் அமெரிக்க ஜனதிபதியாக இருந்து 'வார்ட்டர் கேட்' ஊழல் காரணமாக அவமானப்பட்டவர். அதனுல் பதவி இழந்தவர்.

பத்தி எழுத்தாளராக (Columnist) மாறியுள்ள நிக்ஸன், அமெரிக்கப் பத்திரிகைளுக்கு எழுத விரும்பவில்லை.

அப்பத்திரிகைகள்தான் அவரைப் பதவி இழக்கச் செய்தன என்ற கோபம் இன்னும் ஆறவில்லையோ தெரியவில்லை.

எதிர்வரும் நவம்பரில் நடைபெறவுள்ள ஜனதிபதித் தேர்தல் பற்றித்தான் நிக்ஸன் சண்டே டைம்ஸில் தொடர்ந்து 10 அல்லது 12 வாரங்கள் எழுதச் சம்மதித்திருக்கின்ருர்.

லண்டன் பத்திரிகையில் பிரசுரமான மறுதினம் தனது பத்திரிகையில் மறுபிரசுரஞ் செய்யும் உரிமையை அமெரிக்கச் சஞ்சிகை 'டைம்' வாங்கியிருக்கின்றது.

ஆனுல் நிக்ஸனைப் பொறுத்தவரையில் அவர் லண்டன் பத்திரிகைக்குத்தான் எழுதுவார்; அமெரிக்கப்பத்திரிகைக்கு அல்ல.

இப்படி நிக்ஸனின் பேச்சாளர் டெய்லர் சொன்னர் ✱

## பஞ்சாமிர்தம் பலரசஅமிர்தம்

## எழுத்தாளர்கள் வாழ்வில்---

எழுத்தாளர்களுக்கு அவர்களின் படைப்புக்கள்தான் 'உயிர்'.

அவை தொலைந்து விட்டால் அல்லது அழிந்து விட்டால், அவர்களின் வாழ்வே சூன்யமாகி விடும்.

சரித்திரத்தில் இடம் பெற்ற உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர்களும் இந்த வேதனையை அனுபவித்திருக்கிருர்கள்

அவற்றைக் கொஞ்சம் தெரிந்து கொண்டால் நமது எழுத்தாளர்களும் சிறிது மன ஆறுதல் அடையலாம் அல்லவா!

கார்லைல், சரித்திர ஆராய்ச்சியாளர், எழுத்தாளர்.

'பிரெஞ்சுப் புரட்சி' பற்றிய நூலை வெளியிட்டார். தொகுதியை எழுதி முடித்து இருந்தார்.

கார்லைலுக்கோ, 'பிரெஞ்சுப் புரட்சி'யின் முதல் வால்யூம். அவரின் வேலைக்காரனுக்கோ அது வெறும் கடதாசிகள்.

ஒரு நாள் வெறும் கடதாசிதானே என்று எண்ணி எரித்து விட்டான்.

கார்லைல் அது பற்றிக் கவலைப்படவில்லை. எழுதியதன் பிரதியைக்கூட அவர் வைத்து இருக்கவில்லை.

ஞாபகசக்தி நிறைந்த அவர். அதனுல் மீண்டும் எழுதத் தொடங்கினர். வெற்றி கண்டார்.

சேர் ஐஸக் நியூட்டன். பிரபல விஞ்ஞானி. தனது ஆராய்ச்சிகளை எழுத்திலே வடித்து வந்த சமயம். நாள் முழுமூரமாக எழுதிக்கொண்டிருந்தார்.

நண்பர் ஒருவரைச் சந்திக்க அறையை விட்டு வெளியே வர வேண்டியதாயிற்று.

தான் வளர்த்து வந்த 'டயமண்ட்' என்ற நாய்க்குட்டியை அறையினுள் விட்டு விட்டு வெளியே வந்தார்.

நண்பரைச் சந்தித்த பின்னர் மீண்டும் அறைக்குள் நுழைந்தார்.

பல ஆண்டுகளாக பாடுபட்டு கண்டுபிடித்த ஆராய்ச்சிகள் கண் முன்னே மேசை மீது சாம்பராகிக் கிடந்ததைக் கண்டார்.

மேசை மீது இருந்த மெழுகுதிரியைத் தட்டி இச் 'சாதனை' யை நடத்திய 'டயமண்ட்' நாயை அவர் அடிக்கவில்லை.

'ஆ' டயமண்டே [illegible] டாய்"- என்று தடவிக் கொடுத்தார்.

மீண்டும் தனது கண்டுபிடிப்பை எழுத்தில் வடிக்கத் தொடங்கினர், நியூட்டன். வெற்றியும் கண்டார். ஆனுல் அதுவே அவரின் உடல் நிலையை மோசமடையச் செய்தது.

இளம் விஞ்ஞானி எடிஸனுக்கும் இந்தத் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

மேசை மீது விஞ்ஞானக் குறிப்புக்களை வைத்திருந்தார். அருகில் இருந்த போத்தலில் பொஸ்பரஸ் இருந்தது. அவர் வளர்த்து வந்த நாய்க்குட்டி பொஸ்பரஸ் இருந்த போத்தலை தட்டி விட்டது. விஞ்ஞானக் குறிப்புக்கள் எழுதப்பட்டிருந்த கடதாசிகள் சாம்பராயின.

# ரஜ்னீஷ் சுவாமிக்கு எய்ட்ஸ் நோயா?

புனே, கொரிகான் பூங்காவில் உள்ள ரஜ்னிஷ் ஆச்சிரமம் அடங்கி விட்டது.

அந்த நாளைய கலகலப்பு இப்போது இல்லை

ஆச்சிரமத்தின் நுழைவாயிலில் ஓர் அறிவிப்புப் பலகை.

'எய்ட்ஸ் நோய் இல்லாத பிரதேசம்' என்று அந்த அறிவிப்புப்பலகை கூறுகின்றது.

எய்ட்ஸ் நோய் இல்லை என்பதை அத்தாட்சிப்படுத்தும் வைத்திய சான்றிதழ் இல்லாதோர் ஆச்சிரமத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ரஜ்னஷின் 'பொன்

**இல்லை, அமெரிக்க அரசு நஞ்சூட்டி விட்டது என்கிருர் பகவான்.**

மொழிகளில் ஒன்று 'எச்சரிக்கை! எதற்கும் தயாராக வாருங்கள்' - என்பது.

இப்போது ரஜ்னிஷ் பின்வருமாறு கூறுகின்ருர்.

உடல் வைத்திய, பல் வைத்திய பரிசோதனைகளை முடித்தபின் ஆச்சிரமம் வாருங்கள்.

எய்ட்ஸ் நோய் பரிசோதனை சான்றிதழுடன் வாருங்கள். பெயரில்லாத விஞ்ஞான கூடச் சான்றிதழ்களைக் கொண்டு வராதீர்கள்"- இது பகவான் ரஜ்னிஷின் அறிவுரை.

விசித்திரம் என்னவென்ருல் ரஜ்னிஷ் ஸ்வாமியே ஒரு எய்ட்ஸ் நோயாளி என்ற சந்தேகம் ஏற்பட்டிருப்பது தான்.

கண்டுபிடிக்கமுடியாத பல நோய்களினுல்தான் துன்பப்படுவதாக ரஜ்னிஷ் ஸ்வாமி கூறியிருக்கின்ருர்.

அவர் எய்ட்ஸினலும் பீடிக்கப் பட்டிருக்கலாம் என்று இந்திய சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த டாக்டர் ஐ எஸ் ஜில்டா கருத்து வெளியிட்டிருக்கின்ருர்.

ரஜ்னிஷ் சுவாமி [illegible] திருக்கின்

இந்திய சஞ்சிகை 'சண்' ணுக்கு ரஜ்னிஷ் பிரத்தியேக பேட்டி ஒன்றை அளித்தார். அந்தப் பேட்டியில்



றேகன்

தனக்கு வந்துள்ள நோய்க்கு யார் காரணம் என்பதையும் தெரிவித்திருக்கின்ருர்.

அதிபர் ரொனல்ட் றேகன் தலைமையிலான அமெரிக்க அரசாங்கம்



நஞ்சூட்டி என்னைக் கொல்ல முயற்சித்தது" இப்படி ரஜ்னிஷ் சுவாமி பெரிய 'குண்டு' ஒன்றைப் போட்டிருக்கின்ருர்.

"நான் அமெரிக்காவில் இருந்து வெளியேற மறுத்தால் என்னைக் குண்டு வைத்துக் கொல்லவும் திட்டமிட்டிருந்தார்கள்," என்றும் ரஜ்னிஷ் சுவாமி பேட்டியில் தெரிவித்திருக்கின்ருர்.

அவர் சொல்வதாவது:

அமெரிக்கச் சிறையில் வைக்கப்பட்டிருந்த சமயம் ஒரு நாள் இரண்டு துண்டுப் பாண் தந்தனர். நிறமற்ற, ருசியற்ற திரவம் தந்தர்கள். அன்று தான் எனக்கு அமெரிக்காவில் வைத்து நஞ்சூட்டப்பட்டது என்று உணருகின்றேன்.

அதன் பின்னர் 12 நாள் எனக்கு நித்திரையே வரவில்லை. நரம்புகள் பாதிக்கப்பட்டன. தாகமே இல்லாது போய் விட்டது.

எடையில் 20 ருத்தலை இழந்தேன். தலையில் இருந்து மயிர் கொட்டத் தொடங்கி விட்டது. கண்பார்வை மங்கத் தொடங்கி விட்டது.

இப்படி ரஜ்னிஷ் தெரிவிக்கின்ருர்.

சுவாமியை அவரின் தனி வைத்திய நிபுணர் டாக்டர் அமிரிதோ சோதனை செய்தார். நோய் என்ன என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

உலகின் பலபாகங்களில் இருந்து வைத்திய நிபுணர்கள் ஆச்சிரமத்துக்கு வந்து அவரைப்பரிசோதனை செய்தனர்.

சுவாமியின் இரத்தம், சிறுநீர், தலைமயிர் எல்லாம் எடுத்து ஐரோப்பாவில் உள்ள சிறந்த வைத்திய நிபுணர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

"அவரின் உடலில் நோயே இல்லை; பின்னர் என்ன நோய்? என்பதை எப்படிக் கூறுவது? - இப்படி அந்த நிபுணர்களும் கூறிவிட்டனர்.

இந்த இடத்தில்தான் ஜேர்மனி, பிரிட்டனைச் சேர்ந்த நிபுணர்கள் சுவாமியின் உடலில் 'தாலியம்' என்ற நஞ்சு சேர்ந்துள்ளதோ என்று சந்தேகப்பட்டனர். நோய் எதிர்ப்புச்சக்தியை உடலில் இருந்து அகற்றிவிடும் தன்மை வாய்ந்தது இந்த நஞ்சு என்றும் கூறப்பட்டது.

ஆரம்பத்தில் அமெரிக்க நிபுணர்கள் மறுதலித்தனர். பின்னர் அவர்கள் ஒப்புக்கொண்டனர், கிளர்ச்சிக்காரர்கள் மீது பயன்படுத்தப்படும் செயற்கை ஹெரோயின் பாவிக்கப்பட்டு இருக்கலாம் என்று.

சாதாரண ஹெரோயினிலும் பார்க்க ஆயிரம் மடங்கு ஆபத்தானது, செயற்கை ஹெரோயின்.

ரஜ்னிஷ் சுவாமிநித்திரையில்இருந்தபொழுதுகதிர் இயக்கத் தாக்குதலுக்கு ஆளாகியிருக்கக் கூடும் என்று ஜப்பானிய நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

சுவாமியின் தனி வைத்திய நிபுணரான டாக்டர் அமிரிதோ கூறுகின்ருர், புளோரோ கார்பன் என்ற நஞ்சு பயன்படுத்தப்பட்டிருக்கலாம்என்று இந்த நஞ்சு உடலில் சேர்ந்த பின்னர் அதன் அடையாளம் சிறுநீர், இரத்தத்தில் கூட தெரியாதாம்.

ரஜ்னிஷ் சொல்கிருர்: "என்ன நஞ்சை எனக்குத் தந்தார்கள் என்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. றேகன் அரசு எனக்கு நஞ்சு ஊட்டி விட்டது".

'காதல் கடவுள்' என்று வர்ணிக்கப்பட்டு வந்த ரஜ்னிஷ் சுவாமி இன்று அடையாளங் காணமுடியாத நோயினுல் துன்பப்படுகின்ருர். ✱

### சிரித்ததால் அழுகின்றேன்

மகனே! ஏன் அழுகின்ருய் என்ன நடந்தது?- இப்படி அம்மா கேட்டாள்.

விசும்பலுக்கு இடையே மகன் சொன்னன்:

சுவரில் ஆணி ஒன்றை அப்பா அடித்த சமயம், சுத்தியல் அவரின் கை விரலைத்தாக்கி விட்டது.

"அதற்கு ஏன் அழுகின்ருய். சிரிக்கவேண்டிய சம்பவமல்லவா" - இப்படி அம்மா திருப்பிச் சொன்னுள்.

"நான் சிரித்ததால் தான் இப்போது அழுகின்றேன்."- மகன் பதிலளித்தான்.—அனே

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# புதியமுறை ஜனாதிபதி தெரிவு:

# அரசியல் வட்டாரங்களில் கலக்கம்!

ஜனாதிபதியாவது எப்படி?

இது குறித்து அரசமைப்புச் சட்டத்தில் புதிய அத்தியாயம் ஒன்றை எழுதுவது பற்றி கொழும்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக செய்திகள் கூறுகின்றன.

பதினான்காவது திருத்தம் என்ற பெயர் புதிய அத்தியாயத்துக்குச் சூட்டப்படலாம்.

யு. என். பி. கொண்டுவந்த 1978 இல் அரசமைப்புச் சட்டம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முதன் முதலாக அறிமுகப்படுத்தியது.

பிரதமர் ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் முறைபோய், ஜனாதிபதி பிரதமர் யார் என்பதை நிர்ணயிக்க 1978 இல் அரசமைப்புச் சட்டம் வழிவகுத்தது.

ஜனாதிபதியை மக்களே நேரடியாகத் தெரிவு செய்வர் என்றும், முதலாவது ஜனாதிபதியை நாடாளுமன்றமே தெரிவு செய்யும் என்றும் வரையறுக்கப்பட்டது.

அதன்படி பிரதமர் ஜெயவர்த்தன ஜனாதிபதியானார்.

மக்கள் பிரதிநிதிகளினால் முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்டவர், 1982 இல் மக்களினாலேயே நேரடியாக இரண்டாம் முறை ஜனாதிபதியாகத் தெரிவானார்.

50 சத வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகளினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி எனும் பெருமை திரு.ஜெயவர்த்தனவுக்குக் கிடைத்தது.

அந்தப் பெருமை இனி வரப்போகும் ஜனாதிபதிக்குக் கிடைக்குமா?

திரு ஜெயவர்த்தனவுடன் அந்தப் 'பெருமை, போய் விடுமா?

அல்லது திரு. ஜெயவர்த்தன புதிய 'பெருமை' ஒன்றை நிலைநாட்டப் போகின்றாரா?

பதினான்காவது திருத்தம் என்ற பேச்சு இக்கேள்விகளை எல்லாம் எழுப்பியுள்ளது.

சுதந்திரம் அடைந்த 40 ஆண்டுகளில் மூன்று அரசமைப்புச் சட்டங்களைப் பெற்ற பெருமை இலங்கைக்குக் கிடைத்தது.

மூன்றாவது அரசமைப்புச்சட்டத்திலோ கடந்த பத்தாண்டுகளில் பதின்மூன்று திருத்தங்கள் இடம்பெற்று விட்டன.

இடம் பெறப்போவதாகக் கூறப்படும் 14 ஆவது திருத்தம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் புதிய முறை பற்றிக் கூறப்போகின்றதாம்.

அது என்ன புதிய முறை?

தேர்தல் கல்லூரிகள் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்வது தான் அந்த முறை.

நேரடி முறையை விரும்பிய யு என் பி. அரசு பின் ஏன் மறைமுகத்

## (உள்ளும் புறமும்)

- குறுமுனி -

தேர்தலை நடத்த விரும்புகின்றது?

எப்படியும் ஜனாதிபதித் தேர்தலை எதிர்வரும் டிசம்பருக்குள் நடத்தி முடிக்க வேண்டும்.

நேரடித் தேர்தல் என்றால் இலங்கை முழுவதும் ஒரே சமயத்தில் நடத்தி முடிக்கப்பட வேண்டும்.

தற்போதைய சூழ்நிலையில் இது சாத்தியப்படாது.

ஆகவே மாகாண சபைகளையும் தற்போதைய நாடாளுமன்றத்தையும் தேர்தல் கல்லூரிகளாக மாற்றி அவற்றின் மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தி முடித்து விட்டால்......

இந்தச் சிந்தனை தான் 14 ஆவது திருத்தத்துக்கான அத்திவாரமோ என்று எண்ண வேண்டியுள்ளது.

புதிய யோசனையின்படி ஒரு ஜனாதிபதியைத் தெரிவு செய்ய சகல மாகாண சபைகளும் இயங்க வேண்டும் என்பது இல்லை.

இயங்கக் கூடிய மாகாண சபைகளின் தேர்தல்களை நடத்துவது; அச்சபைகளின் ஒவ்வொரு உறுப்பினரின் வாக்குக்கான மதிப்பை நிர்ணயிப்பது, நாடாளுமன்ற உறுப்பினரின் வாக்கின் மதிப்பை நிர்ணயிப்பது-அதன் மூலம் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வது- (இந்தியா - இதற்கு உதாரணம்)

அடுத்தது புதிய நாடாளுமன்றப் பொதுத் தேர்தல் 1989 ஆகஸ்டுக்கு முன்னர் நடைபெற வேண்டும்.

ஆகவே ஆட்சியாளருக்குத் தற்போதைய நாடாளுமன்றத்தில் இருக்கும் யானைப்பலத்தைக் கொண்டு ஜனாதிபதி பதவியைத் தீர்மானிப்பது இலகுவாகி விடும் என்பதும் அரசு வட்டாரங்களில் நிலவும் இன்னொரு கருத்து.

பொதுத்தேர்தல், ஜனாதிபதித் தேர்தலைத் தவிர வேறு தேர்தல்களில் கலந்து கொள்ள மாட்டோம் என்று பிடிவாதம் பண்ணும் சுதந்திரக்கட்சியினரையும் வேட்டுக்களில் நாட்டம் கொண்டுள்ள தென் இலங்கைத் தீவிரவாதிகளையும் இனி நடக்கப்போகும் மாகாண சபைத் தேர்தல்களில் கலந்து கொள்ளச் செய்யும் தந்திரோபாயமோ உத்தேச அரசமைப்புச் சட்டத் திருத்தத்தின் நோக்கம் என்றும் ஊகிக்கவேண்டியுள்ளது.

எப்படி என்று எண்ணுகின்றீர்களா?

தேர்தல் கல்லூரிகள் மூலம் யு. என். பி வேட்பாளர் ஜனாதிபதிப் பதவியை அடையப் பெறப் போகும் வாக்குப் பலத்தைக் குறைக்க வேண்டுமானால் எதிர்க் கட்சியினர் மாகாண சபைகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற நிலையைப் புதிய தேர்தல் கல்லூரி முறை ஏற்படுத்துகின்றது.

அடுத்த மாதம் 28இல் நடக்கப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள நான்கு மாகாணசபைத் தேர்தல் முடிவுகளைப் பொறுத்துத்தான் உத்தேச அரசமைப்புத் திருத்தச் சட்டம் வருமா? அல்லது அதற்கு முன் வருமா?

அதற்கான பதில், தேர்தலில் இருந்து ஒதுங்கியுள்ள சுதந்திரக்கட்சி மற்றும் கட்சிகளின் போக்கில்தான் தங்கியுள்ளது.

ஆளும் கட்சியைத் தோற்கடிக்க வேண்டும் என்ற பொது நோக்குடன் ஐக்கிய சோஷலிச முன்னணியை அரசு எதிர்ப்புச்சக்திகள் வேற்றுமையை மறந்து ஆதரித்தால்......

அப்படியான ஒருமாற்றம் ஏற்பட்டால், தென் இலங்கையில் நடைபெற வேண்டிய ஏனைய மாகாணசபைகளின் தேர்தல்களில் சுதந்திரக்கட்சியும் அதன் நேச சக்திகளும் பங்குபற்றி தேர்தல் கல்லூரி மூலம் ஜனாதிபதி பதவியைப் பெறும் யு. என். பியினரின் முயற்சியை முறியடிக்கவேண்டிய நிலை ஏற்படலாம்.

ஆகவே உத்தேச 14ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் என்று உலாவவிடப்பட்ட தகவல், ஒதுங்கி நிற்கும் சுதந்திரக் கட்சியைத் தேர்தல் களத்தில்இறங்க வைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையா? அல்லது சர்வசன வாக்கெடுப்பை நடத்தி நாடாளுமன்றத்தின் ஆயுளை நீடித்ததுபோல், தேர்தல் கல்லூரிமுறை மூலம் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிக்கச்செய்யும் ஒருமுயற்சியா?

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

# முடிவில்லாது தொடரும்

# வளைகுடா யுத்தம்

## குடிமக்களைக் கொல்வதில் போட்டா போட்டி

இரண்டு நாள் யுத்த நிறுத்தத்துக்குப் பின்னர் ஈரான் - ஈராக் மோதல் மீண்டும் உக்கிரம் அடைந்திருக்கிறது. அர்த்தம் இல்லாதது என்று பெரும்பாலான உலக நாடுகளினால் வர்ணிக்கப்படும் இந்த யுத்தத்தில் முதல் தடவையாக தரையில் இருந்து தரைக்குப் பாயும் 300 முதல் 400 மைல் தூரம் சென்று தாக்கும் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மற்றும் ஓர் உலக மகாயுத்தம் மூளுமானால் உலகின் கதி எப்படி இருக்கும் என்பதற்கு இது ஓர் அபாய எச்சரிக்கை ஆகும்.

1980ஆம் ஆண்டில் ஆரம்பமாகி ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் இந்த யுத்தத்தில் கடந்த இரு வாரங்களாக நகரங்களுக்கு இடையிலான பாரிய ஏவுகணை யுத்தம் ஒன்று ஆரம்பித்திருந்தது. ஈராக்கின் தலைநகரான பாக்தாத் மீதும் ஈரானின் தலைநகரான தெஹ்ரான் மீதும் நூற்றுக்கு மேற்பட்ட ஏவுகணைகள் இருதரப்பு நடுகளாலும் ஏவப்பட்டிருந்தன. மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளை இந்த ஏவுகணைகள் தாக்கிய போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருந்தனர்.

## உலக உலா

ஏன்.பி.சீலன்

உலக நாடுகளின் நிர்ப்பந்தங்களை அடுத்து கடந்த வெள்ளிக்கிழமை ஈரான் ஏவுகணைகளைத் தாக்குதல் நிறுத்தம் பற்றி அறிவித்திருந்தது.

ஆனால் இந்த தாக்குதல் நிறுத்தம் இரு தினங்கள் மட்டுமே நீடித்தது.

எல்லைப் பகுதிகளைத் தாக்கக்கூடாது என்ற தனது நிபந்தனையை ஈரான் மீறி விட்டதாகக் கூறி ஈராக் மீண்டும் ஈரானின் நகரங்கள் மீது ஏவுகணைத் தாக்குதலை தற்போது ஆரம்பித்துள்ளது.

எல்லைப்பகுதியில்தான் மேற்கொண்ட பாரிய தாக்குதலில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஈராக் படையினர் கொல்லப்பட்டிருப்பதாக ஈரான் அறிவித்திருக்கிறது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தையும் மீறி நடைபெற்று வரும் இந்த யுத்தம் வளைகுடாவின் ஏனைய பகுதிகளுக்கும்பரவும் ஆபத்து தற்போது உருவாகி வருவதாக அவதானிகள் கருதுகின்றனர். குவைத் மீதான தாக்குதல் எதுவும் நடத்தப் படக்கூடாது என்று ஈராக் ஏற்கனவே எச்சரித்திருக்கிறது.

வளைகுடா யுத்தத்தில் ஈராக்கை ஆதரிக்கும் நாடுகளில் குவைத்தும் ஒன்று. கடந்த வருடம் குவைத்தின் எல்லைப் பகுதிகளை ஈரானிய ஏவுகணைகள் தாக்கியிருந்தன;

இதனால்தான் குவைத்தும் அங்கம்வகிக்கும் 6 அங்கத்துவ நாடுகள்கொண்ட வளைகுடா கோர்ப்பரேஷன் கவுன்சில் (G.C.C) சவூதியின் றியாத் நகரில் கூட்டப்பட்டிருக்கிறது.

இந்தக் கவுன்ஸிலின் தலைமை நாடான சவூதி அரேபியா ஐ நா. பாதுகாப்புச்சபைத் தீர்மானத்துக்கு இணங்க ஈரானும் - ஈராக்கும் யுத்தத்தை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி வருகிறது.

பாஹ்றைன். காட்டர், ஓமான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகியவை இந்த கவுன்ஸிலின் ஏனைய அங்கத்துவ நாடுகள்.

ஈரானிய புரட்சித் தலைவர் ஆயதுல்லா கொமேனியும் தற்போதைய ஈராக் தலைமையும் இருக்கும் வரை வளைகுடா யுத்தத்துக்கு நிரந்தரத்தீர்வு காண்பது சிரமம் என்று நம்பப்படுகிறது.

ஏதாவது ஒரு தீர்வு ஏற்பட்டாலும் அது [illegible] காலிகமானதாகவே இருக்கும்.






★ ஷப்ரு ★

யூனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

நிலையான முதலீட்டுத்திட்டம்

✯ குறைந்த வைப்புத் தொகை 1000/-
✯ மாதாந்த வட்டி பெற குறைந்த வைப்புத் தொகை 5000/-




| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | ---- | 14 விதம் |
| 6 மாதங்கள் | ---- | 16 விதம் |
| 12 மாதங்கள் | 16 விதம் | 17 விதம் |
| 24 மாதங்கள் | 17 விதம் | 18 விதம் |
| 36 மாதங்கள் | 18 விதம் | ---- |

உங்கள் வசதிக்கேற்ப பின்வரும் வழிகளில் வட்டியினைப் பெற்றுக்கொள்ளலாம்:-
✯ பணமாக ✯ காசோலையாக ✯ வங்கிக் கணக்கூடாக

நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,425,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,366 | 100,577,492 |
| வங்கிக் கடன்கள் | 1,791,516 | 8,283,816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்திய பின் தேறிய லாபம் பங்காளருக்கான சலுகைகள் | 1,356,206 | 1,372,825 | 2,330,012 |

இயக்குநர் சபை

✶ பாலசுப்பிரமணியம், A. I. B (Lon)
✶ ஜே. டி நவரட்ணம், A. I. B. (Lon)
✶ ஸீ. பி. ஈ. கருணாரட்ண, (சட்டத்தரணி)
✶ ஆர். பாலசுப்பிரமணியம்.
✶ ஓ. சி. எம் ஹசன்பாரி, B.A.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

ஷப்ரு நிதி நிறுவனம்

61 நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு - 4. தொலைபேசி: 589310, 500576

யாழ் முகவர், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 22073


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மில்க்வைற் ஆதரவாளர்களுக்கு
பணிவான வேண்டுகோள்!

உற்பத்திப் பொருட்களின் விலையேற்றத்தினால், எங்கள் தயாரிப்பான, நீம் சுகாதாரத் தூபம், ஒலிவ் ஸ்நானப் பவுடர்களின் விலையைச் சிறிது கூட்டவேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளோம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றோம்.

புதிய விலை - ஒரு பக்கட்:-
75 சதம் மட்டுமே!

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

# சஞ்சீவி

19 - 03 - 1988 சனிக்கிழமை

காலம் பெறுமதியானது

துரித சலவைக்கும், பளிச்சிடும்வெண்மைக்கும்
"மில்க்வைற் சலவைப்பவுடர்"
வாங்கி உபயோகியுங்கள்.
பாவித்த 25 உறைகளை அனுப்பி அழகிய
"கைலேஞ்சி"
ஒன்றை பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் - யாழ்ப்பாணம்

## இணைப்புக்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 19

யாழ். பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவின் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

காலை 10 மணிக்கு யாழ் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் கூட்டம் ஆரம்பமாகும். (ஒ-க)

## லக்ஷ்மி பூரி ஜனாதிபதி சந்திப்பு

கொழும்பு, மார்ச் 19

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் அதிகாரி திருமதி லஷ்மி பூரி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்தார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது. கிழக்கு மாகாணத்தில் இடம் பெற்றுவரும் அண்மைக்கால சம்பவங்கள் பற்றி இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## விவசாயிகளின் பென்ஷன் இரட்டிப்பாகும்

கொழும்பு, மார்ச் 20

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பென்ஷன் தொகை விரைவில் இரட்டிப்பாக்கப்படவுள்ளது.

இதற்காக கூடுதல் பிரிமியம் தொகையைச் செலுத்துமாறு விவசாயிகள் நிர்ப்பந்திக்கப்படமாட்டார்கள் என்று விவசாய அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் சொன்னார்.

கடந்த ஆண்டு 16 000 விவசாயிகள் இப்பென்ஷன் திட்டத்தில் சேர்ந்தனர். (ஒ-எ)

# வடக்கு கிழக்கு இணைப்பை வலியுறுத்திய கல்விமான்

## சந்திரசேகரத்துக்கு அஞ்சலி

பலாலி, மார்ச் 19

தனது மாணவப் பருவம் தொட்டு, பல்கலைக்கழக விரிவுரையாளராக, பேராசிரியராக -துறைத் தலைவராக இருந்து இனரீதியாக ஒடுக்கப்படும் மக்களின் குரலை உயர ஒலித்து வடக்கு கிழக்கு இணைப்பின் முக்கியத்துவத்தை ஆழ வலியுறுத்தியும் வந்த ஒரு பெரும் கல்விமான் இன்று எம் மத்தியில் இல்லை

யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற யாழ் கல்வித் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் சந்திரசேகரம் இரங்கல் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் சு. வித்தியானந்தன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கல்வியியற் புலத் தலைவர் திரு. வ. ஆறுமுகத்தின் தலைமையில் கல்விக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

பேராதனைப் பல்கலைக்கழகத்திலும், கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் கல்வித்துறையில் தமிழப் பிரிவின் வளர்ச்சிக்கு உரம் கொடுத்து வந்த பேராசிரியர் அவர்கள் தமிழ்த்துறை மூடப்பட்டதும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறையைக் கொண்டு வர அயராது உழைத்து வெற்றி கண்டார்.

அவர் கல்வித்துறையை பீடமாக்க முயன்று வந்ததும் குறிப்பிடத்தக்கது

யாழ்ப்பாணத்தில் கல்வித்துறையை ஏற்படுத்தி பல கல்வித்துறை முதுமாணிப் பட்டதாரிகளை உருவாக்கி ஒரு புதிய மாணவப் பரம்பரையை உருவாக்கினார்.

யாழ்ப்பாணக் கல்வித்தரம் ஆசியாவில் உயர்ந்த நிலையில் உள்ள தென்ற பாரம்பரியம் தொடர நாம் தொடர்ந்து தியாகம் செய்து பணிபுரிவதே நாம் அவருக்குச் செய்யும் கைம்மாறாகும். இப்படி அவர் கூறினார்.

கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் ந. பாலகிருஷ்ணன், உட்படப் பலர் இரங்கலுரை நிகழ்த்தினர். (ஓ-119)

## நாளை-----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வேலணை யாழ்ப்பாணம், சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய யாழ்ப்பாணப் பிரதேசத்தின் சகல மின் அத்தியட்சகர் பிரிவுகளுக்கும் மின் விநியோகம் தடைப்படும்.

எனினும் யாழ் பெரியாஸ்பத்திரிக்கும், பஸ் நிலையப் பகுதிக்கும் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-9)

## ராஜீவுக்கு . . .

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

நடக்கவில்லை.

ஒப்பந்தத்தின்படி இலங்கைப் பொலீஸார், ராணுவம் முகாமுக்குள் இருக்கவில்லை. வெளியே நடமாடி தமிழரைக் கைது செய்து வருகின்றனர். இந்த நிலையில் தமிழர் பழைய இடங்களுக்குத் திரும்ப அஞ்சுகின்றனர். இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது

தமிழர் விடுதலைக் கூட்டணி, டெலோ, ஈ என். டி. எல். எப். ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, புளொட் ஆகியன பிரஸ்தாப மகஜரில் கைச்சாத்திட்டுள்ளன.

இதே வேளை மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு இணைப்பு அறிவிக்கப்பட வேண்டும் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும்- இப்படி ஈ.பி. ஆர் எல் எப் தலைவர் கே. பத்மநாபா தெரிவித்தார். (அ-எ)

## இன்று நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மார்ச்19

''திங்கள் எரிகின்றன'' நூல் அறிமுக விழா இன்று தெல்லிப்பளையில் நடைபெறும்.

பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பளை பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் விழா ஆரம்பமாகும்

பேராசிரியர் சு. வித்தியானந்தன் விழாவிற்குத் தலைமை வகிப்பார். (ஒ-க)

## காங்கேசன் முகாமிலுள்ள 32 மாணவர்களையும் அன்னையர் முன்னணியினர் சந்தித்துப் பேசினர்

யாழ்ப்பாணம், மார்ச் 19

காங்கேசன்துறை இந்திய அமைதிப்படை முகாமில் க.பொ.த (சாதாரண) பரீட்சையில் தோற்றவேண்டிய 32 மாணவர்களைத் தாம் சென்று சந்தித்ததாக யாழ் அன்னையர் முன்னணியினர் தெரிவித்தனர்:

இம்மாணவர்கள் முகாமில் படிப்பதற்கான புத்தகங்கள் (மூல நூல்கள்) எதுவும் அவர்களிடம் இல்லையென்றும் —

பொதுமக்கள் அவற்றைத் தந்துதவினால் தாம் அவற்றை அவர்களுக்கு வழங்க முடியுமென்றும் அன்னையர் முன்னணித் தலைவி திருமதி சேம்ஸ் குணநாயகம் தெரிவித்தார். (ஒ 5)

## வர்த்தகரின் வீட்டில் கொள்ளை

கரவெட்டி, மார்ச் 19

கூடத்தனையில் பிரபல வர்த்தகர் ஒருவரின் வீட்டில் சுமார் 20 பேரைக் கொண்ட ஆயுதம் தரித்த கோஷ்டி ஒன்று ரூபா 30 000 பெறுமதியான, நகைகள் உடைகள், பணம் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளது (ஒ-70)

## இரவுநேரந்தில் ..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

வில் மீன் பிடிப்பதற்கான 'பாஸ்' களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அமைதிப் படையின் தலைமை அலுவலகத்தில் இருந்து பத்திரிகைகளுக்கு நேற்று விடுக்கப்பட்ட செய்திக் குறிப்பொன்றில் மேற்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ஒ)

## அமைதிப் படையும் .-

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய அரசு என்றும் தயாராக உள்ளது

''ஆனால் விடுதலைப் புலிகள் முதலில் ஆயுதங்களை ஒப்படைத்து, ஒப்பந்தத்தை ஏற்க வேண்டும்.

''இவை குறித்து திட்டவட்டமாக விடுதலைப் புலிகள் அறிவிப்பின் நாளையே பேச்சுக்களை ஆரம்பிக்க முடியும்''

பிரபாவின் கடிதம்

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் அண்மையில் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

அக்கடிதத்தில் புதிதாக ஒன்றுமே தெரிவிக்கப்படவில்லை

அமைச்சர் காமினி திஸநாயக்காவுடன் இந்திய-இலங்கை ஒப்பந்தம் பற்றியே பேசப்பட்டது புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது பற்றி நாம் அவருடன் பேசவில்லை அப்படிப் பேசப்பட்டதாகக் கூறப்படுவது தவறு.

இப்படி அமைச்சர் நட்வர்சிங் தனது பேச்சில் சொன்னார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமைச்சரின் பேச்சின்போது அடிக்கடி குறுக்கிட்டனர்.

குறுக்கீடுகளுக்கு அமைச்சர் பதிலளிக்கையில்,

''இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல் நடத்துவதைத் தவிர இலங்கைப் பிரச்சினைக்கு வேறு வழியில் தீர்வு காண முடியாது.

''அமைதியை ஏற்படுத்திய பின்னர் ஒரு நாள் கூட இந்திய அமைதிப் படை இலங்கையில் இருக்காது' — என்று சொன்னார். (ஒ-எ)

## ஆஸ்பத்திரி---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அசம்பாவிதத்தினை அடுத்து யாழ் ஆஸ்பத்திரி படையினரின் சுட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது ... (ஒ-10)

## 147 ஆம் நினைவஞ்சலி



### தருமலிங்கம் – கணேசலிங்கம்

தாயின் மடியில்: 30 - 8 - 1939 — இறைவன் அடியில்: 24 - 10 - 1987

அன்பின் உருவாயும் பாசத்தின் உறைவிடமாயும் திகழ்ந்த எம் அருஞ் செல்வம் கணேசலிங்கம் அகால மரண மெய்தி திங்களோர் ஆறு கழிந்தது.

ஆண்டு பல கழிந்தாலும் நீங்குமோ நின்னுருவம் நெஞ்சை விட்டு

அன்னாரின் மறைவால் துயருறும்.
தாய் சகோதர - சகோதரிகள்,
உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்
அவரது
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.
(2068)

## 29ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் சபாபதி சுந்தரம்

தோற்றம்: 27 - 6 - 1925 மறைவு: 21 - 2 - 1988

உரிமையாளர்: சுந்தரம் அன் சன்ஸ் (இந்திரபவான் கூல்பார், சுன்னாகம்)

அமரத்துவம் எய்திய எங்கள் அன்புக்குரிய குடும்பத்தவரின் இறுதிக்கிரியைகளில் கலந்து அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு ஏழாலை மேற்கில் உள்ள 'இந்திர பவனம்'' என்னும் எமது இல்லத்தில் 20 - 03 - 1988 ஞாயிறு நடைபெற இருக்கும் வீட்டுக் கிரியைகளிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கதிரவேலு
கனகரத்தினம்
(இராசையா)

மலர்வு:
06 - 03 - 1923

உதிர்வு:
11 – 04 – 1986

பண்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய் விளங்கிய நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து ஈராண்டு சென்றாலும் உங்கள் நினைவு எம்மை விட்டுப் பிரியாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்புமனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்,
நண்பர்கள்

மல்லாகம். [1973]

## நீத்தார் பட்டியல்

### செல்வி. மேரி அன்னரத்தினம் குணநாயகம்

முன்னைநாள் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி மேரி அன்னரத்தினம் குணநாயகம் 18. 3. 88 வெள்ளிக்கிழமை காலை காலமானார். அன்னார் திருமதி S. குணநாயகத்தின் அன்பு மகளும், திரு G. R குணநாயகம், திரு J R குணநாயகம், திருமதி ரூபி டானியேல் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அவரின் நல்லடக்க ஆராதனை 19.3.88 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பரி யோவான் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்

தகவல்:-
திருமதி. S. குணநாயகம்
23, கச்சேரி நல்லூர் வீதி,
சுண்டிக்குளி. (1991)

## 180 ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில்
17- 09- 1971

ஆள்பவன் அழிப்பு
24- 10- 1987

### செல்வன் ராஜரட்ணம் லக்ஸ்மணன் (மோகன்)

(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

முந்தி தவம் கிடந்து முன்னூறு நாட் சுமந்து அந்தி பகலாய் ஆதரித்த பெற்றோரை மறந்து பாசமுடன் ஒன்றிணைந்த சகோதரரைப் பிரிந்து ஊரும் உறவும் போற்றும் உற்றாரை விட்டு ஆசையுடன் அன்பு வைத்த அயலவரைத் துறந்து இன்பமுடன் இனிதுரைத்த தோழரை மறந்து வாழ்வது மாயம் என்னும் தத்துவத்தை உணர்ந்து மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் விரைந்து விட்ட எம் செல்வனின் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

உன் பிரிவால் துன்புறும்
அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா,
அக்காமார்கள், அத்தான், அண்ணன்மார்கள்,
மருமகன், உறவினர்கள், நண்பர்கள்.

முருகன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். 2060

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2. இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19-03-1988இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 292/2, Navalar Road, Jaffna on Saturday, 19th March 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org